# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
# திருநெல்வேலி.
# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY
# TIRUNELVELI

## தொலைநெறி தொடர்கல்வி இயக்கம்
## DIRECTORATE OF DISTANCE & CONTINUING EDUCATION
## TIRUNELVELI

# தொல்காப்பியம் - பொருளதிகாரம்

(பின் 4 இயல்கள்)

இளங்கலை தமிழ்

மூன்றாமாண்டு ஆறாம் பருவம்

முனைவர் த.க.ஜாஸ்மின் சுதா
உதவிப் பேராசிரியர்
தமிழியல்துறை

2025– 2026

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# திருநெல்வேலி.

## பொருளடக்கம்


அலகு – 1 பக். 4 - 21

**பொருளியல் - பகுதி ஒன்று**

தொடர் மொழியில் பொருள் உணர்த்தல் - அசை திரிந்த இசையா – ஒருசால் காமபொருண்மை பற்றி தலைமக்கள் கூற்று நிகழ்த்துதல் - களவுக்கால இடர்பாடுகள் - உடல்மெலிவு – பசலை நோய் - அறத்தோடு நிற்றல் - உயிர், நாண், மடன் - பால்கெழுகிளவி – நால்வர் மரபுகள் - களவுதலைமகனின் இயல்பு – எல்லா உயிர்க்கும் இன்பம் - பரத்தையர் பிரிவுக்கு உரியர்.

அலகு – 2 பக். 21 - 36

**பொருளியல் - பகுதி இரண்டு**

வரைவிடை வைத்து பொருளீட்ட செல்லுதல் - பிரிவிடை ஆற்றாமை – தலைவி தோழிநட்புறவு – பெண்டிர்க்குரிய இயல்புகள் - தலைமக்கள் ஒருவரை ஒருவர் புகழ்தல் - எழுத்துசொல் மரபு – உள்ளுறை வகைகள் - சுட்டுநகை சிறப்பு உவமம் - இறைச்சி இலக்கணம் - வாயில் கிளவி வெளிப்பட கிளத்தல் - உயிர்மொழிக் கிழவி – காட்டலாகாப் பொருள்கள்.

அலகு – 3 பக். 36 - 69

**மெய்பாட்டியல்**

மெய்பாடு – பெயர்க்காரணம் - எண்வகை மெய்ப்பாடுகள் - மெய்ப்பாடுகள் தோன்றுவதற்குரிய நிலைக்களன்கள் - நகை, அழுகை, இளிவரல், அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவான மெய்ப்பாடுகள் - அகத்திற்குரிய மெய்ப்பாடுகள் - காட்சி, வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல், ஆக்கம், செப்பல், நாணுவரை இறத்தல் ஆகிய ஆறு அவத்தைகள் பற்றிய மெய்ப்பாடுகள் - கைக்கிளைக்குரிய மெய்ப்பாடுகள் - புகுமுகம் புரிதல் முதலியன – அழிவில் கூட்டமெய்ப்பாடுகள் - எட்டு அழிவில் கூட்டத்திற்குரிய பொருள்கள் - பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகள் - தலைமக்களின் ஒப்புமை குணங்கள் - தலைமக்களுக்கு ஆகாத குணங்கள் - தொல்காப்பிய மெய்ப்பாட்டியலும் சமஸ்கிருத இரசக்கோட்பாடும் ஒப்பீடு.

அலகு – 4 பக். 69 - 91

**உவமையியல்**

உவமை வகைகள் - வினைபயன், மெய், உவகை தோன்றுவதற்குகுரிய நிலைக்கலன்கள் - சிறப்பு, நலன், காதல், வலிகிழக்கிடும் பொருள் - உவமமரபுகள் - முதல் சினைமரபு – அளவில் பெருமை, சிறுமை மெய்ப்பாடுகள், உவமைக் கூறுதற்கு உரியோர் - தலைவன், தலைவி, தோழி, செவிலி, உவமஉருபுகள், வினைபயன், மெய், உரு – உவமபோலி – உவமவகைகள் - சுட்டிக்கூறா உவமை – பொருளே உவமம் செய்தல் - தடுமாறுவரல் உவமை – பயனிலை உவமை – ஒரீஇக்கூறல் உவமை – உவமைத்தன்மை – உவமை அடுக்கிவரல் உவமை – தண்டியலங்கார ஒப்புமை.

**அலகு – 5** **பக். 91 - 120**

**மரபியல்**

மரபு சார்ந்த பெயர்கள் - இளமைப் பெயர்கள் - ஆண்பாற் பெயர்கள் - பெண்பாற் பெயர்கள் - அறிவு வகைபாடு – நால்வகை வருணத்தார் மரபுகள் - நூல் இலக்கணம் - சூத்திர வகைகள் - காண்டிகையுரை – பத்துவகையான குற்றங்கள் - 32வகை உத்திகள்.

அலகு-1

# 1. பொருளியல்

இவ்வொத்து என்ன பெயர்த்தோ எனின், பொருளியல் என்னும் பெயர்த்து: பொருளியல்பு உணர்த்தினமையாற் பெற்ற பெயர். என்னை பொருளியல்பு உணர்த்தியவாறு எனின் மேற் சொல்லப் பட்ட ஒத்துக்களினும் இனிச் சொல்லும் ஒத்துக்களினும் வரும் பொருளினது தன்மை யுணர்த்துதலிற் பொருளியல் உணர்த்திற்றாம்.

இதனை 'ஒழிபியல்' எனினும் இழுக்காது, அகப்பொருள் புறப் பொருள் என்பன இரண்டு பொருண்மையினும் எஞ்சி நின்றன கூறினமையின்

**193. இசைதிரிந் திசைப்பினும் இயையுமன் பொருளே**
**அசைதிரிந் திசையா என்மனார் புலவர்.**

என்பது சூத்திரம்.

இதன் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின், தொடர் மொழிக்கட் பொருள் இயையுமாறு உணர்த்திற்று.

(இ-ள்) இசை திரிந்து ஒலிப்பினும் பொருள் இயையும்: அவ்வழி அச்சொற்கு அங்கமாகிய அசை திரிந்தொலியா என்றவாறு.

என்றது சொல்லொடு சொல் தொடர்வுபடும் வாய்பாட்டால் தொடராது பிறிதொரு வாய்பாட்டால் தொடுப்பினும் பொருட் டொடர்பு உண்டாயிற் பொருள் இயையும்வழி அசைச் சொற்கள் திரியாது நின்ற நிலையே பொருள்படுமாறாயிற்று.

**உதாரணம்:**

**"கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்**
**தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்**
**மார்பி னஃதே மையில் நுண்ஞாண்**
**நுதல திமையா நாட்டம் இகலட்டுக்**
**கையது கணிச்சியொடு மழுவே மூவாய்**
**வேலும் உண்டத் தோலா தோற்கே**
**ஊர்ந்த தேறே சேர்ந்தோள் உமையே**
**செவ்வான் அன்ன மேனி அவ்வான்**
**இலங்குபிறை அன்ன விலங்குவால் வையெயிற்று எரியகைந்**
**தன்ன அவிர்ந்துவிளங்கு புரிசடை**
**முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி**
**மூவா அமரரு முனிவரும் பிறரும்**
**யாவரும் அறியாத் தொன்முறை மரபின்**
**வரிகிளர் வயமான் உரிவை தைஇய**
**யாழ்கெழு மணிமிடற் றந்தணன்**

**தாவில் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே”** (அகம். கடவுள் வாழ்த்து)

இதற்குக் கொன்றையாலமைந்த தாரினனாய் மாலையனாய்க் கண்ணியனாய் நுண் ஞாண் மார்பினனாய் இமையா நாட்டத்து நுத விளனாய்க் கணிச்சியு மழுவு மூவாய் வேலும் ஏந்திய கையினனாய் யாவர்க்குந் தோலாதோனுமாய் ஏற்றினையு மூர்ந்து உமையாளையுஞ் சேர்ந்து செவ்வானன்ன மேனியையும் பிறைபோன்ற எயிற்றினையும் சரிபோன்ற சடையினையும் திங்களொடு சுடருஞ் சென்னியையும் உடையனாய் மூவாவமரர் முதலிய யாவரு மறியாத் தொன்முறை மரபினனாய்ப் புலியதளையும் உடுத்த யாழ்கெழு மணிமிடற்றந்தணனது சிவானுபூதியிற் பேருலகந் தங்கிற்று எனப் பொருள் உரைக்குங் காலத்து, அதன்கண் இடைக்கிடந்த சொற்கள் முன்னொடு பின் வாய்பாடுகள் சேராவன்றே; அவ்வழி அவ்வாய்பாட்டாற் போந்த பொருளுரைப்பச் சேர்ந்தவாறும் இசைதிரித்து இசைத்தவாறும் இவை தத்தம் நிலையிற் குலையாமை நின்று பொருள் பட்டவாறுங் கண்டு கொள்ளலாம்.

**“ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்**
**ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.”** (குறள். 662)

இதுவும் இரண்டென்னுந் தொகைக்கு ‘ஊறொராமை’ எனப் பொருள் உரைத்தல் வேண்டும்.

194. **நோயும் இன்பமும் இருவகை நிலையிற்**
**காமம் கண்ணிய மரபிடை தெரிய**
**எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய**
**உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்**
**மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்துஞ்**
**சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்**
**செய்யா மரபில் தொழிற்படுத் தடக்கியும்**
**அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்**
**அறிவும் புலனும் வேறுபட நிறீஇ**
**இருபெயர் மூன்றும் உரிய வாக**
**உவம வாயிற் படுத்தலும் உவமம்**
**ஒன்றிடத் திருவர்க்கும் உரியபாற் கிளவி.**

என் - எனின் ஒருசார் காமப் பொருண்மை பற்றி நிகழ்வதொரு கிளவி யுணர்த்திற்று.

(இ-ள்) நோயும் இன்பமும் இருவகை நிலையிற் காமங் கண்ணிய மரபிடை தெரிய எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய உறுப்புடையது போல் உணர்வுடையதுபோல் மறுத்துரைப்பது போல் நெஞ்சொடு புணர்த்தும் என்பது (துன்பமும் இன்பமும் ஆகிய இருவரை நிலையினையுடைய காமத்தைக் குறித்த மரபு இடையீடுபடுதலால் மெய்ப்பரிவு எட்டாகிய எட்டன் பகுதியும் விளங்கப் பொருத்திய உறுப்புடையது போலவும் உணர்வுடையது போலவும் மறுத்துரைப் பது போலவும் நெஞ்சொடு புணர்த்துக் கூறியும் என்றவாறு)

‘காமங்கண்ணிய’ என்றதனான் அகப்பொருளாகிய காமமும் புறப்பொருளாகிய காமமும் கொள்ளப்படும் ‘இடைதெரிய என்பதனை,

**“...............................இன்பம்**
**இடைதெரிந் தின்னாமை நோக்கி மனையாறு**
**அடைவொழிந்தார் ஆன்றமைந் தார்”** (நாலடி 54)

என்றாற் போலக் கொள்க. ‘தெரிய’ என்னும் செயவெனெச்சம் ஏதுப் பொருண்மை குறித்துநின்றது. மெய்ப்பாடு எட்டாவன:- நகை அழுகை, உவகை, இளிவரல், அச்சம், பெருமிதம், மருட்கை வெகுளி; இவற்றின் பகுதி மெய்ப்பாட்டியலுட் காண்க இம் மெய்ப் பாடு உறுப்புடையதுபோலச் சொல்லப்பட்ட நெஞ்சின்கட் புலப் பட என்றவாறு.

சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச் செய்யா மரபிற் றொழிற் படுத்தடக்கியும் என்பது - (சொல்லாத மரபினையுடையவற்றொடு கெழுமி அவை செய்யாத மரபை யாண்டுப் படுத்தியவற்றையும் நெஞ்சினைப்போல அடக்கியும் என்றவாறு.

சொல்லாமரபின ஆவன - புள்ளும் மாவும் மரனும் கடலும் காளலும் முதலாயின. செய்யா மரபாவன தூதாச் சேறலும் வருதலும் உளபோலக் கூறும் அவைபோல்வனவும் பிறவும்.

அவரவருறுபிணி தமபோற் போற்றியும் என்பது - யாவர் சிலர் யாதொரு பிணியுற்றார் அவருற்ற பிணியைத் தாமுற்ற பிணிபோலச் சேர்த்தியும் என்றவாறு.

‘அவரவர்’ என்பது உயர்திணையாய்க் கூறினும் இருதிணையும் கொள்ளப்படும்.

**“ஒருபாற் கிளவி ஏனைப்பாற் கண்ணும்**
**வருவகை தானே வழக்கென மொழிப”** **(பொருளியல்.27)**
என்பதனான்,

அறிவும் புலனும் வேறுபட நிறீஇ இருபெயர் மூன்றும் உரிய வாக வுவம வாயிற் படுத்தலும் உவமம் ஒன்றிடத்து என்பது அறி வையும் அறியப்படும் பொருளையும் வேறுபட நிறுத்தி இருவகைப் பட்ட பெயரும் மூவகைப்பட்ட பொருட்கும் உரியவாக உவமம் பொருந்துமிடத்து உவமவாயிற் படுத்தலும் என்றவாறு.

வேறுபட நிறுத்தலாவது தத்தம் நிலைமை யொழிய வென்ற வாறு இருபெயராவது உவமைப்பெயரும் உவமிக்கும் பெயரும் மூன்றும் உரியவாகும் என்பது - தொழிலும் பண்பும் பயனும் 'உவமம் ஒன்றிடத்து’ என்றதனை மொழி மாற்றுக

இருவர்க்கும் உரியபாற் கிளவி என்பது - தலைமகற்குத் தலை மகட்கும் உரிய வொரு கூற்றுக் கிளவி என்றவாறு.
அவற்றுள் நெஞ்சொடு புணர்த்தற்கு உதாரணம்:

**“கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்**
**பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்**
**தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ**
**நாணொடு மிடைந்த கற்பின் வாணுதல்**
**அந்தீங் கிளவிக் குறுமகள்**

மென்தோள் பெறநசைஇச் சென்றஎன் நெஞ்சே"  (அகம் -9)

என்பது உறுப்புடையதுபோல உவகைபற்றி வந்தது.

"சென்றதுகொல் போந்ததுகொல் செவ்வி பெறுந்துணையும்
நின்றதுகொல் நேர்மருங்கிற் கையூன்றி - முன்றில்
முழங்குங் கடாயானை மொய்ம்மலர்த்தார் மாறற்கு
உழந்துபின் சென்றஎன் நெஞ்சு."  (முத்தொள்ளாயிரம்)

இ∴து, அவலம்பற்றி நெஞ்சினை உறுப்புடையதுபோற் கூறிய பெண்பாற் கூற்று.

"உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சஞ்
செல்லல் தீர்கஞ் செல்வா மென்னும்" (நற்றிணை 284)

என்றவழி நெஞ்சு உணர்வுடையது போல் இளிவரல் பற்றிவந்த தலைமகன் கூற்று.

"குறுநிலைக் குரவின் சிறுநனை நறுவீ
வண்டுதரு நாற்றம் வளிகலந் தீயக்
கண்களி பெறூஉங் கவின்பெறு காலை
யெல்வளை நெகிழ்த்தோற் கல்ல லுறீஇயர்
சென்ற நெஞ்சம் செய்வினைக் குசாவாய்
ஒருங்குவரல் நசையொடு வருந்துங் கொல்லோ
அருளா னாகலின் அழிந்திவன் வந்து
தொன்னலன் இழந்தஎம் பொன்னிறம் நோக்கி
ஏதி லாட்டி இவளெனப்
போயின்று கொல்லோ நோதலை மணந்தே." (நற்றிணை56)

இது, நெஞ்சு உணர்வுடயது போல் இளிவரல் பற்றி வந்த தலைமகள் கூற்று

"நின்மொழி கொண்டியானோ விடுவனென் மொழிகொண்
டென்னெஞ்சம் ஏவல் செயின்." (கலித்.113)

இது மறுத்துரைப்பது போல் தலைமகன் கூற்று: உவகைபற்றி வந்தது.

"அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவனெஞ்சே
நீயெமக் காகா தது."  (குறள் 1291)

இதுவும் மறுத்துரைப்பதுபோல் தலைவி கூற்று: இளிவரல்பற்றி வந்தது.

"இருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற தின்றே."  (அகம் 128)

இ∴து அச்சம்பற்றி வந்தது. பிறவுமன்ன,

சொல்லாமரபி னவற்றொடு கெழீஇச் செய்யாமரபிற் றொழித் படுத் தடக்கியும் என்பதற்குச் செய்யுள்:-

**“கானலுங் கழறாது கழியுங் கூறாது**
**தேனிமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது**
**ஒருநின் அல்லது பிறிதியாதும் இலனே**
**இருங்கழி மலர்ந்த கண்போல் நெய்தற்**
**கமழிதழ் நாற்றம் அமிழ்தென நசைஇத்**
**தண்டா தூதிய வண்டினங் களிசிறந்து**
**பறைஇய தளருந் துறைவனை நீயே**
**சொல்லல் வேண்டுமால்...” (அகம்.170)**

என்பது தலைவி கூற்று, தலைவன் கூற்று வந்தவழி.

அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியதற்குச் செய்யுள்:-

**“பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கடல்**
**தூவறத் துறந்தனன் துறைவனென் றவன்றிறம்**
**நோய்தெற உழப்பார்கண் இமிழ்தியோ எம்போலக்**
**காதல்செய் தகன்றாரை உடையை யோநீ.” (கலித்.129)**

பிறவுமன்ன

அறிவும் புலனும் வேறுபட நிறீஇ உவமவாயிற் படுத்தற்குச் செய்யுள்:-

**“ஓங்கெழிற் கொம்பர் நடுவி தெனப்புல்லும்**
**காந்தட் கிவருங் கருவிளம் பூக்கொள்ளும்**
**மாந்தளிர்க் கையில் தடவரு மாமயில்**
**பூம்பொழில் நோக்கிப் புகுவன பின்செல்லும்**
**தோளெனச் சென்று துளங்கொளி வேய்தொடும்**
**நீள்கதுப் பி∴தென நீரற் றறல்புகும்**
**வாளொளி முல்லை முகையை முறுவலென்று**
**ஆள்வலி மிக்கான் அ∴தறி கல்லான்.”**

இவை, இடையுங் கையு முதலாகிய உறுப்புக்களைப் பற்றிய உவம வாயிற் படுத்தறியும் அறிவையும் அறியப்படும் பொருளையும் வேறுபட நிறுத்தி உவமம் பொருந்தியவழிக் கூறியவாறு காண்க. வேயைத் தோள் போலுமென்னாது தோளென்று தொட்டமையான் அறியப்படும் பொருள் வேறுபட்டது அதனைத் திரியக் காண்ட லால் அறிவு வேறுபட்டது. பித்துங் களியும் போல் முலையெனச் சென்று வேயைத்தொடும் என்னாது தோளெனச் சென்று வேயைத் கொட்டமையான் உவமம் ஒன்றியவழி உவமவாயிற் படுத்தது.

**95. கனவும் உரித்தால் அவ்விடத் தான.**

என் - எனின் இதுவுங் காமம் இடையீடுபட்டுழி வருவதொரு பொருள் வேறுபாடு உணர்த்திற்று.

(இ-ள்) மேற்கூறியவாற்றால் காமம் இடையீடுபட்டுழிக் கனாக் காண்டலும் உரித் தென்றவாறு.

இது, தலைமகற்குந் தலைமகட்கும் உரித்து.

**"இன்னகை இனைய மாகவும் எம்வயின்**
**ஊடல் யாங்குவந் தன்றென யாழநின்**
**கோடேந்து புருவமொடு குவவுநுதல் நீவி**
**நறுங்கதுப் புளரிய நன்ன ரமையத்து**
**வறுங்கை காட்டிய வாயல் கனவின்**
**ஏற்றேக் கற்ற உலமரல்**
**போற்றா யாகலிற் புலத்தியால் எம்மே"** (அகம் 39)

என்றது தலைவன் கனாக் கண்டு கூறியது.

**"கேட்டிசின் வாழி தோழி அல்கற்**
**பொய்வ லாளன் மெய்யுறல் மரீஇ**
**வாய்த்தரு பொய்க்கனா மருட்ட ஏற்றெழுந்து**
**அமளி தைவந் தனளே குவளை**
**வண்டுபடு மலரிற் சாஅய்த்**
**தமியேன் மன்ற அளியன் யானே."** (குறுந்.- 30)

இது, தலைவி கனாக் கண்டு கூறியது.

**196. தாய்க்கும் உரித்தாற் போக்குடன் கிளப்பின்.**

என் - எனின், நற்றாய்க் குரியதொரு மரபு உணர்த்திற்று
(இ-ள்) மேற்சொல்லப்பட்ட களவு தாய்க்கும் உரித்து, உடன் போக்குக் கிளக்கப்பட்டுழி என்றவாறு.

**உதாரணம்**

**"கண்படை பெறேன் கனவ"** (அகம்.55)

என வரும் வேறும் வந்தவழி.

**197. பால்கெழு கிளவி நால்வர்க்கும்**
**உரித்தே நட்பின் நடக்கை யாங்கலங் கடையே.**

என் - எனின் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதனுதலிற்று.

(இ-ள்) பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்து என்பது பான்மை கெழுமப்பட்ட கிளவி பெண்பாலா ராகிய நால்வர்க்கும் உரித்தென்றவாறு.

நால்வராவார் - தலைவி, தோழி, நற்றாய், செவிலி, அ.ஃதேல் தலை மகளை யொழிய மூவர் என்று அமையாதோ எனின் மேல் தலைமகட்கும் உரித்தென்றார் அவரொடுகூட நால்வர் என வகை யறுத்தல் என்பது.

நட்பி னடக்கை யாங்கலங் கடையே என்பது -நட்பின் வழங்கும் வழக்கல்லாதவிடத்து என்றவாறு.

அ.ஃதாவது, தலைவியொடு தோழி யொழுகும் ஒழுக்கம் அவ்வழியல்லாதவிடத் தென்றவாறு. அவள்மாட்டு நிகழ்வது தலைவன் தோழிக்குணர்த்தாது பிரிந்தவழி என்று கொள்ளப்படும். பாற்கிளவி என்பது பயிலாது வரும் ஒரு கூற்றுச் சொல் எனப் பட்டது. அதனைக் கெழுமிய சொல் பால்கெழு கி வியாயிற்று. ஆண்டு நற்றாய் கூறியதற்குச் செய்யுள்:

**"கருமணற் கிடந்த பாவைஎன்**
**அருமக ளேயென முயங்கினள்அழுமே."** (அகம்.165)

செவிலி கூறியதற்குச் செய்யுள்:-

**"தான்தாயாக் கோங்கம் தளர்ந்து**
**முலைகொடுப்ப ஈன்றாய்நீ பாவை இருங்குரவே - ஈன்றாள்**
**மொழிகாட்டா யாயினும் முள்ளெயிற்றாள் சென்ற**
**வழிகாட்டாய் ஈதென்று வந்து."** (திணைமாலை நூற்.65)

தோழி கூறியதற்குச் செய்யுள் வந்தவழி.

**198. உயிரும் நாணும் மடனும் என்றிவை**
**செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய.**

என் - எனின்.மேற்சொல்லப்பட்ட நால்வர்க்கு முரியதொரு பொருண்மை யுணர்த்திற்று.

(இ-ள்.) உயிரும் நாணும் மடப்பமும் என்று சொல்லப்பட்டவை குற்றந் தீர்ந்த சிறப்பினையுடைய தலைமகட்கும் தோழிக்கும் நற்றாய்க்கும் செவிலிக்கும் உரிய என்றவாறு.

செயிர்தீர் சிறப்பின் என்றமையான் ஏனையோர் போலாது இவர் நால்வரும் ஒரு நீர்மையர் என்று கொள்க. இதனாற் சொல் லியது என்னையெனின், இந்நால்வரும் ஆக்கமுங் கேடும் ஒருவர்மாட்டு வந்துழித் தமக்குற்றபோல் நினைப்பராதலான் ஒருவரையொருவர் இன்றியமையாது ஒருயிர் போல்வர் எனவும், நாணமும் மடனும் நால்வர்க்கும் ஒக்குமாகலான் அவலமாகிய வழியும் வருத்தம் ஒக்கும் எனவும் கூறியவாறு அதற்குச் செய்யுள்:-

**"இவளே நின்னல திலனே யாயுங்**
**குவளை உண்கண் இவளல திலளே**
**யானும் ஆயிடை யேனே**
**மாமலை நாட மறவா தீமே"**

என வரும்.

199. வண்ணந் திரிந்து புலம்புங் காலை
உணர்ந்தது போல உறுப்பினைக் கிழவி
புணர்ந்த வகையாற் புணர்க்கவும் பெறுமே.

என் - எனின் தலைமகட்குரியதொரு பொருளுணர்த்திற்று

(இ-ள்) தலைமகள் வண்ணம் வேறுபட்டுத் தனிமையுறுங் சாலைத் தலைமகன் பிரிவைத் தன் உறுப்புக்கள் உணர்ந்தன போலப் பொருந்தும் வகையாற் கூறவும் பெறும் என்றவாறு.

உம்மை எதிர்மறை,

"தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்" (குறள் 1233)

"தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை" (குறள்.1277)

என வரும்.

200. உடம்பும் உயிரும் வாடியக்
கண்ணும் என்னுற் றனகொல் இவையெனின் அல்லதைக்
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை.

(இ-ள்) இஃது உடம்பும் உயிரும் மெலிந்த இடத்தும் இவை என்னுற்றன எனக் கூறினல்லது, கிழவோன் உள்வழிப் படர்தல் கிழத்திக்கு இல்லை என்றவாறு.

உதாரணம்

"கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து" (குறள்.1173)

எனவும்,

"ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது" (குறள் 1176)

எனவும் வரும்.

201. ஒருசிறை நெஞ்சோ டுசாவுங் காலை
உரிய தாகலும் உண்டென மொழிப.

என் - எனின், மேலதற்கொரு புறனடை உணர்த்திற்று

(இ-ள்) தனித்து நெஞ்சோடு உசாவுங்காலத்துக் கிழவோற் சேர்தல் உரியதாகலும் உண்டு என்றவாறு.

உம்மை எச்சவும்மை யாகலால் தோழியோடு உசாதலு கொள்ளலாம்.

**"கோடீர் இலங்குவளை நெகிழ நாடொறும்**
**பாடில கலிழுங் கண்ணொடு புலம்பி**
**ஈங்கிவண் உறைதலும் உய்குவம் ஆங்கே**
**எழுவினி வாழிய நெஞ்சே"** (குறுந்.11)

என வரும்.

**"பகலே பலருங் காண வாய்வீட்**
**டகல்வயற் படப்பை யவனூர் வினவிச்**
**சென்மோ வாழி தோழி"** (நற்றிணை. 365)

என்றிது தோழியோடு உசாவியது.

**202. தன்வயிற் கரத்தலும் அவள்வயின் வேட்டலும்**
**அன்ன இடங்கள் அல்வழி யெல்லாம்**
**மடனொடு நிற்றல் கடனென மொழிப.**

என் - எனின், தலைமகட் கின்றியமையாத மடன் அழியும் இடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தலைமகன் தனதொழுக்கந் தலைமகள்மாட்டுக் கரந்து உணர்த்தும் வழியும் தலைமகள்மாட்டுப் புணர்ச்சி வேட்கை தோற்றியவழியுமாகிய அத்தன்மைப்பட்ட விடங்களல்லாதவழி யெல்லாம் தலைமகள் மடனொடு நிற்றல் கடன் என்று சொல்லுவர் என்றவாறு.

தன்வயிற் கரந்தவழி மடனழி நின்றதற்குச் செய்யுள்:-

**"முத்தேர் முறுவலாய் நம்வலைப் பட்டதோர்**
**புத்தியானை வந்தது; காண்பான் யான் றங்கினேன்"**

என்றவழி, அதற்குடம்படாது,

**"அவ்வியானை வனப்புடைத் தாகலுங் கேட்டேன்"** (கலித்.97)

என்றவழி, பொய்கூறினான் என்னுங் கருத்தினளாகிக் கூறுதலின் மடனழிதலாயிற்று.

**"கவவுக்கை நெகிழ்ந்தமை போற்றி மதவுநடைச்**
**செவிலி கையென் புதல்வனை நோக்கி**

**நல்லோர்க் கொத்தனிர் நீயிர் இ.்.தோ**
**செல்வர்க் கொத்தனம் யாமென மெல்லவென்**
**மகன்வயிற் பெயர்தந் தேனே”** (அகம். 26)

என்றவழி வேட்கை தணிதலாகாதாள் அது தணியுந்துணையு முயங் காது, கவவுக்கை நெகிழ்ந்ததெனப் பெயர்தல் மடனழிதலாயிற்று.

203. **அறத்தொடு நிற்குங் காலத் தன்றி**
**அறத்தியல் மரபிலள் தோழி என்ப.**

இ.்.து, அறத்தொடு நிற்கு நிலைமரபு உணர்த்திற்று.

(இ-ள்) தலைவி அறத்தொடு நிற்குங் காலத்தன்றித் தோழி தானே அறத்தொடு நிற்கும் மரபு இலள் என்றவாறு.

தலைவி அறத்தொடு நிற்குமாறு:-

**“விழுந்த மாரிப் பெருந்தண் சாரற்**
**கூதிர்க் கூதளத் தலரி நாறும்**
**மாதர் வண்டின் நயவருந் தீங்குரல்**
**மணநாறு சிலம்பின் அசுணம் ஓர்க்கும்**
**உயர்மலை நாடற் குரைத்தல் ஒன்றோ**
**துயர்மருங் கறியா அன்னைக் கிந்நோய்**
**தணியுமா றிதுவென உரைத்தல் ஒன்றோ**
**செய்யா யாதலிற் கொடியை தோழி**
**மணிகெழு நெடுவரை அணிபெற நிவந்த**
**செயலை அந்தளிர் அன்னஎன்**
**மதனின் மாமெய்ப் பசலையுங் கண்டே”** (நற்றிணை 244)

என வரும். தோழி யறத்தொடு நிற்றல் வருகின்ற சூத்திரத்தாற் கூறலாம்.

204. **எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்**
**கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு**
**உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇய**
**ஏழு வகைய என்மனார் புலவர்.**

என் - எனின், இது தோழி யறத்தொடு நிற்குமாறு உணர்த்திற்று.

இதற்குப் பொருள் களவியலுள் தோழிகூற்று உரைக்கின்றுழி உரைக்கப்பட்டது.

205. **உற்றுழி யல்லது சொல்ல லின்மையின்**
**அப்பொருள் வேட்கைக் கிளவியி னுணர்ப.**

என் - எனின், இது செவிலிக்குரியதொரு மரபுணர்த்திற்று.

(இ-ள்) காமம் மிக்கவழி யல்லது சொல்நிகழ்ச்சி யின்மையின் தலைமகள் தான் கருதிய பொருண்மேல் வேட்கையைக் தலைமகள் தன்னானே யறிப என்றவாறு.

பன்மையாற் கூறினமையான் அவ்வுணர்ச்சி செவிலிக்கும். தற்றாய்க்கும் ஒக்கும் என்றவாறு.

இதனாற் சொல்லியது அறத்தொடு நிற்பதன் முன்னம் செவிலி குறிப்பினான் உணரும் எனக் கொள்ளலாம்.

**"அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்**
**பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு**
**நனிபசந் தனளென வினவுதி"** (அகம். 48)

என்றவழிச் செவிலி குறிப்பினான் உணர்ந்தவாறு காண்க வேட்கை தோற்றத் தலைமகனில்லாதவழித் தோழிகூற்று நிகழும். அது "காமா கடும்புனல்" (கலித்.39) என்னும் பாட்டினுள் காணலாம்.

**206. செறிவும் நிறைவும் செம்மையுஞ் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பா லான.**

என் எனின் இது பெண்டிர்க் குரியதோர் இயல்புணர்த்திற்று.

(இ-ள்) செறிவு என்பது -அடக்கம்.

நிறைவு என்பது - அமைதி

செம்மை என்பது - மனங்கோடாமை

செப்பு என்பது - சொல்லுதல்

அறிவு என்பது - நன்மை பயப்பனவுந் தீமை பயப்பனவும் அறிதல்.

அருமை என்பது - உள்ளக் கருத்தறிதலருமை. இவை எல்லாம் பெண்பக்கத்தன என்றவாறு.

இதனாற் சொல்லியது மேற்சொல்லிய அறத்தொடுநிலைவகையும் இனிக் கூறுகின்ற வரைவுகடாதற்குப் பகுதியும் உண்மைவகையானும் புனைந்துரைவகையானும் கூறுங்கால் இவை பேதையராகிய பெண் டிர்க்கு இயையுமோ என ஐயுற்றார்க்குக் கூறப்பட்டது.

**207. பொழுதும் ஆறுங் காப்புமென் றிவற்றின்**
**வழுவி னாகிய குற்றங் காட்டலும்**

**தன்னை யழிதலும் அவனூ றஞ்சலும்**
**இரவினும் பகலினும் நீவா என்றலும்**
**கிழவோன் தன்னை வாரல் என்றலும்**
**நன்மையுந் தீமையும் பிறிதினைக் கூறலும்**
**புரைபட வந்த அன்னவை பிறவும்**
**வரைதல் வேட்கைப் பொருள என்ப.**

என் - எனின், இது தோழி கூற்றிற் கூறப்பட்ட சில கிளவிக்குப் பயன் உணர்த்திற்று.

(இ-ள்) தலைமகன் வருகின்ற பொழுதும் நெறியும் ஊரின்கட் காவலும் என்று சொல்லப்பட்டவற்றின்கண் வரும் தப்பினான் உளதாகுங் குற்றங் காட்டலும், தான் மனனழிந்து கூறலும் தலைமகட்கு வரும் இடையூறு கூறலும், தலைமகளைப் பகற்குறி விலக்கி இரவுக்குறி நீ வா என்றலும், இரவுக்குறி விலக்கிப் பகற்குறி தீ வா என்றலும், தலைமகனை வாராதொழியெனக் கூறலும், நன்மை யாகவுந் தீமையாகவும் பிற பொருளை எடுத்துக் கூறலும், இத் தன்மையவாகிக் குற்றம் பயப்ப வந்த அத்தன்மைய பிறவும் புணர்ச்சி விருப்பமின்மையாற் கூறப்பட்டனவல்ல; வரைதல் வேண்டும் என்னும் பொருளையுடைய என்றவாறு.

இவையெல்லாந் தோழி கூற்றினுள் கூறப்பட்டன. ஆயின் உண்டோதிய தென்னை எனின்; அவை வழுப்போலத் தோற்றும் என்பதனைக் கடைப்பிடித்து அன்பிற்கு மாறாகாது ஒரு பயன் படவந்ததென உணர்த்துதலே ஈண்டு ஓதப்பட்ட தென்ப நன்மையுந் தீமையும் பிறிதினைக் கூறலும் என்பது நாடும் ஊரும் இல்லுங் குடியும் என ஆண்டோதப்பட்டது. இவை வரைதல் வேட்கைப் பொருளவாமாறும் ஆண்டுக் காட்டப்பட்ட உதாரணத்தான் உணரலாம்.

208. **வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தல்**
**மரீஇய மருங்கின் உரித்தென மொழிப.**

என் - எனின்,இதுவும் தலைமகட்குந் தோழிக்கும் உரியதோர் இயல்புணர்த்திற்று.

(இ-ள்) வரைதல் வேட்கைப் பொருளாற் கூறுதலை மறுத்துப் பட்டாங்கு கூறிச் சொல்லுதல் மருவிய பக்கத்தின் உரித் தென்றவாறு மருவிய பக்கமாவது களவொழுக்கம் நீட்டித்த இடம் அவ்வழிப் பட்டாங்கு கூறுதலும் ஆம் என்றவாறு.எனவே, மேற்கூறியவாறு கூறுதல் மருவாதவழி என்றவாறாம்.

**"கொடிச்சி யின்குரல் கிளைசெத் தடுக்கத்துப்**
**பைங்குரல் ஏனற் படர்தருங் கிளியெனக்**
**காவலுங் கடியுநர் போல்வர்**
**மாமலை நாட வரைந்தனை கொண்மே"** (ஐங்குறு. 289)

என வரும்.

209. **தேரும் யானையுங் குதிரையும் பிறவும்**
**ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப.**

என் - எனின், இது தலைமகற்குரியதொரு மரபுணர்த்திற்று.

(இ-ள்) களவுக் காலத்துத் தேரும் யானையும் குதிரையும் பிறவும் ஊர்ந்து சேறலும் உரியர் என்றவாறு. களவின்கண் என்பது அதி காரத்தான் வந்தது.

**"நெடுந்தேர் கடாஅய்த் தமியராய் வந்தோர்**
**கடுங்களிறு காணீரோ என்றீர் - கொடுங்குழையார்**
**யானை அதருள்ளி நிற்பரோ தம்புனத்து**
**ஏனல் கிளிகடிகு வார்."**

பிறவுமன்ன.

'ஊர்ந்தன ரியங்கலு முரியர்' என்றமையால் தனி வருதல் பெரும்பான்மை. இதனை எச்சவும்மையாக்கி வையமூர்தலும் இளையரோடு வருதலுங் கொள்ளலாம்.

**"வல்வே லிளையரொ டெல்லிச் செல்லாது"** (அகம்.120)

என வரும்.

பிறவுமன்ன. இதனால் சொல்லியது பெரியார் இவ்வாறு செய்வார் எனவுங் கூறியவாறாம்.

210. **உண்டற் குரிய அல்லாப் பொருளை**
**உண்டன போலக் கூறலும் மரபே.**

என் - எனின் இ∴து ஒருசார் வழுவமைத்தலை நுதலிற்று.

(இ-ள்) உண்டற்றொழிலுக் குரியவல்லாத பொருளை உண்டன வாகக் கூறலும் மரபென்றவாறு.

**'பசலையான் உணப்பட்டுப் பண்டைநீ ரொழிந்தங்கால்'** (கலித்.15)

எனவும்,

**'நீலமுண்ட துகில்'**

எனவும்,

**"கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்**
**தின்னு மவர்க்காண லுற்று"** (குறள் 1244)

எனவும் வரும்.

இது சொல்லின்கட் கிடந்ததோ ரொழிபு.

211. **பொருளென மொழிதலும் வரைநிலை யின்றே**
**காப்புக்கைம் மிகுதல் உண்மை யான**

**அன்பே யறனே யின்ப நாணொடு**
**துறந்த ஒழுக்கம் பழித்தன் றாகலின்**
**ஒன்றும் வேண்டா காப்பி னுள்ளே.**

என் - எனின். இது களவுக் காலத்துத் தலைமகற் குரியதோர் இயல்புணர்த்திற்று.

(இ-ள்) பொருள்வயிற் பிரிதல் வேண்டும் எனக் கூறுதலும் கடியப்படாது, தலைமகளைத் தமர் காக்குங் காவல் மிகுதியுள்ள வழி இவை நீங்கப்பெறும் என்றவாறு.

இதனாற் சொல்லியது அன்பையும் அறத்தையும் இன்பத்தையும் நினைத்து வருந்தப்பெறான் எனவும், நாணத்தைக் கைவிட்டுத் தமர் கொடுக்குமாறு முயலவேண்டு மென்பதூஉம் கூறியவாறாம். இவை ஒருவழித் தணத்தற்கண் நிகழ்வன.

212. **சரமென மொழிதலும் வரைநிலை யின்றே .**

என் - எனின் இதுவும் தலைமகற்குரியதொரு கிறன் உணர்த்திற்று.

(இ-ள்) தலைமகன் பொருள்வயிற் பிரியும்வழி உடன்போக்குக் கருதிய தலைமகட்கு யான் போகின்ற நெறி கல்லுங் கரடுமாகிய கரம் எனக் கூறுதலும் நீக்கப்படாது என்றவாறு இதனாற் சொல் லியது காப்புமிகுதிக்கண் வருத்தமுறுந் தலை மகளை உடன் கொண்டு போதல் தக்கது என்பார்க்கு நெறியருமை கூறிவிலக்கவும் பெறும் என்றவாறு.

213. **உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்**
**வழக்குவழிப் படுதல் செய்யுட்குக் கடனே.**

என் - எனின் இதுவுமொரு மரபு உணர்த்திற்று.

(இ-ள்) உயர்ந்தோர் கூற்று வழக்குவழிப்படுதலின் வழக்குப் படுதல் செய்யுட்குக் கடன் என்றவாறு.

எனவே, வழக்கழிய வருவன செய்யுட்கண் வரப்பெறா என்ற வாறு இதனானே மேலதிகாரத்திற் கூறிய சொல்லும் இவ்வதிகாரத்திற் கூறுதற்கியன்ற பொருளும் வழக்கொடு புணர்ந்தனவே செய்யுட்கண் வருவன; புணராதன செய்யுட்கண் வரப்பெறா என்றவாறாம். இன்னும் இந் நூலகத்து அகப்பொருளாகவும் புறப்பொருளாகவும் எடுத்தோதப் பட்டதன்றி உயர்ந்தோர் வழக்கொடு பொருந்தி வருவன வெல்லாஞ் செய்யுட்குப் பொருளாகப் புணர்க்க என வெஞ்சிய துணர்த்தியவாறுமாம். உயர்ந்தோர் வழக்கென்றமையா னும், பொருளுமின்பமும் கெடாமல் மூன்றனுளொன்று பயப்பக் கூறுதல் கொள்ளலாம்.

214. **அறக்கழி வுடையன பொருட்பயன் வரினே**
**வழக்கென வழங்கலும் பழித்த தென்ப.**

என் - எனின். மேலதற் கொரு புறனடை.

(இ-ள்) அறத்திற் கழிவுடையன பொருட்குப் பயன்படவரின் அதனை வழக்கென்று வழங்குதலும் பழித்ததென்றவாறு.

பொருளாவது அகப்பொருளும் புறப்பொருளும். அறத்திற் கழிவு வரும் அகப்பொருளாவது பிறன்மனைக் கூட்டம்.

பொருட்பயன் வருதலாவது அவராலே பொருள் பெறுதல் அவ்விடத்து இன்பமும் பொருளும் பயப்பினும் அதனை வழங்கு தலும் பழிக்கப்பட்டதென்றவாறு உம்மை முற்றும்மையாகலான் வழக்கென றுரையற்க என்றவாறு.

**"எனைத்துணைய ராயினும் என்னாந் தினைத்துணையுந்**
**தேரான் பிறனில் புகல்."** - (குறள் 144)

என வரும்.

புறப்பொருட்கண் அறக்கழி வுடையன பகைவா் தேஎத்து நிரைகோடலும் அழித்தலும் போலப் பொருட்பயன் காரணத்தான் நட்டோர் தேஎத்துஞ் செயல். இவையும் பொருள் பயப்பினும் வழக்கென வழங்குதலாகா என்றவாறு, இதுவும் ஒரு முகத்தான் நீதி கூறியவாறு.

**"பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்**
**கழிநல் குரவே தலை"** (குறள். 657)

என வரும்.

**215. மிக்க பொருளினுட் பொருள்வகை புணர்க்க**
**நாணுத்தலைப் பிரியா நல்வழிப் படுத்தே.**

என் - எனின் இதுவுமது.

(இ-ள்) மிக்க பொருளாவது மேற்கூறப்பட்ட அகப்பொருள் அப்பொருட் சுண்ணும் நாண் நீங்காத நல்வழிக்கட்படுத்துப் பொருள்வகை புணர்க்க என்றவாறு, எனவே, அற முதலாயின வழுவின் றாயினும் நாணழிய வரும் பொருண்மை புணர்த்தற்க என்றவாறு.

**"பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்**
**அறன்நாணத் தக்க துடைத்து"** (குறள். 1018)

என வரும்.

**216. முறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச்சொல்**
**நிலைக்குரி மரபின் இருவீற்றும் உரித்தே.**

என் - எனின். இதுவும் வழுவமைத்தலை நுதலிற்று.

(இ-ள்) முறைப் பெயராவது -இயற்பெயர் முதலிய பெய ரானன்றி முறைமை பற்றி வருவது; அது தந்தை மகனைக் கூறும் பொழுது தம்முன், தம்பி என்பனவும் கிழவன், தோழன் என்பனவும் போல வருவன.

அப்பெய ரகத்துவரும் நன்றாகிய கெழுதகைப் பொதுச் சொல்லாவது - பயிற்சியாற் கூறும் 'எல்லா' என்பது.

நிலைக்குரி மரபி னிருவீற்று முரித்தே என்பது - நிற்றற்குரிய மரபினானே யிருபாற்கு முரித்தென்றவாறு. நிற்றற்குரிய மரபின் என்பது, இவ்வாறு தோற்றாமையின் என்றவாறு.

**"எல்லா, இ:.தொத்த னென்பெறான் கேட்டைக்காண்"** (கலித்.1)

என்றவழிப் பெண்பால்மேல் வந்தது.

**"எல்லா, தமக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னா**
**செய்வது நன்றாமோ மற்று"** (கலித்.62)

என்றவழித் தலைமகன்மேல் வந்தது.

இதுவும் ஒரு சொல்வழு அமைத்தவாறு. இச்சொற் காமப் பொருளாகத் தோற்றுதலாற் சொல்லதிகாரத்து ஓதாது ஈண்டு ஓதப் பட்டது.

217. **தாயத்தின் அடையா ஈயச் செல்லா**
**வினைவயின் தங்கா வீற்றுக் கொளப்படா**
**எம்மென வரூஉங் கிழமைத் தோற்றம்**
**அல்ல வாயினும் புல்லுவ உளவே.**

என் - எனின், இதுவும் ஒருசார் மரபு வழுவமைத்தலை நுதலிற்று.

(இ-ள்) தாயத்தான் எய்துதலாவது தந்தைபொருள் மகற்குறுதல் ஈயச் சேறலாவது ஒருவன் கொடுப்ப ஒருவன் கோடல் வினைவயிற் றங்கலாவது உழவு முதலியனவற்றால் வருதல். வீற்றுக்கொளப் படுதலாவது வேறுபடுத்திக் கோடல். அ:.தாவது பகையினால் வந்தது கோடல் இந்நான்கினும் வரும் பொருளினது உரிமைத் தோற்ற மல்லவாயினும் பொருந்துவ உள என்றவாறு.

செய்யா என்னும் வினையெச்சம் வரூஉம் என்னும் பெயரெச்சத் தொடு முடிந்தது. அன்றியும் செய்யா என்பதனைப் பெயரெச்ச எதிர் மறையாக்கி இந்நான்கிலும் வருந் தகவு இல்லாத பொருள் பொருளல் வாயினும் எமதெனவரும் உரிமைத் தோற்றம் பொருந்துவ என்றவாறு.

அல்லவாயினும் என்பதனை மாறிக் கூட்டுக. எனவே, ஒரு முகத் தாற் பொருள் தேடுவார் திறன் கூறினாருமாம். இனி அக்கிழமைத் தோற்றம் ஆவது.

**"விரும்பிநீ என்தோள் எழுதிய தொய்யிலும் யாழநின்**
**மைந்துடை மார்பிற் சுணங்கும் நினைத்துக்காண்"** (கலித்.18)

என்றவழித் தலைமகள் தோளைத் தோழி தன்னையுமுளப்படுத்தி எனதெனக் கூறியவாறு காண்க, பிறவுமன்ன.

218. **ஒருபாற் கிளவி ஏனைப்பாற் கண்ணும்**
**வருவகை தாமே வழக்கென மொழிப.**

என் - எனின், இதுவு மொருசார் பொருள் கொளுந்திறன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒருபக்கத்துக் கூறிய பொருண்மை ஒழிந்த பக்கத்துக் கண்ணும் வருவகை தாம் வழக்கு நெறி என்றவாறு.

மனையோள்மாட்டுங் காமக்கிழத்தி மாட்டும் நிகழும் புணர்ச்சி யும் பிரியும் ஊடலும் பரத்தையர் மாட்டு நிகழும். அது வருமாறு:-

**"அன்னை கடுஞ்சொல் அறியாதாய்"** (கலித்.97)

என்னுங் கலியுள்,

**"சிறுகாலை இற்கடை வந்து குறிசெய்த**
**அவ்வழி என்றும்யான் காணேன்"**

என்பது புணர்வு குறித்து வந்தது.

**"உள்ளுதொறு நகுவன் - தோழி வள்ளுகிர்**
**மாரிக் கொக்கின் கூர்அல கன்ன**
**குண்டுநீர் ஆம்பல் தண்துறை யூரன்**
**தேங்கம ழைம்பால் பற்றி என்வயின்**
**வான்கோல் எல்வளை வவ்விய பூசற்**
**சினவிய முகத்துச் சினவாது சென்றுநின்**
**மனையோட் குரைப்பல் என்றலின் முனையூர்ப்**
**பல்லா நெடுநிரை வில்லின் ஒய்யும்**
**தேர்வண் மலையன் முந்தைப் பேரிசைப்**
**புலம்பிரி வயிரியர் நலம்புரி முழவின்**
**மண்ணார் கண்ணின் அதிரும்**
**நன்ன ராளன் நடுங்களுர் நிலையே"** (நற்றிணை. 100)

இ∴து ஊடல் குறித்து வந்தது. இப் பரத்தையர் பொருட் பெண்டிராகலின் இன்பம் பயக்குமோ எனின், அ∴து இன்பமாமாறு வருகின்ற சூத்திரத்தான் எல்லாப் பொருட்கும் உளதாகும் பொது விலக்கணம் கூறியவாறு.

219. **எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**
**தான்அமர்ந்து வரூஉம் மேவற் றாகும்.**

என் - எனின் மேலதற்கொரு புறனடை உணர்த்திற்று.

(இ-ள்) எல்லாவுயிர்க்கும் இன்பமென்பது தான் மனம் பொருந்தி வரு விருப்பத்தையுடைத்து என்றவாறு. எனவே, மனம் பொருந்திய வழிப் பரத்தையர் மாட்டும் இன்பமுளதாகும் எனவும், பொருந்தாத வழி மனைவியர்மாட்டும் இன்பமின்றாம் எனவும் கொள்ளலாம்.

220. **பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே**
**நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர்.**

என் - எனின் பரத்தையிற் பிரிவிற்கு உரியாரை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பரத்தையர்மாட்டு வாயில் விடுதல் நான்கு வருணத் தார்க்கும் உரித்து; அவ்வழிப பிரியும் பிரிவு நிலம் பெயர்தல் இல்லை என்றவாறு.

எனவே, தன்னூரகத்துஞ் சார்ந்தவிடமுங் கொள்க நால்வர்க்கும் உரித்து என்றமையான் நான்கு வருணத்துப் பெண்பாலாரும் அவ ளோடு ஊடப்பெறுப என்றவாறுமாம்.

**“யாரிவன் எங்கூந்தல் கொள்வான் இதுவுமோர்**
**ஊராண்மைக் கொத்த படிறுடைத்து”** (கலித். 89)

என்பது பார்ப்பனி கூற்று.

**“பெரியார்க் கடியரோ ஆற்றா தவர்.”** (கலித்.88)

என்பது அரசி கூற்று.

**அலகு – 2**

## பொருளியல் - பகுதி இரண்டு

221. **ஒருதலை உரிமை வேண்டினும் மகடூஉப்**
**பிரித லச்சம் உண்மை யானும்**
**அம்பலும் அலருங் களவுவெளிப் படுக்குமென்று**
**அஞ்ச வந்த ஆங்கிரு வகையிலும்**

**நோக்கொடு வந்த இடையூறு பொருளினும்**
**போக்கும் வரைவும் மனைவிகண் தோன்றும்.**

என் - எனின். இது களவின்கண் தலைமசுட்குரியதொரு மரபு உணர்த்திற்று.

(இ-ள்) ஒருதலை யுரிமை வேண்டினும் என்பது - ஒரு தலையாகத் தலைமகள் உரிமை பூண்டலை வேண்டியவிடத்து மென்றவாறு.

மகடூஉப் பிரித லச்ச முண்மை யானும் என்பது - பிரிதற்கண் வரும் அச்சம் பெண்பாற்கு இயல்பாகு மென்றவாறு.

அம்பலும் அலரும் களவு வெளிப்படுக்கு மென்று அஞ்சவந்த வாங்கிருவகையினும் என்பது - களவொழுக்கத்தை வெளிப்படுக்குமென்று அஞ்சும்படியாக வந்த அம்பலும் அலருமாகிய இருவகை யின் கண்ணும் என்றவாறு.

நோக்கொடு வந்த இடையூறு பொருளினும் என்பது - தலை மகன் வரவு பார்த்திருந்தவழி வந்த இடையூறாகிய பொருளின் கண் ணும் என்றவாறு

அவையாவன:- தாய் துஞ்சாமை நிலவுவெளிப்படுதல் முதலியன.

போக்கும் வரைவும் மனைவிகண் தோன்றும் என்பது தலை மகனுடன் போதற் குறிப்பும் வரைவுகடாதற் குறிப்பும் மனைவி மாட்டுத் தோன்றும் என்றவாறு.

**உதாரணம்**

**“சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி**
**மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி**
**மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்றச்**
**சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப**
**அலந்தனென் வாழி தோழி கானற்**
**புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவற்**
**கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ**
**நடுநாள் வரூஉம் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு**
**செலவயர்ந் திசினால் யானே**
**அலர்சமந் தொழிகஇவ் அழுங்க லூரே”** (நற்றிணை. 149)

இது, போக்குக் குறித்தது. 'இரும்பிழி மகாஅர் ' என்னும் பாட்டு வரைவு குறித்தது

222. **வருத்த மிகுதி சுட்டுங் காலை**
**உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்.**

என் - எனின், இது தலைமகட்குந் தோழிக்கு முரியதொரு திறன் உணர்த்திற்று.

(இ-ள்) வருத்த மிகுதியைக் குறித்தவழி மனைவாழ்க்கையுள் இரக்கம் உரித்தென்று சொல்லுவர் என்றவாறு.

எனவே, வருத்த மிகுதியைச் சுட்டாதவழி மனைவாழ்க்கையுள் இரக்கம் இன்றெனக் கொள்ளப்படும்.

**"செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க் குரை"** (குறள்.1151)

**"அன்பற மாறியாம் உள்ளத் துறந்தவள்**
**பண்பும் அறிதிரோ என்று வருவாரை**
**என்திறம் யாதும் வினவல் வினவிற்**
**பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்**
**தவலருஞ் செய்வினை முற்றாமல் ஆண்டோர்**
**அவலம் படுதலும் உண்டு."** (கலித்.19)

இதுவுமொரு மரபுவழு வமைத்தது.

223. **மனைவி உயர்வுங் கிழவோன் பணிவும்**
**நினையுங் காலைப் புலவியுள் உரிய.**

என் - எனின். கற்புக் காலத்துத் தலைமகட் குரியதொரு மரபு உணர்த்திற்று.

(இ-ள்) தலைமகள் உயர்வும் தலைமகன் தாழ்வும் ஆராயுங் காலத்துப் புலவிக் காலத்து உரிய வென்றவாறு.

எனவே, ஒழிந்த ஊடல் துனியென்பனவற்றிற் குரியவாம்.

**"ஒரூஉக் கொடியியல் நல்லார் குரனாற்றத் துற்ற**
**முடியுதிர் பூந்தாது மொய்ம்பின வாகத்**
**தொடிய எமக்கு நீ யாரைப் பெரியார்க்கு**
**அடியரோ ஆற்றா தவர்;**
**கடியர் நமக்கி யார்சொலத் தக்கார் மாற்று**
**வினைக்கெட்டு வாயல்லா வெண்மை யுரையாது கூறுநின்**
**மாய மருள்வா ரகத்து;**
**ஆயிழாய் நின்கண் பெறினல்லால் இன்னுயிர் வாழ்கல்லா**
**என்கண் எவனோ தவறு."** (கலித். 88)

இதனுள் தலைமகன் பணிவுந் தலைவி யுயர்வுங் காண்க இஃது ஈண்டுக் கூறியதென்னை? 'காமக் கடப்பினுட் பணிந்த கிளவி' (கற்பியல். 19) யென மேற்கூறப்பட்டதாலெனின், ஆண்டுக் கூறியது ஊடல் புலவி துனி யென்னு மூன்றற்கும் பொதுப்பட நிற்றலின், இது புலவிக்கே உரித்தென்னுஞ் சிறப்பு நோக்கிக் கூறியவாறு காணலாம்.

224. **நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற்**
**புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே.**

என் - எனின். இதுவுமொரு மரபுணர்த்திற்று.

(இ-ள்) கற்புக் காலத்து நிகழாநின்ற தகையின் பக்கத்து வேட்கை மிகுதியாற் புகழ்தலை நீக்கார் என்றவாறு.

களவுக் காலத்து நலம் பாராட்டிய தலைமகன் கற்புக் காலந்து மெழினலம் பாராட்டப்பெறும் என்றவாறு.

தகை என்பது அழகு அதனைப் பற்றிப் புகழும் எனக் கொள்ளலாம்.

**"அணைமருள் இன்றுயில் அம்பணைத் தடமென்றோள்**
**துணைமலர் எழில்நீலத் தேந்தெழில் மலருண்கண்**
**மணமௌவல் முகையன்ன மாவீழ்வான் நிரைவெண்பல்**
**மணநாறு நறுந்தண் மாரிவீழ் இருங்கூந்தல்**
**அலர்முலை யாகத் தகன்ற அல்குல்**
**சிலநிரை வால்வளைச் செய்யா யோவெனப்**
**பலபல கட்டுரை பண்டையிற் பாராட்டி"** (கலித்.14)

என வரும்.

225. **இறைச்சி தானே உரிப்புறத் ததுவே.**

என் - எனின், இறைச்சிப் பொருளாமா றுணர்த்திற்று.

(இ-ள்) இறைச்சிப் பொருளென்பது உரிப்பொருளின் புறத் தாகித் தோன்றும் பொருள் என்றவாறு.

அ∴தாவது கருப்பொருளாகிய நாட்டிற்கும் ஊர்க்குந் துறைக் கும் அடையாகி வருவது.

**"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரள வின்றே சாரற்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே."** (குறுந்-3)

என்றவழி நாட்டிற்கு அடையாகி வந்த குறிஞ்சிப் பூவுந் தேனும் இறைச்சிப் பொருள் என்று கொள்ளலாம்.

226. **இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே**
**திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே.**

என் - எனின், இ∴து இறைச்சிப் பொருள்வயிற் பிறக்கும் பிறிது மொரு பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இறைச்சிப் பொருள்வயிற் றோன்றும் பொருளும் உள: பொருட்டிறத்தியலும் பக்கத்து ஆராய்வார்க் கென்றவாறு.

இறைச்சிப் பொருள் பிறிதுமொரு பொருள்கொளக் கிளப் பனவுங் கிளவாதனவுமென இருவகைப்படும். அவற்றிற் பிறிதொரு பொருள் பட வருமாறு:-

**"ஒன்றேன் அல்லென் ஒன்றுவென் குன்றத்துப்**
**பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை**
**குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்**
**நின்று கொய்ய மலரு நாடனோடு**
**ஒன்றேன் தோழி ஒன்றி னானே"** (குறுந்.208)

என்பது வரை வெதிர் கொள்ளாது தமர் மறுத்தவழித் தலைமகனோடு ஒன்றுமாறு என்னெனக் கவன்ற தோழிக்கு உடன்போதற் குறிப்பின ளாய்த் தலைமகள் கூறியதாகலின், இதனுட் பொருகளி றென்ற மையால் தலைமகள்தமர் தலைமகன் வரைவிற் குடன்படுவாரும் மறுப்பாருமாகி மாறுபட்ட தென்பது தோற்றுகின்றது. 'பொரு களிறு மிதித்த வேங்கை' யென்றதனாற் பொருகின்ற விரண்டு களிற் றினும் மிதிப்பதொன்றாகலின் வரைவுடன் படாதார் தலைமகளை யவமதித்தவாறு காட்டிற்று. 'வேங்கை நின்று கொய்ய மலரும்' என்றதனான் முன்பு ஏறிப் பறித்தல் வேண்டுவது இப்பொழுது நின்று பறிக்கலாயிற்று என்னும் பொருள்பட்டது.இதனாளே பண்டு நமக்கரியனாகிய தலைமகன் தன்னை யவமதிக்கவும் நமக் கெளியனாகி யருள் செய்கின்றானெனப் பொருள் கொளக் கிடந்தவாறு காணலாம்.

227. **அன்புறு தகுவன இறைச்சியிற் சுட்டலும்**
**வன்புறை யாகும் வருந்திய பொழுதே.**

என்பது சூத்திரம்.

என் - எனின், இ∴து இறைச்சிப் பொருளாற் படுவதொரு பொருள் உணர்த்திற்று.

(இ-ள்) அன்புறுதற்குத் தகுவன இறைச்சிப் பொருட்கண் சுட்டு தலும் வற்புறுத்தலாம் என்றவாறு உம்மை இறந்தது தழீஇயிற்று.

**"அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையாற்**
**கடியவே கனங்குழாஅய் காடென்றார் அக்காட்டுள்**
**துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்**
**பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும் உரைத்தனரே"** (கலித்.11)

என்றது வற்புறுத்தற் குறிப்பு.

228. **செய்பொரு ளச்சமும் வினைவயிற் பிரிவும்**
**மெய்பெற உணர்த்துங் கிழவிபா ராட்டே.**

என் - எனின், இது தலைமகட்குரியதோர் இயல்புணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தலைமகன் பொருள்வயிற் பிரியுமிடத்து ஆறின்னாமை யானுளதாகிய அச்சமும் வினைவயிற் பிரியுங் காலத்தினுந் தலைவி யைப் பாராட்டிப் பிரிதலினான், அப் பாராட்டினான் மெய்பெற வுணரும் என்றவாறு.

உதாரணம்

**"நெஞ்சு நடுக்குறக் கேட்டுங் கடுத்துந்தாம்**
**அஞ்சியது ஆங்கே அணங்காகும் என்னுஞ்சொல்**
**இன்றீங் கிளவியாய் வாய்மன்ற நின்கேள்**
**புதுவது பன்னாளும் பாராட்ட யானும்**
**இதுவொன் றுடைத்தென எண்ணி."** (கலித்.24)

என்றமையாற் பாராட்டினால் தலைமகள் பிரிவு உணர்ந்தவாறு அறியலாம்.

229. **கற்புவழிப் பட்டவள் பரத்தையை ஏத்தினும்**
**உள்ளத் தூட லுண்டென மொழிப.**

என் - எனின், இதுவும் அது.

(இ-ள்) கற்புக் காரணமாகத் தலைமகனது பரத்தைமைக் குடன்பட்டாளே யாயினும், உள்ளத்தின்கண் ஊடல் நிகழும் என்றவாறு.

230. **கிழவோள் பிறள்குணம் இவையெனக் கூறிக்**
**கிழவோன் குறிப்பினை உணர்தற்கும் உரியள்.**

என் - எனின், இது தலைமகட்குரியதோர் இலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தலைவி மற்றொருத்தி குணம் இத்தன்மையள் எனச் சொல்லித் தலைமகன் குறிப்பினை யறிதற்கு முரியள் என்றவாறு.

இது, கற்பியலுட் கூறியதற் கிலக்கணம்.

**"கண்டிகும் அல்லமோ கொண்கநின் கேளே**
**ஒள்ளிழை உயர்மணல் வீழ்ந்தென**
**வெள்ளாங் குருகை வினவு வோளே"** (ஐங்குறு.122)

என வரும். பிறவுமன்ன.

231. **தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்**
**மெய்ம்மை யாக அவர்வயி னுணர்ந்தும்**
**தலைத்தாட் சழறல்தம் எதிர்ப்பொழு தின்றே**
**மலிதலும் ஊடலும் அவையலங் கடையே.**

என் - எனின், இது தலைமகட்டீரியதொரு மரபுணர்த்திற்று.

(இள்) பரத்தையா் தாமுற்ற துன்பத்தினைத் தலைமகட்குக் கூறியவழியும் அவரிடத்துத் துன்பத்தை மெய்ம்மையாக உணா்ந்து வைத்துத் தலைமகன்மாட்டுக் கழறுதல் தலைவன் எதிர்ப்பட்ட பொழுது இல்லை, மகிழ்ச்சியும் புலவியும் அல்லாத காலத்து என்றவாறு.

கூறினும் என்ற உம்மை எதிர்மறை கூறாமை பெரும்பான்மை அதனை ஐயப்படாது துணிதலான் மெய்ம்மையாகவென்றாா் அதனைத் தலைமகன் வந்தவழிக் கூறுவாளாயின் தனக்குப் புணர்ச்சியிற் காதலில்லையாம். சொல்லாளாயின் அவள் கூறியவத வாற் பயனில்லையாம். அதனைக் கலவியிறுதியினும் புலவியினும் கூறப்பெறும் என்றவாறு.

**“நின்னணங் குற்றவர் நீசெய்யும் கொடுமைகள்**
**என்னுழை வந்துநொந் துரையாமற் பெறுகற்பின்”** (கலித். 77)

எனப் புலவியிற் கூறியவாறு காணலாம்.

கலவியிறுதியிற் கூறுதல் வந்தவழிக் காணலாம்.

232. **பொழுது தலைவைத்த கையறு காலை**
**இறந்த போலக் கிளக்குங் கிளவி**
**மடனே வருத்தம் மருட்கை மிகுதியோடு**
**அவைநாற் பொருட்கண் நிகழும் என்ப.**

என் - எனின், இது பருவம் வந்துழித் தலைமகட் குரியதொரு வழுக்காத்தலை நுதலிற்று.

(இ-ள்) பொழுது தலைவைத்த லாவது யாதானுமொரு பருவத்தைக் குறித்தவழி யப்பருவம் இருதிங்களை யெல்லையாக வுடைத்தாயினும் அது தோற்றியவழி என்றவாறு.

கையறு காலை என்பது என்றவாறு. இது கண்டு செயலற்றகாலை

இறந்தபோலக் கிளத்த லாவது அக்காலந் தோன்றியபொழுது கழிந்தது போலக் கூறுதல்.

மடனே வருத்தம் மருட்கை மிகுதியோடு அவை நாற்பொருட் கண் நிகழும் என்ப என்பது - அவ்வாறு கூறுதல் அறியாமை யானாதல் வருத்தத்தானாதல் மயக்கத்தானாதல் அக்காலத்திற்குரிய பொருள் மிகத் தோன்றுதலானாதல் என இந்நான்கு பொருளானும் நிகழும் என்றவாறு.

சிறுபொழுதாயின் யாமங் கழிவதன் முன்னர்க் கூறுதல் எனவே, இவ்வாறு வருஞ் செய்யுள் காலம் பிழைத்துக் கூறுகின்ற தன்று, என்றவாறு.

**உதாரணம்**

**“பொருகடல் வண்ணன் புனைமார்பில் தார்போல்**
**திருவில் விலங்கூன்றித் தீம்பெயல் தாழ**

**வருது மெனமொழிந்தார் வாரார்கொல் வானம்**
**கருவிருந்து ஆலிக்கும் போழ்து”** (கார்நாற்.1)

இது பருவங்கண்டவழி வாரார்கொல் என்றமையான் இறந்த போலக் கிளந்தவாறாயிற்று பிறவு மன்ன. இதுவுமொரு மரபு வழு வமைத்தல்.

233. **இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி**
**நிரம்ப நீக்கி நிறுத்தல் அன்றியும்**
**வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும்**
**நல்வகை யுடைய நயத்திற் கூறியும்**
**பல்வகை யானும் படைக்கவும் பெறுமே.**

என் - எனின்,களவுக் காலத்துத் தோழிக்குரியதொரு திறன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இரந்து குறையுற்ற தலைமகனைத் தோழி நிரம்ப நீக்கி நிறுத்தலன்றி மெய்ம்மை கூறுதலும் பொய்ம்மை கூறுதலும் நல் வகையுடைய நயத்தினாற் கூறியும் பல்வகையானும் படைத்து மொழிந்து சொல்லவும் பெறும் என்றவாறு.

உதாரணம் களவியலுட் காட்டப்பட்டனவுள்ளுங் காணலாம்.

நல்வகையுடைய நயத்திற்குச் செய்யுள்:-

**“வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே**
**அவையினும் பலவே சிறுகருங் காக்கை**
**அவையினும் அவையினும் பலவே குவிமடல்**
**ஓங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த**
**தூங்கணங் குரீஇக் கூட்டுவாழ் சினையே.”**

இது மடலேறுவல் என்ற தலைவனைப் பழித்து அருளுடையீ ராதலான் மடலேறுவது அரிது என நயத்திற் கூறியது.

இதுவுமொரு மரபுவழு வமைத்தவாறு.

234. **உயர்மொழிக் கிளவி உறழுங் கிளவி**
**ஐயக் கிளவி ஆடுஉவிற் குரித்தே.**

என் - எனின், தலைமகற்குந் தலைமகட்கும் உரியதொரு மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உயர்த்துச் சொல்லுதற்குரிய கிளவி தலைமகற்குந் தலை மகட்கும் ஒத்த கிளவி, ஐயக் கிளவி, தலைமகற்கே உரித்தென்றவாறு.

தலைவிமாட்டு ஐயக்கிளவி யின்றென்றவாறாம். அதனாற் குற்ற மென்னையெனின், தெய்வமென்று ஐயுறுங்கால் அதனை முன்பு கண்டறிவாளாதல் வேண்டும் காணாமையின் ஐயமிலள் என்க இன் உயர்த்துச் சொல்லுதல் உளவாம்.

**"அவன்மறை தேஎம் நோக்கி மற்றிவன்**
**மகனே தோழி யென்றனள்"** (அகம். 48)

என்பது உயர்த்துச் சொல்லியவாறு.

தலைவன் உயர்த்துச் சொல்லியதற்குச் செய்யுள்:-

**"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்**
**காதலை வாழி மதி"** (குறள்.1118)

பிறவு மன்ன, ஐயக்கிளவி களவியலுட் கூறப்பட்டது.

235. **உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலின்**
**உரிய தாகும் தோழிகண் உரனே.**

என் - எனின், இது தோழிக்குரியதொரு மரபுவழுக் காத்தலை நுதலிற்று.

(இ-ள்) தலைமகற் குற்ற துன்பம் பரிகரித்தல் தோழி இயல்பாக லின் அவட்குரியதாகும் அறிவு என்றவாறு.

அதனானே யன்றே:

**"பால்மருள் மருப்பின் உரல்புரை பாவடி"**

என்னும் பாலைக்கலியுள்,

**"கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்:**
**பழவினை மருங்கிற் பெயர்புபெயர் புறையும்"** (கலித்.21)

எனக் கூறினாள் என்று கொள்ளலாம்.

236. **உயர்மொழிக் கிளவியும் உரியவால் அவட்கே.**

என் - எனின், இதுவுமது.

(இ-ள்) உயர்த்துச் சொல்லுங் கூற்றும் உரித்து தோழிக்கு என்றவாறு.

**"தாமரைக் கண்ணியை தண்நறுஞ் சாந்தினை**
**நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்**

மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம்
அணங்கென அஞ்சுவர் சிறுகுடி யோரே.” (கலித்.52)

என்பது உயர்த்துச் சொல்லியவாறு.

237. வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல்
தாவின் றுரிய தத்தங் கூற்றே.

என் - எனின், வாயில்கட்குரியதொரு மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தத்தங் கூறுபாட்டினான் வாயில்கள் கூறுங்கிளவி வெளிப்படக் கிளத்தல் கேடின்றி யுரிய வென்றவாறு.

தத்தங் கூறாவது அவரவர் சொல்லத்தகுங் கூறுபாடு ஆனுருபு தொக்கு நின்றநது. எனவே, வாயில்களல்லாத தலைமகளும் நற்றாயும் மறைத்துச் சொல்லப்பெறுவர் என்றவாறு.’

வருகின்ற சூத்திரம் மறைத்துச் சொல்லும் உள்ளுறை சொல்லு கின்றாராதலின், அவ்வுள்ளுறை வாயில்களை விலக்கியவாறு. இவர் மறைத்ததனாற் குற்றமென்னை? இவர் குற்றேவல் முறைமையராத லானும் கேட்போர் பெரியோர் ஆதலானும் வெளிப்பட்டக் கூறாக்காற் பொருள் விளங்காமையானும் அவ்வாறு கூறினால் இவர் கூற்றிற்குப் பயனின்மையானும் வெளிப்படவே கூறும் எனலாம்.

238. உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே.

என் - எனின்,உள்ளுறையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உடனுறையும் உவமமும் சுட்டும் நகையும் சிறப்பும் எனக் கெடலரு மரபினை உடைய உள்ளுறை ஐந்துவகைப்படும் என்றவாறு.

உள்ளுறையாவது பிறிதொருபொருள் புலப்படுமாறு நிற்ப தொன்று. அது கருப் பொருள் பற்றிவருமென்பது அகத்திணையி யலுள் (அகத்திணை 50) கூறப்பட்டது.

உடனுறையாவது உடனுறைவ தொன்றைச் சொல்ல, அதனானே பிறிதொரு பொருள் விளங்குவது,

“விளையா டாயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை யகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப

**வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்**
**துறைகெழு கொண்கநீ நல்கின்**
**நிறைபடு நீழற் பிறவுமா ருளவே."** (நற்றிணை.172)

இதனுள் 'புன்னைக்கு நாணுதும்' எனவே, அவ்வழித்தான் வளர்த்த புன்னையென்றும், 'பல்காலும் அன்னை வருவள்' என்றும் உடனுறை கூறி விலக்கியவாறு. பிறவுமன்ன.

உவமம் என்பது உவமையைச் சொல்ல உவமிக்கப்படும் பொருள் தோன்றுவது.

**"வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்**
**குறைபடுந்தேன் வேட்டும் குறுகும் - நிறைமதுச்சேர்ந்து**
**உண்டாடும் தன்முகத்தே செவ்வி உடையதோர்**
**வண்டா மரைப்பிரிந்த வண்டு."** (தண்டி. 53உரை)

இது வண்டைக் கூறுவாள் போலத் தலைமகன் பரத்தையிற் பிரிவு கூறுதலின் உள்ளுறையுவமம் ஆயிற்று.

கட்டு என்பது ஒரு பொருளைச் சுட்டிப் பிறிதொரு பொருட்படுதல்.

**"தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி**
**அ∴தாண் டவள் செய் தது."** (குறள். 1279)

இதனுள் இப் பூப்பறிப்போமாயின் வளைகழன்று தோள்மெலிய நடத்தல் வல்லையாதல் வேண்டும் என ஒருபொருள் சுட்டித் தந்தமை காணலாம்.

நகையாவது நகையினாற் பிறிதொரு பொருளுணர நிற்றல்.

**"அசையியற் குண்டாண்டோ ரேஎர்யான் நோக்கப்**
**பசையினள் பைய நகும்."** (குறள். 1098)

இதனுள் நகையினாற் பிறிதொரு குறிப்புத் தோன்றியவாறு காணலாம்.

சிறப்பு என்பது இதற்குச் சிறந்தது இ∴து எனக் கூறுவதனாளே பிறிதொரு பொருள் கொளக் கிடப்பது.

239. **அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்**
**தன்வயின் வருதலும் வகுத்த பண்பே.**

என் - எனின், இதுவும் உள்ளுறைப் பாற்படுவதொரு பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அந்தமிலாத சிறப்பினாகிய வின்பத்திடத்து உள்ளுறைப் பொருண்மை வருதலும் வகுத்த இயல்பு என்றவாறு

'அந்தமில் சிறப்பு' என்பது மேன்மேலுஞ் சிறப்புச் செய்தல்.

**"நுண்எழில் மாமைச் சுணங்கணி ஆகம்தம்**
**கண்ணொடு தொடுத்தென நோக்கியும் அமையார்என்**
**ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்**
**எண்ணுவ தெவன்கொ லறியேன் என்னும்."** (கலித்.4)

என்றவழி, இன்பத்தின் கண்ணும் பிறிதொரு பொருள் உண்டென்பது தோற்றுகின்றது.

240. **மங்கல மொழியும் அவையல் மொழியும்**
**மாறில் ஆண்மையின் சொல்லிய மொழியுங்**
**கூறிய மருங்கிற் கொள்ளும் என்ப.**

என் - எனின், இதுவும் உள்ளுறைப் பாற்படுவதொரு சொல் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மங்கலமொழி முதலாகச் சொல்லப்பட்டனவும் உள்ளுறைப் பாற்படும் என்றவாறு.

மங்கலமொழியாவது-மங்கலத்தாற் கூறுஞ்சொல் செத்தாரைத் துஞ்சினார் என்றல். அது

அவையல் மொழியாவது, இடக்க ரடக்கிக் கூறுதல் அது கால் கழீஇ வருதும் என்றல்.

மாறிலாண்மையிற் சொல்லிய மொழியாவது ஒருவனைச் சிங்கம் வந்த தென்றாற்போற் கூறுவது.

அவையெல்லாஞ் சொல்லாற் பொருள்படாமையின் உள்ளுறைப் பாற்படும். இன்னும் இவ்வாற்றாற் பொருள் கொள்ளுமாறு 'ஒல்லு வதொல்லும்' என்னும் புறப்பாட்டினுள் (புறம்:196) 'நோயிலராகநின் புதல்வர்' எனவும் 'சிறக்கநின் னாளே' எனவும் வரும் மங்கலச் சொல் கெடுக என்னும் பொருள் பட்டவாறு காணலாம்.

"இதுவுமோர் ஊராண்மைக் கொத்த படிறுடைத்து" (கலித்.89) என்றது தீயொழுக்கம் ஒழு னொய் என்ற இடக்கரடக்கி அவையல் மொழியான் ஒழுக்கக் குறைபாடு கூறியவாறு.

241. **சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு**
**அனைநால் வகையுஞ் சிறப்பொடு வருமே.**

என் - எனின், மெய்ப்பாட்டியலுள் நடுவண் ஐந்திணைக்குரிய தலைமக்கட் காகாதன எடுத்தோதுகின்றா ராகலின், அவற்றுள் ஒரு சாரன ஒரோவிடத்து வருமென்பது உணர்த்திற்று.

இச் சூத்திரம் எதிரது நோக்கிற்று.

(இ-ள்) சினமும் பேதைமையும் நிம்பிரியும் நல்குரவும் என்று சொல்லப்பட்ட அந்நான்கு வகையும் யாதானும் ஒரு பொருளைச் சிறப்பித்தல் காரணமாக வரும் என்றவாறு.

**"கொடியியல் நல்லார்குரல் நாற்றத் துற்ற
முடியுதிர் பூந்தாது மொய்ம்பின வாகத்
தொடிய வெமக்குநீ யாரை பெரியார்க்கு
அடியரோஆற்றா தவர்."** (கலித்.88)

இதனுள் "தொடிய எமக்கு நீ யாரை" என்பது சினம்பற்றி வரினும் காமக் குறிப்பினாற் புணர்ந்த தலைமகள் கூறுதலின் அவள் காதலைச் சிறப்பிக்க வந்தது.

**"செவ்விய தீவிய சொல்லி அவற்றொடு
பைய முயங்கிய அஞ்ஞான்று அவையெல்லாம்
பொய்யாதல் யான்யாங் கறிகோமற் றைய."** (கலித்.19)

என்பதனுள் 'யான்யாங் கறிகோ' என ஏதம்பற்றி வந்த பிரிவார் றாமையைச் சிறப்பிக்க வந்தது.

**"அகனகர் கொள்ளா அலர்தலைத் தந்து
பகல்முனி வெஞ்சுரம் உள்ளல் அறிந்தேன்
ஷமகனல்லை மன்ற இனி"** (கலித்.19)

என்பதனுள் தலைவி 'மகனல்லை' எனல் நிம்பிரியாகிய வெறுப்புப் பற்றி வந்தது.

இதுவும் பிரிவாற்றாமையைச் சிறப்பிக்க வந்தது.

**"உடுத்தும் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயுந்
தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி
விழைவொடு வருதிநீயே இ∴தோ
ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கைப்
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற் றென்னும்இவ் வூரே."** (குறுந்.295)

இதனுள் 'ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை' எனத் தலைமகன் செல்வக் குறைபாடு கூறிப் 'பெருநலக் குறுமகள் வந்தென விழ வாயிற் றென்னு மிவ்வூர்' என்றமையான் நல்குரவு பற்றித் தலை மகளைச் சிறப்பிக்க வந்தது. இச் சூத்திரத்தினுள் வரைந்து கூறாமை யின் தலைவியுந் தலை வனுந் தோழியுஞ் செவிலியுங் கூறப்பெறுவர் என்று கொள்ளலாம்.

242. **அன்னை என்னை என்றலும் உளவே
தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினுந்
தோன்றா மரபின என்மனார் புலவர்.**

என் - எனின், இதுவுமொருசார் மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அன்னை என்னை என்று சொல்லுதலும் உள அவை முன்புள்ளார் சொல்லிப்போந்தமுறைமை. அவை தாம் சொல்லினா னும் சொல்லிற் கங்கமாகிய எழுத்தினானும் பொருள் தோன்றாத மரபினையுடைய என்றவாறு.

எழுத்தென்பது எழுத்தாகப் பிரித்தாற் படும் பொருள் வேறு பாடு. இவை அகத்தினும் புறத்தினும் வரும்.

**“ஓரீஇ ஒழுகு மென்னைக்குப்**
**பரியலென் மன்யான் பண்டொரு காலே”** (குறுந். 203)

என்பது தலைமகள் தலைமகனைக் கூறியது.

**“அன்னாய் இவனோர் இளமா ணாக்கன்”** (குறுந்.33)

என்பது தலைவி தோழிக்குக் கூறியது.

**“என்னைமுன் நில்லன்மின் தெவ்விர்**
**பலரென்னை முன்னின்று கன்னின் றவர்”** (குறள். 771)

**“என்னை, புற்கை யுண்டும் பெருந்தோ என்னே”** (புறம்.84)

இவையும் ‘என்றலும்’ என்ற வும்மையான் இந்நிகரளவுங் கொள்ளலாம்.

**“எந்தைதன் உள்ளங் குறைபடா வாறு.”** (கலித். 50)

என வரும்.

243. **ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா**
**கற்பும் ஏரும் எழிலும் என்றா**
**சாயலும் நாணும் மடனும் என்றா**
**நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்கு**
**ஆவயின் வரூஉங் கிளவி எல்லாம்**
**நாட்டியல் மரபின் நெஞ்சுகொளின் அல்லது**
**காட்ட லாகாப் பொருள என்ப.**

என் - எனின்,மேற்பொருட் பாகுபாடு முதல் கரு வுரிப் பொரு ளென உணர்த்தி அவற்றின் பாகுபாடு இத்துணையும் ஓதினான் அவற்றுட் பாகுபடுத்திக் காட்டலாகாதன சிலபொருள் கண்டு அவற்றைத் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒப்பு முதலாக நுகர்ச்சி யீறாக அவ்வழி வருஞ் சொல் லெல்லாம் நாட்டின் வழங்குகின்ற மரபினானே பொருளை மனத்தி னான் உணரினல்லது மாணாக்கர்க்கு இது பொருள் என வேறு படுத்தி யாசிரியன் காட்டலாகாத பொருளையுடைய என்றவாறு.

ஒப்பாவது - தந்தையையொக்கும் மகன் என்பது. அவ்விருவர்க்கும் பிறப்பு வேறாயினவழி ஒப்பாகிய பொருள் யாதென்றார்க்கு இதுவெனக் காட்டலாகாமையின், அவ்விருவரையுங் கண்டான் அவ் வொருவ ரொருவரை ஒக்குமது பிறனொருவன் மாட்டுக் காணாமை யிற்றானே யப்பொருண்மையை உணரும் என்பது.

உரு என்பது - உட்கு அது பயிலாத பொருளைக் கண்டுழி வருவதொரு மன நிகழ்ச்சி. இவருட்கினார் என்றவழி மனத்தினான் உணரக் கிடந்தது.

வெறுப்பு என்பது செறிவு அஃது அடக்கங் குறித்து நின்றது, அவ நடக்கமுடையர் என்றவழி அதுவும் மனத்தினான் உணரக் கிடந்தது.

கற்பு என்பது - மகளிர்க்கு மாந்தர் மாட்டு நிகழும் மனநிகழ்ச்சி. அதுவும் மனத்தான் உணரக் கிடந்தது.

ஏர் என்பது - தளிரின் கண் தோன்றுவதொரு பொலிவுபோல எல்லா வுறுப்பினும் ஒப்பக்கிடந்து கண்டார்க் கின்பத்தைத் தருவ தொரு நிறவேறுபாடு. அஃது எல்லா வண்ணத்திற்கும் பொதுவாகலின் வண்ணம் அன்றாயிற்று. இது வண்ணம் பற்றிவரும். 'இவன் ஏருடையன்' என்றால் அதுவும் மனங்கொளக் கிடந்தது.

எழில் என்பது - அழகு அது மிக்குங் குறைந்தும் நீடியும்.

குறுகியும் நேர்ந்தும் உயர்ந்தும் மெலிதாகியும் வலிதாகியும் உள்ள உறுப்புக்கள் அவ்வளவிற் குறையாமல் அமைந்தவழி வருவதோர் அழகு இதுவும், 'அழகியன்' என்றவழி அழகினைப் பிரித்துக் காட்டல் ஆகாமையின் ஈண்டோதப்பட்டது.

சாயல் என்பது -மென்மை அது நாயும் பன்றியும் போலாது மயிலுங் குயிலும் போல்வதொரு தன்மை அதுவும் காட்டலாகாமை யின் ஈண்டோதப்பட்டது.

பெரியோர் ஒழுக்கத்து மாறாயின செய் நாண் என்பது யாமைக்கு நிகழ்வதொரு நிகழ்ச்சி அதுவும் காட்டலாகாது.

மடன் என்பது - பெண்டிர்க் குள்ளதோர் இயல்பு. அஃது உய்த்துணர்ந்து நோக்காது கேட்டவாற்றாலுணரும் உணர்ச்சி. அதுவும் காட்டலாகாது.

நோய் என்பது - துன்பம் இவன் துன்பமுற்றான் என்றவழி அஃதெத்தன்மையது என்றார்க்குக் காட்டலாகாமையின் அதுவும் ஈண்டோதப்பட்டது.

வேட்கை என்பது - யாதானும் ஒன்றைப் பெறல்வேண்டுமெனச் செல்லும் மன நிகழ்ச்சி. இவன் வேட்கையுடையான் என்றவழி அஃது எத்தன்மை என்றார்க்குக் காட்டலாகாமையின் ஈண்டோதப்பட்டது.

நுகர்வு என்பதும் அது.

ஆவயின் வரூஉங் கிளவியெல்லாம் என்றதனான் அன்பு அழுக்காறு பொறை அறிவு என்பனவும் இவைபோல்வனவுங் கொள்க இவையெல்லாம் அகத்திணை புறத்திணை இரண்டற்கும் பொது. இவை காட்டலாகாப் பொருளவாயின் இல்பொருண்மேற் சொன்னிகழ்ந்த வென்றாலோ எனின், இது மேற்கூறப்பட்ட பொருள் பொருளென்பது அறிவித்தல். அவை உள்பொருள் என்பது வருகின்ற சூத்திரத்தான் உரைக்கும்.

244. **இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்**
**அவையில் காலம் இன்மை யான.**

என் - எனின், இதுவும் மேற்கூறப்பட்ட பொருள், பொருள் என்பது அறிவித்தலை நுதலிற்று.

(இ-ள்) தேவருலகத்தினுங் கடல்சூழ்ந்த வுலகத்தினும் மேற் சொல்லப்பட்ட பொருளில்லாத காலம் இன்மையான் உள் பொரு ளென்றே கொள்ளப்படும் என்றவாறு.

**பொருளியல் முற்றிற்று.**

அலகு - 3

## 3. மெய்ப்பாட்டியல்

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், மெய்ப்பாட்டியல் என்னும் பெயர்த்து; மெய்ப்பாடு உணர்த்தினமையாற் பெற்ற பெயர். அஃதியாதோ எனின், முன்னர்க் கூறுதும்.

245. **பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்**
**கண்ணிய புறனே நானான் கென்ப.**

என்பது சூத்திரம்.

இச் சூத்திரம் என்னுதலிற்றோவெனின், பிறர் வேண்டுமாற்றால் கவையுஞ் சுவைக்குறிப்பும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பண்ணைத் தோன்றிய என்பது - விளையாட்டாயத்தின் கண் தோன்றிய என்றவாறு. பண்ணையுடையது பண்ணை என்றாயிற்று.

எண்ணான்கு பொருளுங் கண்ணிய புறனே நானான் செனப என்பது - முப்பத்திரண்டு பொருளையுங் குறித்ததன் புறத்து நிகழும் பொருள் பதினாறு என்று சொல்லுவர் என்றவாறு.

புறத்து நிகழ்வதனைப் புறம் என்றார்.

பண்ணைத் தோன்றிய கண்ணிய புறன் எனப் பெயரெச்ச அடுக்காகக் கூட்டலாம். அன்றியும், எண்ணான்கு பொருளுங் கண்ணிய புறன் என ஒரு சொல் நடையாக ஒட்டித் தோன்றிய என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாக்கினும் அமையும். புறன் என்னும் எழுவாய் நானான்கென்னும் பயனிலை கொண்டு முடிந்தது.

ஈண்டுச் சொல்லப்படுகின்ற பதினாறு பொருளும் கற்று நல் லொழுக்கு ஒழுகும் அறிவுடையார் அவைக்கண் தோன்றாமையாற் பண்ணைத் தோன்றிய என்றான். என்னை? நகைக்குக் காரணமாகிய எள்ளல் அவர்கண் தோன்றாமையின் பிறவும் அன்ன.

முப்பத்திரண்டாவன நகை முதலானவற்றிற் கேதுவாம் எள்ளல் முதலாக விளையாட்டீறாக முன்னெடுத்தோதப்படுகின்றன. அவற்றைக் குறித்த புறனாவன சுவையும் குறிப்பும். வீரம், அச்சம் இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை, நடுவு நிலைமை என்றும், வீரக் குறிப்பு, அச்சக் குறிப்பு, இழிப்புக் குறிப்பு, வியப்புக் குறிப்பு, காமக் குறிப்பு, அவலக் குறிப்பு, உருத்திரக் குறிப்பு, நகைக்குறிப்பு, நடுவு நிலைமைக் குறிப்பு என்று சொல்லப்பட்ட பதி னெட்டினும், நடுவுநிலைமையும் அதன் குறிப்பும் ஒழித்து ஏனைய பதினாறுமாம்.

வியப்பெனினும் அற்புதமெனினும் ஒக்கும். காமமெனினுஞ் சிருங்காரமெனினும் ஒக்கும். அவலம் எனினும் கருணையெனினும் ஒக்கும். உருத்திரம் எனினும் வெகுளியெனினும் ஒக்கும். நடுவுநிலைமை எனினும் மத்திமம் எனினும் சாந்தம் எனினும் ஒக்கம். வீரம் என்பது மாற்றாரைக் குறித்து நிகழ்வது. அச்சம் என்பது அஞ்சத் தகுவன கண்டவழி நிகழ்வது. இழிப்பென்பது இழிக்கத்தக்கன கண்டுழி நிகழ்வது வியப்பென்பது வியக்கத்தக்கன கண்டுழி நிகழ்வது காமம் என்பது இன்ப நிகழ்ச்சியான் நிகழ்வது. அவலம் என்பது இழவு பற்றிப் பிறப்பது உருத்திரம் என்பது அவமதிப்பாற் பிறப்பது. நகை யென்பது இகழ்ச்சி முதலாயினவற்றாற் பிறப்பது. நடுவுநிலைமை யென்பது யாதொன்றானும் விகாரப்படாமை.

அவை இற்றாக, மத்திமமென்பதனை ஈண்டொழித்தது என்னையெனின்,

“மத்திமம் என்பது மாசறத் தெரியிற்
சொல்லப் பட்ட எல்லாச் சுவையொடு
புல்லா தாகிய பொலிவிற் றென்ப,”

“நயனுடை மரபின் இதன்பயம் யாதெனிற்
சேர்த்தி யோர்க்குஞ் சார்ந்துபடு வோர்க்கும்
ஒப்ப நிற்கும் நிலையிற் றென்ப,”

“உய்ப்போ ரிதனை யாரெனின் மிக்கது
பயக்குந் தாபதர் சாரணர் சமணர்
கயக்கறு முனிவர் அறிவரொடு பிறருங்
காமம் வெகுளி மயக்கம் நீங்கிய
வாய்மை யாளர் வகுத்தனர் பிறரும்
அச்சுவை யெட்டும் அவர்க்கில ஆதலின்
இச்சுவை ஒருதலை ஆதலின் இதனை
மெய்த்தலைப் படுக்க இதன் மிகவறிந் தோரே”

என்பது செயிற்றியச் சூத்திரம். இதனானே இது வழக்கிலக்கணம் அன்று என உணரலாம்.

இனிச் சுவை என்பது காணப்படு பொருளாற் காண்போரகத் தின் வருவதொரு விகாரம்.

“இருவகை நிலத்தின் இயல்வது சுவையே”
என்றும்,

“நின்ற சுவையே...
ஒன்றிய நிகழ்ச்சி சத்துவம் என்ப

என்றும்,

**“சத்துவம் என்பது சாற்றுங் காலை**
**மெய்ம்மயிர் குளிர்த்தல் கண்ணீர் வார்தல்**
**நடுக்கங் கடுத்தல் வியர்த்தல் தேற்றம்**
**கொடுங்குரற் சிதைவொடு நிரல்பட வந்த**
**பத்தென மொழிப சத்துவந் தானே.”**

என்றும் சார்பொருள் உரைப்ப.

அவை வருமாறு:

பேயானும் புலியானும் கண்டானொருவன் அஞ்சியவழி மயக்கமுங் கரத்தலும் நடுக்கமும் வியர்ப்பு முளவாமன்றே அவற்றுள் அச்சத்திற் கேதுவாகிய புலியும் பேயும் சுவைப்படுபொருள் அவற்றைக் கண்ட காலந்தொட்டு நீங்காது நின்ற அச்சம் சுவை. அதன்கண் மயக்கமும் கரத்தலும் குறிப்பு. நடுக்கமும் வெயர்ப்புஞ் சத்துவம் இவற்றுள் நடுக்கமும் வியப்பும் பிறர்க்கும் புலனாவன் என்று கொள்க; ஏனைய மன நிகழ்ச்சி. பிறவு மன்ன இவற்றின் பிரிவை நாடக நூலிற் காணலாம்.

**246. நாலிரண் டாகும் பாலுமா ருண்டே.**

என் - எனின்,மேலதற்கொரு புறனடை.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட பதினாறு பொருளும் எட்டென வரும் பக்கமு முண்டு என்றவாறு.

அவையாவன: குறிப்புப் பதினட்டனையுஞ் சுவையுள் அடக்கிச் சுவை யெட்டுமாக்கி நிகழ்தல்.

**247. நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப.**

என் - எனின், மெய்ப்பாடு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நகைமுதலாகச் சொல்லப்பட்ட எட்டும் மெய்ப்பாடு என்று சொல்லுவர் என்றவாறு.

மெய்ப்பாடென்பது யாதோ வென்னின்,

**“உய்ப்போன் செய்தது காணபோர்க் கெய்துதல்**
**மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே”**

எனச் செயிற்றியனார் ஓதுதலின்,

அச்சமுற்றான் மாட்டு நிகழும் அச்சம் அவன்மாட்டுச் சத்து வத்தினாற் புறப்பட்டுக் காண்போர்க்குப் புலனாகுந் தன்மை மெய்ப்பாடெனக் கொள்ளப்படும். மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று அஃதேல், இவ்விலக்கணங் கூத்தினுட் பயன்படல் உண் டாதலின் ஈண்டு வேண்டாவெனின், ஈண்டுஞ் செய்யுட் செய்யுங்காடு சுவைபடச் செய்ய வேண்டுதலின் ஈண்டுங் கூறவேண்டும்.

**“உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளின்**
**மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்”** (தொல்.பொருள் 505)

என இவ்வாசிரியர் மெய்ப்பாடுஞ் செய்யுளுறுப்பென ஓதின்மை உணரலாம்.

நகை என்பது இகழ்ச்சியிற் பிறப்பது. அழுகை என்பது அவலத் திற் பிறப்பது. இளிவரல் இழிப்பிற் பிறப்பது. மருட்கை வியப்பித் பிறப்பது. அச்சம் அஞ்சத் தகுவனவற்றாற் பிறப்பது பெருமிதம் வீரத்திற் பிறப்பது. வெகுளி வெறுக்கத் தக்கனவற்றாற் பிறப்பது. உவகை சிருங்காரத்திற் பிறப்பது.

248. **எள்ளல் இளமை பேதைமை மடனென்று**
**உள்ளப் பட்ட நகைநான் கென்க.**

என் - எனின், நகையும் நகைப்பொருளும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எள்ளுதற்பொருண்மை முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் நகைப்பொருளாம் என்றவாறு.

எனவே, காரணம் பற்றி நகையும் நான்காயின.

**“நகையெனப் படுதல் வகையா தெனினே**
**நகையெனச் செய்வோன் செய்வகை நோக்கி**
**நகையொடு நல்லவை நனிமகிழ் வதுவே”**

என்பதனான் நகைபடுபொருள் கண்டதன்வழி முறுவலொடு வரும் மகிழ்ச்சிப் பொருளாமாறு நகையாவது என்று கொள்ளலாம்.

**“உடனிவை தோன்றும் இடமியா தெனினே**
**முடவர் செல்லுஞ் செலவின் கண்ணும்**
**மடவோர் சொல்லுஞ் சொல்லின் கண்ணும்**

கவற்சி பெரிதுற் றுரைப்போர்க் கண்ணும்
பிதற்றிக் கூறும் பித்தர் கண்ணுஞ்
சுற்றத் தோரை இகழ்ச்சிக் கண்ணும்
மற்று மொருவர்கட் பட்டோர்க் கண்ணுங்
குழவி கூறு மழலைக் கண்ணும்
மெலியோன் கூறும் வலியின் கண்ணும்
வலியோன் கூறும் மெலிவின் கண்ணும்
ஒல்லார் மதிக்கும் வனப்பின் கண்ணும்
கல்லார் கூறுங் கல்விக் கண்ணும்
பெண்பிரி தன்மை யலியின் கண்ணும்
ஆண்பிரி பெண்மைப் பேடிக் கண்ணும்
களியின் கண்ணுங் காவாலிக் கண்ணும்
தெளியிலார் ஒழுகும் கடவுளார் கண்ணும்
ஆரியர் கூறுந் தமிழின் கண்ணும்
காரிகை யறியாக் காமுகர் கண்ணும்
கூனர் கண்ணும் குறளர் கண்ணும்
ஊமர் கண்ணுஞ் செவிடர் கண்ணும்
ஆன்ற மரபின் இன்னுழி எல்லாந்
தோன்றும் என்ப துணிந்திசி னோரே.''

என இவ்வகையெல்லாம் உளவெனச் செயிற்றியர் ஓதுதலின், அவை நான்காகியவாறு என்னையெனின், முடவர் செல்லுஞ் செலவு எள்ளுதற் பொருண்மை யாயிற்று; மடவோர் சொல்லுஞ் சொல் மடைமைப் பொருண்மையாயிற்று. கவற்சி பெரிதுற்றுரைப்போர் கூற்றுப் பேதைமை யாயிற்று; குழவிகூறு மழலை இளமைப் பொருளாயிற்று; ஏனைய வெல்லாம் இவற்றின்பாற் படுதல் காண்க புணர்ச்சி நிமித்தமாகக் கூற்று நிகழ்ந்துழி வரும் நகை இளமை என்பதனாற் கொள்ளலாம். இப்பொருண்மை செயிற்றியத்தில் 'வலியோன் கூறும் மெலிவு என்பதனாற் கொள்ளலாம்.

மடம் என்பதற்கும் பேதைமை என்பதற்கும் வேறுபாடு என்னை யெனின். மடம் என்பது பொருண்மை யறியாது திரியக் கோடல்; பேதைமை யென்பது கேட்டதனை உய்த்துணராது மெய்யாகக் கோடல். எள்ளல் இளமை எனப் பொதுப்பட்டு நின்றமையால் தன் மாட்டு நிகழும் வழியுங் கொள்ளலாம்.

### உதாரணம்

"நகையா கின்றே தோழி" என்னும் நெடுந்தொகைப் பாட்டினுள்,

''தண்துறை ஊரன் திண்தார் அகலம்
வதுவை நாளணிப் புதுவோர்ப் புணரிய
பரிவொடு வரூஉம் பாணன் தெருவிற்
புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி யாழிட்
டெம்மனைப் புகுதந தோனே அதுகண்டு
மெய்ம்மலி உவகை மறையினென் எதிர்சென்

**றிம்மனை அன்ற.ஃ. தும்மனை யென்ற**
**என்னுந் தன்னும் நோக்கி**
**மம்மர் நெஞ்சினோன் தொழுதுநின் றதுவே"** (அகம்.56)

எனக் கூறி "நகையாகின்றே தோழி" என்றமையின் எள்ளல் பற்றி நகை தோன்றியது.

ஏனையவும் வந்தவழிக் காணலாம்.

249. **இழிவே இழவே அசைவே வறுமையென**
**விளிவில் கொள்கை அழுகை நான்கே.**

என் - எனின், இ.ஃ.து அழுகையாமாறும் அதற்குப் பொருளு முணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இழிவு முதலாகச் சொல்லப்பட்ட நான்கு பொருண் மையும் அழுகைக்குப் பொருளாம் என்றவாறு.

இழிவு என்பது - பிறர் தன்னை யெளியன் ஆக்குதலார் பிறப்பது.

இழவாவது -உயிரானும் பொருளானும் இழத்தல்.

அசை வென்பது -தளர்ச்சி, அது தன்னிலையிற் றாழ்தல்.

வறுமை என்பது -நல்குரவு.

இவை ஏதுவாக அழுகை பிறக்கும் என்றவாறு.

இதுவுந் தன்மாட்டுற்றதனானும் பிறர்மாட்டுற்றதனானும் பிறக்கும்.

**"கவலை கூர்ந்த கருணையது பெயரே**
**அவல மென்ப அறிந்தோர் அதுதான்**
**நிலைமை யிழந்து நீங்குதுணை யுடைமை**
**தலைமை சான்ற தன்னிலை யழிதல்**
**சிறையணி துயரமொடு செய்கையற் றிருத்தல்**
**குறைபடு பொருளோடு குறைபா டெய்தல்**
**சாப மெய்தல் சார்பிழைத்துக் கலங்கல்**
**காவ லின்றிக் கலக்கமொடு திரிதல்**
**கடகந் தொட்டகை கயிற்றொடு கோடல்**
**முடியுடைச் சென்னிபிறர் அடியுறப் பணிதல்**
**உளைப்பரி பெருங்களி றூர்ந்த சேவடி**
**தளைத்தி ளைத்தொ லிப்பத் தளர்ந்தவை**
**நிறங்கிளர் அகல நீறொடு சேர்த்தல்**
**மறங்கிளர் கயவர் மனந்தவப் புடைத்தல்**
**கொலைக்களங் கோட்டங் கோல்முனைக் கவற்சி**

**அலைக்கண் மாறா அழுகுரல் அரவம்**
**இன்னோா் அன்னவை இயற்பட நாடித்**
**துன்னினா் உணா்க துணிவறிந் தோரே"**

**"இதன் பயம் இவ்வழி நோக்கி**
**அசைந்தனா் ஆகி அழுத லென்ப."**

என்பன செயிற்றிய மாகலின் இவையெல்லாம் இந்நான்கனுள் அடங்குமாறு அறிந்துகொள்ளலாம். இதற்குச் செய்யுள்.

**"ஐயோ எனின்யான் புலியஞ் சுவலே**
**அணைத்தனன் கொளினே அகன்மாா்பெடுக்க வல்லேன்**
**என்போற் பெருவிதுப் புறுக நின்னை**
**இன்னா துற்ற அறனில் கூற்றே**
**நிரைவளை முன்கை பற்றி**
**வரை நிழற் சோ்கம் நடந்திசிற் சிறிதே."** (புறம்.255)

இ∴து இழிவுபற்றி வந்த அழுகை.

ஏனையவும் வந்தவழிக் கண்டுகொள்ளலாம்.

250. **மூப்பே பிணியே வருத்த மென்மையொடு**
**யாப்புற வந்த இளிவரல் நான்கே.**

என் - எனின், இளிவரலாமாறும் அதற்குப் பொருளும் உணா்த் துதல் நுதலிற்று.

(இ-ள்) மூப்பு முதலாகச் சொல்லப்பட்ட நான்கு பொருண்மை யும் இளிவரலுக்குப் பொருளாம் என்றவாறு.

இவை நான்குந் தன்மாட்டுத் தோன்றினும் பிறா்மாட்டுத் தோன்றினும் நிகழும்.

உதாரணம்

**"தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா**
**வீழா இறக்கும் இவள்மாட்டும் காழிலா**
**மம்மா்கொள் மாந்தா்க் கணங்காகும் தன்கைக்கோல்**
**அம்மனைக்கோல் ஆகிய ஞான்று"** (நாலடி. 14)

என்றது பிறா்மாட்டு மூப்புப்பற்றி இழிப்புப் பிறந்தது.

பிணி யென்பது - பிணியுறவு சுண்டு இழித்தல் அதனானே உடம்பு தூயதன்றென இழித்தலுமாம்.

**“மாக்கேழ் மடநல்லாய் என்றரற்றுஞ் சான்றவா்**
**நோக்கார்கொல் நொய்யதோர் துச்சிலை - யாக்கைக்கோர்**
**ஈச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே**
**காக்கை கடிவதோர் கோல்.”** (நாலடி. 41)

இ.ஃ.து உடம்பினை அருவருத்துக் கூறுதல்.

வருத்தமென்பது - தன்மாட்டும் பிறர்மாட்டும் உளதாகிய வருத்தத்தானும் இழிப்புப் பிறக்கும் என்றவாறு.

**உதாரணம்**

**“செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்**
**உற்றார் அறிவதொன் றன்று.”** (குறள். 1255)

இது பிறன் வருத்தங் கண்டு இழிப்புப் பிறந்தது.

**உதாரணம்**

**“தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇயர்**
**கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்**
**மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்**
**தாமிரந் துண்ணு மளவை**
**ஈன்ம ரோவிவ் வுலகத் தானே.”** (புறம்.74)

இது தன்மாட்டு வருத்தத்தானே இழிப்புப் பிறந்தது.

மென்மை என்பது -நல்குரவு.

**“அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்**
**பிறன்போல நோக்கப் படும்.”** (குறள். 1047)

**“இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த**
**சொற்பிறக்கும் சோர்வு தரும்.”** (குறள். 1044)

என வரும்.

இன்னும் ‘யாப்புற’ என்பதனான் இழிக்கத்தன பிறவுங் கொள்ளலாம். அவை நாற்றத்தானும் தோற்றத்தானும் புல்லி ன. இவற்றிற் கெல்லாஞ் செய்யுள் வந்தவழிக் காணலாம்.

251. **புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு**

மதிமை சாலா மருட்கை நான்கே.

என் - எனின், இது மருட்கையாமாறும் அதன் பொருண்மை யும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) புதுமை முதலாகச் சொல்லப்பட்ட நான்கினானும் மருட்கை பிறக்கும் என்றவாறு.

மதிமை சாலா மருட்கை என்றமையால் அறிவுடையார் இப்பொருட்கண் வியவார் என்று கொள்ளலாம்.

புதுமை ஆவது -யாதொன்றானும் எவ்விடத்தினும் எக்காலத் தினும் தோன்றாததொரு பொருள்தோன்றியவழி வியத்தல். அது கந்தருவர் அந்தரம் போவதுகண்டு வியத்தல் போல்வன.

பெருமை என்பது - பண்டு கண்ட பொருள்கள் போலா பொருள்கள் அவ்வளவிற் பெருத்தன சுண்டு வியத்தல். அவை மலையும் யானையும் செல்வமும் முன்கண்ட அளவின் மிக்கன கண்டவழி வியப்பு வரும்.

சிறுமை என்பது - பிறவும் நுண்ணியன கண்டு வியத்தல். அது கடுகின்கட் பல துளை' போல்வன.

ஆக்கம் என்பது -ஒன்றன் பரிணாமங்கண்டு வியத்தல் அது தன்னளவின்றி நன்னிலஞ் சார்பாகத் தோன்று மரமுதலாயின ஆகியவழி வியத்தலும் நல்கூர்ந்தான் யாதொன்று மிலாதான் ஆக்கமுற்றானாயின், அதற்குக் காரண முணராதான் அது கண்டு வியத்தலும், இளையான் வீரங்கண்டு வியத்தலுமாம் பிறவும் உலகத்து வியக்கத்தகுவன எல்லாம் இவற்றின்பாற் படுத்திக் கொள்ளலாம்.

'இருந்தவேந்தன்' என்னும் அகப்பாட்டினுள்,

**"............பெருந்தேர் யானும்**
**ஏறிய தறிந்தன் றல்லது வந்தவாறு**
**நனியறிந் தன்றோ இலனே தாஅய்**
**முயற்பறா உகளும் முல்லையம் புறவிற்**
**கவைக்கதிர் வரகின் சீறூர் ஆங்கண்**
**மெல்லியல் அரிவை இல்வயின் நிறீஇ**
**இழிமின் என்றநின் மொழிமருண் டிசினே"** (அகம். 384)

என்றது வியந்தவாறு.

**"பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்**
**ஒருமுலை இழந்தாளோர் திருமா பத்தினிக்**
**கமரர்க் கரசன் தமர்வந் தீண்டியவள்**
**காதற் கொழுநனைக் காட்டி அவளொடெம்**
**கட்புலங் காண விட்புலம் போயது**
**இறும்பூது போலும்அஃ. தறிந்தருள் நீயென"** (சிலப். பதிகம்)

என்றது புதுமை.

252. **அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்**
**பிணங்கல் சாலா அச்சம் நான்கே.**

என் - எனின், அச்சமாகிய மெய்ப்பாடும் அதன் பொருளும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அணங்கு முதலாகச் சொல்லப்பட்ட நான்கினும் பிறக் கும் மாறுபடுதல் அமையாத அச்சம் நால்வகைப்படும் என்றவாறு.

பிணங்கல் சாலுமாயின் நடுக்கம் முதலாயின உளவாகா; அவை பிணங்கல் சாலாத வழியே உளவாவ தென்று கொள்ளலாம்.

அவை நாலச்சமும் வருமாறு:-

கொலைகளவுகட்காமம் பொய்யென்பனவற்றை நிகழ்த்தின வர்க்கு அரசனான் அச்சம் வருதலின் அவனும் அஞ்சப்படும் பொருளாயினான்.

**உதாரணம்**

**"மையல் வேழ மடங்கலின் நெரிதர**
**உய்விடம் அறியேம் ஆகி ஒய்யெனத்**
**திருந்துகோல் எல்வளை தெளிர்ப்ப நாண்மறந்து**
**விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திக்**
**குருறு மஞ்ஞையின் நடுங்கி"** (குறிஞ்சிப்.165-169)

என வரும். பிறவுமன்ன.

253. **கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்**
**சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே.**

என் - எனின், பெருமிதமாமாறும் அதன் பொருண்மையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கல்வியானுந் தறுகண்மையானும் புகழ்மையானும் கொடையானும் பெருமிதம் நால்வகைப்படும் என்றவாறு.

இவை நான்கும் பிறனொருவனின் மிகுத்தவழிப் பிறக்கு மகிழ்ச்சி பெருமிதம் என்று கொள்ளலாம்.

பெருமிதமாவது - தன்னைப் பெரியனாக நினைத்தல்.

**"உறுசுடர் வாளோ டொருகால் விலங்கின்**
**சிறுசுடர்முற் பேரிருளாங் கண்டாய் - எறி சுடர்வேல்**

**தேங்குலாம் பூந்தெரியல் தேர்வேந்தே நின்னொடு**
**பாங்கலா மன்னர் படை”** (புறப்.134)

இது வீரம் பற்றி வந்தது. பிறவு மன்ன.

254. **உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன**
**வெறுப்ப வந்த வெகுளி நான்கே.**

என் - எனின், வெகுளியாமாறும் அதற்குப் பொருளும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உறுப்பறை முதலாகச் சொல்லப்பட்ட நான்கனானும் வெகுளி பிறக்கும் என்றவாறு.

இப்பொருள் நான்குந் தான் பிறரைச் செய்யுங்காலும் வெகுளி பிறக்கும்; தன்னைப் பிறர் செய்யுங்காலும் வெகுளி பிறக்கும் என்று கொள்ளலாம்.

உறுப்பறையாவது -அங்கமாயினவற்றை அறுத்தல்.

குடிகோளாவது - கீழ்வாழ்வாரை நலிதல்.

அலை என்பது - வைதலும் புடைத்தலும்.

கொலை என்பது - கொல்லுதற் கொருப்படுதல்.

ஊடற்கண்ணும் வெகுளி தோற்றுமால் எனின், அஃது இன்பத்திற்குக் காரணமாதலால் தலைமகள் புருவநெரிவும் வாய்த்துடிப்புங் கண்ட தலைமகற்கு வெகுட்சி பிறவாது உவகை பிறக்கும். தலைமகள் வெகுளுவனாயின் அதன்பாற்படும்.

**“உறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்**
**சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை**
**அருஞ்சமந் ததையத் தாக்கி முரசமொ**
**டொருங்ககப் படேஎ னாயின்”** (புறம்.72)

என்பது வெகுளிபற்றி வந்தது பிறவுமன்ன,

255. **செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென**
**அல்லல் நீத்த உவகை நான்கே.**

என் - எனின் உவகை யாமாறும் அதன்பொருளும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) செல்வ நுகர்ச்சியானும், கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறி யும் ஐம்புலன்களான் நுகர்தலானும், மகளிரொடு புணர் சோலையும் ஆறும் புகுந்து விளையாடும் விளையாட்டினானும் உவகை பிறக்கும் என்றவாறு. புணர்தலானுஞ்

“ஒத்த காமத் தொருவனும் ஒருத்தியும்
ஒத்த காமத் தொருவனொடு பலரும்
ஆடலும் பாடலுங் கள்ளுங் களியும்
ஊடலும் உணர்தலுங் கூடலு மிடைந்து
புதுப்புனல் பொய்கை பூம்புனல் என்றிவை
விருப்புறு மனத்தொடு விழைந்து நுகர்தலும்
பயமலை மகிழ்தலும் பனிக்கடல் ஆடலும்
நயனுடை மரபின் நன்னகர்ப் பொலிதலும்
குளம்பரிந் தாடலும் கோலஞ் செய்தலும்
கொடிநகர் புகுதலும் கடிமனை விரும்பலும்
துயிற்கண் இன்றி இன்பந் துய்த்தலும்
அயிற்கண் மடவார் ஆடலுள் மகிழ்தலும்
நிலாப்பயன் கோடலும் நிலம்பெயர்ந் துறைதலும்
கலம்பயில் சாந்தொடு கடிமல ரணிதலும்
ஒருங்கா ராய்ந்த இன்னவை பிறவும்
சிருங்கா ரம்மென வேண்டு இதன்பயன்
துன்பம் நீங்கத் துகளறக் கிடந்த
இன்பமொடு புணர்ந்த ஏக்கமுத் தம்மே.”

எனச் செயிற்றியனார் விரித்தோதினாராயினும் இவையெல்லாம் இந்நான்கனுள் அடங்கும்.

“தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு” (குறள்.1107)

என்றவழித் தம்மிலிருந்து தமது பாத்துண்ட செல்வ நுகர்ச்சி முயக்கம் - புணர்பு.

“வையை வருபுனல் ஆடல் இனிதுகொல்
செவ்வேற்கோ குன்ற நுகர்தல் இனிதுகொல்
வைவ்வேல் நுதியன்ன கண்ணார் துணையாக
எவ்வாறு செய்வாங்கொல் யாமென நாளும்
வழிமயக் குற்று மருடல் நெடியான்
நெடுமாடக் கூடற் கியல்பு” (பரிபாடல்)

என வரும். பிறவுமன்ன.

256. ஆங்கவை ஒருபால் ஆக வொருபால்
உடைமை இன்புறல் நடுவுநிலை யருளல்
தன்மை அடக்கம் வரைதல் அன்பெனாஅக்
கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்
நாணல் துஞ்ச லரற்றுக் கனவெனாஅ
முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை
கருதல் ஆராய்ச்சி விரைவுயிர்ப் பெனாஅக்
கையா றிடுக்கண் பொச்சாப்புப் பொறாமை

**வியர்த்தல் ஐயம் மிகைநடுக் கெனாஅ**
**அவையும் உளவே அவையலங் கடையே.**

என் - எனின், மேற்சொல்லப்பட்ட எண்வகை மெய்ப்பாடும் ஒழிய வேறுபட்டுவருவன சிலமெய்ப்பாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்டன ஒருபக்கமாக, ஒருபக்கமுடைமை முதலாகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டும் உள, அவையல்லாதவிடத்து என்றவாறு.

எனவே, ஆமிடத்து இவை யங்கம் ஆகும்.

உடைமையாவது - யாதானு மொருபொருளை உடையனாயி னான் வருதலாகும் மன நிகழ்ச்சி.

**"நெடுநல் யானையுந் தேரு மாவும்**
**படையமை மறவரு முடையம் யாமென்**
**றுறுதுப் பஞ்சாது"** (புறம்.72)

என வரும்.

இன்புறலாவது - நட்டாராகிப் பிரிந்து வந்தோரைக் கண்டவழி வருவதொரு மன நிகழ்ச்சி போல்வது.

**"கெடுத்துப்படு நன்கலம் எடுத்துக் கொண்டாங்கு"** (நற்றிணை. 182)

**"வினைமுடித் தன்ன இனியோள்"** (நற்றிணை. 3)

**"விட்டகன் றுறைந்த நட்டோர்க் கண்ட**
**நாளினும் இனிய நல்லாள்"**

எனக் காம நுகர்ச்சியின்றி வரும் இன்புறுதல்.

நடுவுநிலையாவது - ஒருமருங்கு ஓடாது நிகழும் மன நிகழ்ச்சி.

**"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்**
**கோடாமை சான்றோர்க் கணி"** (குறள். 118)

என வரும்.

அருளாவது - எல்லாவுயிர்க்கும் அளிசெய்தல்.

"அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்" (கலித்.11)

என்றாற்போல வருவது.

தன்மை யென்பது - சாதியியல்பு.

பார்ப்பார் அரசர் இடையர் குறவர் என்றின்னோர்மாட்டு ஒருவரையொருவர் ஒவ்வாமற் கிடக்கு மியல்பு அது மெய்க்கடமை மீன் கண் வேறுபட்டுவருதலின் மெய்ப்பாடாயிற்று.

**"வயலைக் கொடியின் வாடிய மருங்குல்**
**உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்"** (புறம். 315)

என்றும்.

**"புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய**
**எய்கணை கிழித்த பகட்டெழில் மார்பின்**
**மறலி அன்ன களிற்றின்மிசை யோனே"** (புறம்.13)

என்றும்,

**"காயாம்பூக் கண்ணிக் கருந்துவ ராடையை**
**மேயு நிரைமுன்னர்க் கோலூன்றி நின்றாயோர்**
**ஆயனை யல்லை"** (கலித்.108)

**"தேனொடு நீடு மயிற்குற மாக்கள்"**

என்றும் வரும்.

அடக்கம் என்பது மனமொழிமெய்யி னடங்குதல். அது பணிந்த மொழியும் தானை மடக்கலும் வாய்புதைத்தலும் போல்வன.

**"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்"** (குறள். 126)

என்றும்,

**"யாகாவா ராயினும் நாகாக்க"** (குறள். 127)

என்றும்,

**"நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்"** (குறள். 124)

என்றும் வருவன. இதுவும் அடங்காமை போலாமையின் மெய்ப்பாடாயிற்று.

வரைவு என்பது - செய்யத் தகுவனவும் தவிரத் தகுவனவும் வரைந்து ஒழுகும் ஒழுக்கம். அது,

**"பெண்விழைந்து பின்செலினும் தன்செலவிற் குன்றாமை**
**கண்விழைந்து கையுறினுங் காதல் பொருட்கின்மை"** (திரிகடுகம்.29)

என்றாற்போல வருவன.

அன்பு என்பது - பயின்றார்மாட்டுச் செல்லுங் காதல்.

**"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை**
**அகத்துறுப் பன்பி லவர்க்கு"** (குறள். 79)

என்பதனான் அறியலாம்.

கைம்மிகள் என்பது - குற்றமாயினுங் குணமாயினும் அளவின் மிகுதல்.

அது நிலையின் வேறுபடுதலின் மெய்ப்பாடாயிற்று. கையென் பது அளவுகுறித்ததோர் இடைச் சொல்.

**"காதல் கைம்மிகல்"** (தொல். மெய்ப்பாட்டியல்.23)

என்றும்,

**"குணனிலனாய்க் குற்றம் பலவாயின்"** (குறள். 868)

என்றும் இவ்வாறு வருவன.

நலிதல் என்பது - பிறரை நெருக்குதல்.

அதன்கண் நிகழும் மனநிகழ்ச்சி நலிதலாயிற்று. இதுவும் மேற்சொல்லப்பட்ட எட்டும் இன்மையின் ஈண்டு ஓதப்பட்டது.

"பகைநலியப் பாசறையுளான்" (நெடுநல். இறுதிவெண்பா)

என வரும். பிறவும் அன்ன.

சூழ்ச்சி என்பது - எண்ணம்.

**"சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்**
**சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்"** (குறள். 445)

இதுவுமொரு மனநிகழ்ச்சி.

வாழ்த்தல் என்பது - பிறனை வாழ்த்துதல்.

அதுவும் மேற்கூறப்பட்டன போலாமையான் வேறொரு மெய்ப்பாடாக ஓதப்பட்டது.

"வாழியாதன் வாழி" (ஐங்குறு. 1) என்றும், "எங்கோ வாழிய குடுமி" (புறம். 9) என்றும் இவ்வாறு வருவழி ஆண்டு வரும் மன நிகழ்ச்சி மெய்ப்பாடாம். அஃதேல் வைதலும் மெய்ப்பாடாதல் வேண்டும் எனின் அது வெகுட்சியின் முதிர்வு. இஃது அன்பின் முதிர்வாகாதோ எனின், அன்பின்றியும் அரசன் முதலாயினாரைச் சான்றோர் வாழ்த்துதலின் அடங்காதென கொள்ள வேண்டும்.

நாணல் என்பது - தமக்குப் பழி வருவன செய்யாமை.

"பிறர்பழியுந் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி என்னு முலகு" (குறள். 1015)

**"நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர்"** (குறள். 1017)

என வரும்.

துஞ்சல் என்பது - உறக்கம் அதுவும் உறங்காமை போலாமையின் மெய்ப்பாடாயிற்று.

**"...............முனிவின்றி
நனந்தலை யுலகமுந் துஞ்சும்"** (குறுந்.6)

என வரும்.

அரற்று என்பது - உறக்கத்தின்கண் வரும் வாய்ச்சோர்வு.

அதுவும் ஏனைச்சொல்லின் வேறுபடுதலின் அரற்றென ஒரு மெய்ப்பாடாயிற்று. முன் உறக்கம் வைத்தலானும் பின் கனவு வைத்தலானும் இப்பொருள் உரைக்கப்பட்டது.

**"பாயல்கொண் டென்தோட் கனவுவா ராய்கோல்
தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ
விடுமருப்பி யானை விலங்குதேர்க் கோடும்
நெடுமலை வெஞ்சுரம் போகி நடுநின்று
செய்பொருள் முற்று மளவு"** (கலித்.24)

என வரும்.

இது, களவியலின் பாற்படுமெனின் அரற்றென்பது ஒரு பொருளைப் பலகாற் கூறுதல்; அஃது அப்பொருண்மேற் காதலாற் கூறுதலின் அதுவுமோர் மெய்ப்பாடாயிற்றெனவுமாம்.

**“பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்**
**உன்னேனென் றூழுலக்கை பற்றினேற் - கன்னோ**
**மனனொடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்**
**புனல்நாடன் பேரே வரும்”** (முத்தொள். 104)

என வரும் என்பது - கொள்ளலாம். கனவுநிலை நனவுபோலாமையின் மெய்ப்பாடாயிற்று.

**“நனவினாற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்**
**கண்ட பொழுதே இனிது”** (குறள். 1215)

என வரும்.

முனிதல் என்பது - வெறுத்தல்.

**“காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி**
**வாலிழை மகளிர்த் தழீஇச் சென்ற**
**மல்லல் ஊரன் எல்லினன் பெரிதென**
**மறுவஞ் சிறுவர் தாயே**
**தெறுவது அம்மஇத் திணைப்பிறத் தல்லே”** (குறுந்.45)

எனக் குடிப்பிறத்தலை வெறுத்தவாறு காணலாம்.

நினைத்தல் என்பது கழிந்ததனை நினைத்தல் அது மறந்தாங்கு மறவாது பின்புந் தோற்றுதலின் மெய்ப்பாடாயிற்று.

**“நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்**
**சினைப்பது போன்று கெடும்.”** (குறள். 1203)

வெரூஉதல் என்பது - அச்சம் போல நீடுநில்லாது கதுமெனத் தோன்றி மாய்வதொரு குறிப்பு: அதனைத் துணுக்கு என்றானென்பது.

**“ஒருஉநீ எங்கூந்தல் கொள்ளல்யாம் நின்னை**
**வெரூஉதுங் காணுங் கடை.”** (கலித்.87)

என்றவழி அஞ்சத்தகுவது கண்டு அஞ்சுதலின்மையும் அஞ்சினார்க் குள்ள வேறுபாடு அதன்பின் நிகழாமையுங் காணலாம்.

மடி என்பது - சோம்புதல்.

**"மடிமை குடிமைக்கண் தங்கின் தன்ஒன்னார்க்**
**கடிமை புகுத்தி விடும்."** (குறள். 608)

என்றவழி மடி யென்பதொரு மெய்ப்பாடுண்மை அறியலாம்.

கருதல் என்பது - குறிப்பு.

**"குறிக்கொண்டு நோக்காமை அல்லா லொருகண்**
**சிறக்கணித்தாள் போல நகும்."** (குறள்.1095)

என்றவழிக் குறிக்கோள் என்பதொரு மெய்ப்பாடுண்மை அறியலாம்.

ஆராய்ச்சி என்பது -ஒரு பொருளைக் குறித்து அதன் இயல்பு எத்தன்மைத்தென வாராய்தல்.

ஆராய்தல் எனினுந் தெரிதல் எனினுந் தேர்தலெனினும் நாடலெனினும் ஒக்கும்.

**'நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த'** (குறள். 511)

**'ஆயும் அறிவினர்'** (குறள் 918)

**'தேரான் பிறனைத் தெளிந்தான்'** (குறள் 508)

எனவும் ஆராய்த லென்பது தோற்றியவாறு காணலாம்.

விரைவு என்பது - ஒருபொருளைச் செய்ய நினைத்தான் அது தாழ்க்கில் அப் பயன் எய்தான்; கடிதின் முடித்தல் வேண்டுமெனக் குறித்த மனநிகழ்ச்சி.

**"கன்றமர் கறவை மான**
**முன்சமத் தொழிந்ததன் தோழற்கு வருமே"** (புறம். 275)

**"போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ"** (புறம். 82)

என வரும். பிறவுமன்ன,

உயிர்ப்பு என்பது - முன்புவிடும் அளவினன்றிச் சுவாதம் நீள விடுதல்.

**"………………….பானாட்**
**பள்ளி யானையி னுயிர்த்தென்**
**உள்ள மின்னுந் தன்னுழை யதுவே"** (குறுந்.142)

என வரும்.

கையாறு என்பது காதலர் பிரிந்தால் வருந் துன்பமும் அந்திக ரனவும் வருவது

**“தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளான்**
**கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ”** (கலித்.24)

என்றவழிக் கையாறென்பதும் ஒரு மெய்ப்பாடாயிற்று.

இடுக்கண் என்பது துன்பமுறுதல்.

மேலதனோடு இதனிடை வேறுபாடு என்னை யெனின், கையாறு என்பது இன்பம் பெறாமையான் வருந்துன்பம்; இடுக்கணாவது துன்பமாயின் வந்துறுதல்

**“அடுக்கி வரினு மழிவிலா னுற்ற**
**இடுக்கண் இடுக்கட் படும்”** (குறள். 625)

என்றவழி இடுக்கணென்பது வருவதொன்றாகக் கூறியவாறு காண்க.

கையாறென்பது - மனத்தின்கண் நிகழ்வதொரு மெய்ப்பாடு.

இடுக்கணென்பது - மெய்யானுந் தோற்றுவதொரு மெய்ப்பாடு.

பொச்சாப்பு என்பது - மறத்தல்.

**“பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த**
**மாசறு காட்சி யவர்”** (குறள்:199)

என்பதனாற் பொச்சாப்பு மறத்தலாயிற்று.

பொறாமை என்பது - பிறர்க்கு ஆக்கமுதலாயின கண்டவழி யதனைப் பொறாது நடக்கும் மனநிகழ்ச்சி. அதனை அழுக்காறு என்ப.

**“அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்**
**தீயுழி உய்த்து விடும்.”** (குறள். 168)

என்றவழி அழுக்காறு என ஒரு மெய்ப்பாடு உளதாகியவாறு கண்டு கொள்ளலாம்.

வியர்த்தல் என்பது - தன்மனத்தின் வெகுட்சி தோன்றிய வழிப் பிறப்பதொரு புழுக்கம்.

“பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்” (குறள். 487)

இதன்கண் உள்வோ்ப்பா் என்றதனான் மனநிகழ்ச்சி ஆகியவாறு காணலாம்.

ஐயம் என்பது - ஒரு பொருளைக் கண்டவழி யிதுவெனத் துணியாத நிலைமை.

**“அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
**மாதா்கொல் மாலுமென் நெஞ்சு.”** (குறள். 1081)

என் வழி ஐயம் மனத்தின்கண் நிகழ்ந்தவாறு காணலாம்.

மிகை என்பது - ஒருவனை நன்கு மதியாமை.

**“மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்**
**தகுதியான் வென்று விடல்.”** (குறள். 158)

இதனுள் மிகுதி யென்பது நன்கு மதியாமையாம்.

நடுக்கம் என்பது - யாதானும் ஒரு பொருளை இழக்கின்றோ மென வரு மனநிகழ்ச்சி.

**“கொடுங்குழாய் துறக்குநா் அல்லா்**
**நடுங்குதல் காண்மாா் நகைகுறித் தனரே”** (கலித்.13)

என வரும். இத்துணையும் கூறப்பட்டன அசுத்திற்குட் புறத்திற்கும் பொதுவென்று கொள்ளலாம்.

257. **புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியா்த்தல்**
**நகுநய மறைத்தல் சிதைவுபிறா்க் கின்மையொடு**
**தகுமுறை நான்கே ஒன்றென மொழிப.**

என் - எனின், மேல் அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொது வாகிய மெய்ப்பாடு உணா்த்தி, இனி அகத்திற்கே யுரியன உணா்த்து கின்றான்; முற்பட்ட அவத்தை பத்தினும் முதலவத்தைக்கண் பெண் பாலாா் குறிப்பினான் வரும் மெய்ப்பாடு உணா்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) புகுமுகம் புரிதல் என்பது - தலைமகன் புணா்ச்சிக் குறிப்பினனாய்ப் புகுது முகத்தினை மாறுபடாது பொருந்துதல்.

அ.்.தாவது,

**“கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்**
**நோக்கம்இம் மூன்றும் உடைத்து”** (குறள். 1085)

என்றாற்போலக் கூறியவழி ஒருவாது நிற்றல்.

பொறிநுதல்வியர்த்தல் என்பது - அவ்வழி முகம்புக்கு அவனைப் பொருந்திய தலைமகள் உட்கும் நாணும் வந்துழி வரும் நுதல்வியர்ப்பு.

நகுநய மறைத்தல் என்பது - அதன் பின்னர்த் தலைமகன் கூறு வன கேட்டு நகை வந்துழி நயத்தலாகிய விருப்பத்தினைப் புலனர் காமை மறைத்தல்.

சிதைவு பிறர்க்கின்மை என்பது - தன்மனனழிவு பிறர்க்குப் புலனாகாமை நிற்றல். ஒடு எண்ணின்கண் வந்தது.

தகுமுறை நான்கே யொன்றென மொழிய என்பது இவ்வாறு தகுதியுடையவாய் முறைப்பட வருவன நான்கும் முதல் அவத்தைக் அண் நிகழும் மெய்ப்பாடு என்றவாறு.

**258. கூழை விரித்தல் காதொன்று களைதல்**
**ஊழணி தைவரல் உடைபெயர்த் துடுத்தலொடு**
**கெழீஇய நான்கே இரண்டென மொழிப.**

என் - எனின், இரண்டாம் அவத்தையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கூழைவிரித்தல் முதலாகச் சொல்லப்பட்ட முறைமை யுடைய நான்கும் இரண்டாம் அவத்தை மெய்ப்பாடு என்றவாறு.

கூழை விரித்தலாவது - மேல் நகுநயமறைத்தாள் காதன் மேல் வேட்கை செல்லுமாயின் வாளாது நிற்றலாற்றாது மயிரினைக் குலைத்தல்,

காதொன்று களைதல் என்பது - காதிலணிந்த தொன்றை விழப்பண்ணியதனைத் தேடுகின்றாள் போல நிற்றல்.

ஊழணி தைவரல் என்பது - முறைமுறையாக அணிந்த வணியைத் தைவருதல் என்றவாறு.

உடை பெயர்த்துடுத்தல் என்பது - ஆடையைக் குலைத்துடுத்தல்.

அவைநான்குங் காமத்திற்குறியிலாதார் தலைமக்கள்முன் செய்யாமையாற் றனது காமக் குறிப்பினானும் அவள் வாளாது திற்பின் இதற்குக் காரணம் என்னையெனப் பிறர் ஐயப்படாமற் சிறிது பொழுதாயினும் இவ்விடை நிற்கலாகும் எனவும் இவை நிகழ்த்தும் என்றவாறு.

**259. அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்**
**இல்வலி யுறுத்தல் இருகையும் எடுத்தலொடு**
**சொல்லிய நான்கே மூன்றென மொழிப.**

என் - எனின், மூன்றாம் அவத்தைக்கண் நிகழும் மெய்ப்பாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அல்குல் தைவரல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் மூன்றாம் அவத்தை மெய்ப்பாடென்க என்றவாறு.

அல்குல் தைவரல் என்பது - மேல் உடைபெயர்த்துடுத்தவள் அதனைப் பேணும் மதிப்பு உள்வழி தம்மைப் பேணுதல் பெண் டிர்க்கு அழகு அணிந்தவை திருத்தலும் அவ்வாறே கொள்ளலாம்.

இல்வலி யுறுத்தல் என்பது - தமது இல்லத்தோர் வலியுறுத்தல். அது சாரநினைத்தாரைத் தமது இற்பிறப்புச் சொல்லி இசை வில்லாரைப் போல மறுத்துக் கூறுதல்.

இருகையு மெடுத்தல் என்பது - அவ்வழி மறுத்த வாய்பாட்டாற் கூறினும் இரண்டு கையிளையும் பிறிதொரு காரணம் பற்றிக் கிளர்த்தல் தலைமக்கள் முன்னர்ப் பெண்டிர் கை கிளர்த்தாராதலாற் புணர்ச்சிக் கொருப்பட்ட வுள்ளத்தாள் கிளர்த்து மென்க. இதனாற் பயன் நாண் நீங்கல்.

**260. பாராட் டெடுத்தல் மடந்தப வுரைத்தல்**
**ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல்**
**கொடுப்பவை கோடல் உளப்படத் தொகைஇ**
**எடுத்த நான்கே நான்கென மொழிப.**

என் - எனின், நான்காம் அவத்தைக்கண் வரும் மெய்ப்பாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பாராட்டெடுத்தல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் நான்காமவத்தைக்கண் நிகழும் மெய்ப்பாடென கொள்ளலாம்.

பாராட்டெடுத்த லாவது - தலைமகன் நின்ற நிலையையுங் கூறிய கூற்றையும் தனித்த வழியும் எடுத்து மொழிதல்.

மடந்தப வுரைத்தல் என்பது - பெண்டிரது இயல்பாகிய மடப்பங் கெடச் சில கூறுதல். அது தலைமகன் கூற்று நிகழும் வழி யதற்கு மாற்றங் கொடுத்தலன்றித் தன் வேட்கை தோன்றக் கூறுஞ் சொல்.

ஈரமில் கூற்ற மேற்றலர் நாணல் என்பது - ஊராருஞ் சேரியாருங் கூறும் அருளில்லாத கூற்றைக் கேட்டு அலர் ஆயிற்றென நாணுதல்.

கொடுப்பவை கோடல் என்பது - கண்ணியாயினுந் தழையாயினும் பிறவாயினும் தலைமகன் கொடுத்தவற்றைக் கோடல் மனத் தினான் உரிமை பூண்டாளல்லது பிறன் பொருள் வாங்காமையின் இதுவுமொரு மெய்ப்பாடாக ஓதப்பட்டது.

**261. தெரிந்துடம் படுதல் திளைப்புவினை மறுத்தல்**
**கரந்திடத் தொழிதல் கண்டவழி உவத்தலொடு**
**பொருந்திய நான்கே ஐந்தென மொழிப.**

என் - எனின், ஐந்தா மவத்தைக்கண் வரும் மெய்ப்பாடு நிகழு மிடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தெரிந்துடம்படுதல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் ஐந்தாம் அவத்தைக்கு மெய்ப்பாடாம் என்றவாறு.

தெரிந்துடம்படுதலாவது - தலைமகன் கொடுப்பவை கொண்ட தலைமகள் ஆராய்ந்து உடம்படுதல் என்றவாறு ஆற்றாமை பெருகுதின்றதாதலின் இத்துணையும் மறுத்தவள் உடம்படுதல் என்றாள் அவ்வழியுந் தெரிந்துடம்படுதல் என்றமையான் ஆராய்ந்தல்லது பணர்ச்சிக்கு உடம்படாமை கொள்ளலாம்.

திளைப்புவினை மறுத்தல் என்பது - விளையாட் டாயமொடு திரிவாள் வேட்கை நலிதலான் அவ் விளையாட்டு வினையை மறுத் தல் என்றவாறு.

கரந்திடத்தொழிதல் என்பது - தலைமகனைக் காண்டல் வேட்கையான் ஒளித்துப் படத்தினின்று மொழிதல் என்றவாறு.

கண்டவழி யுவத்தல் என்பது - தலைமகனைக் கண்டவழி மகிழ்தல் என்றவாறு.

**262. புறஞ்செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்**
**கலங்கி மொழிதல் கையற வுரைத்தலொடு**
**விளம்பிய நான்கே ஆறென மொழிப.**

என் - எனின்,ஆறாம் அவத்தைக்கண்வரும் மெய்ப்பாடு நிகழு மாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) புறஞ்செயச் சிதைதல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் ஆறாம் அவத்தைக்கண் மெய்ப்பாடாம் என்றவாறு.

புறஞ்செயச் சிதைத லாவது - தலைமகன் கோலஞ் செய்யும் வழியதற்கு மகிழ்ச்சியின்றிச் சிதையுடையளாதல்.

புலம்பித் தோன்ற லாவது - பொலிவழிந்து தோன்றல்.

கலங்கி மொழிதல் என்பது - கூறுங் கூற்றுக் கலக்கமுற்றுக்கூறுதல்.

கையறவுரைத்த லாவது - செயலறவு தோன்றக் கூறல்.

இச் சொல்லப்பட்ட ஆறு அவத்தையும் பெண்பாலார் எல் லார்க்கும் பொது. இவை புணராதவழித் தோன்றுதல் பெரும்பான்மை.

**263. அன்ன பிறவும் அவற்றொடு சிவணி**
**மன்னிய வினைய நிமித்த மென்ப.**

என் - எனின்,மேலதற்கொரு புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற் சொல்லப்பட்டனவும் அத்தன்மைய பிறவும் நிலை பெற்ற வினையுடைய நிமித்தமாம் என்றவாறு.

வினை என்பது - கற்பிற்குரிய கரணமாம். இவையெல்லாங் சுற்பிற்குரிய கரணத்துக்கு நிமித்தமாம் என்றவாறு.

அன்னவை பிறவுமாவன: நோக்காமை நோக்கி யின்புறுதல், தனியிடை நகுதல், நோக்குங் காலைச் செற்றார்போல் நோக்குதல், மறைந்து காண்டல், தற்காட்டுறுத்தல்.

இந்நிகரன அவத்தை பற்றி நிகழ்ந்தனவாயின் ஏழாவது முத லாகப் பத்தாவது ஈறாகக் கூறவெனின், ஏழாமவத்தை நாண் நீங்கிய காதலிற்றேறுத லொழிந்த காமத்து மிகுதியாகிய பெருந்திணைப்பாற் படும்: ஒத்த காமத்து நிகழாது; எட்டாவது உன்மத்தம்; ஒன்பதாவது, மயக்கம்; பத்தாவது சாக்காடு: ஆதலான் நடுவணைந்திணைக்கண் வருவன ஆறு எனக் கூறினான் என்று கொள்ளலாம்.

**264. வினையுயிர் மெலிவிடத் தின்மையும் உரித்தே.**

என் - எனின், மேலதற்கொரு புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கரணநிகழ்ச்சி உயிர்மெலிந்தவிடத்து இன்மையும் உரித்து என்றவாறு.

எனவே, இயற்கையும் நிகழும் என்றவாறாம். உம்மை எதிர்மறை யாகலால், கரணநிகழ்தல் பெரும்பான்மை. உயிர் மெலிவிடம் என்றமையான் ஐந்தாவது முதலாக இயற்கை நிகழும் என்று கொள்க. அதனானே யன்றே யவ்வழி தெரிந்துடம்படுதல் என ஒது வானாயிற்றெனலாம்.

**265. அவையும் உளவே அவையலங் கடையே.**

என் - எனின், கைக்கிளைக் குரியதொரு மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட புகுமுகம் புரிதல் முதலாயின உள: நடுவணைந்திணை யல்லாத கைக்கிளைப் பொருண்மைக்கண் என்றவாறு.

அவையலங்கடை என்றமையாற் பாடாண் பாட்டிற் கைக்கிளை யும் கொள்ளப்படும். அஃதேல், ஆண்டும் புகுமுகம் உளதோ வெனின், தலைமகள் காட்சி மாத்திரத்தைத் தனது வேட்கைமிகுதி யாற் புகுமுகமாய்க் கொள்ளும் என்க பிற்கூறிய அவை என்பன கள வும் கற்பும்; முற்கூறிய அவை என்பன புகுமுகம் புரிதல் முதலாயின அவையலங்கடை யவையு முளவே என மாறிக் கூட்டலாம்.

**266. இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்**
**எதிர்பெய்து பரிதல் ஏதம் ஆய்தல்**
**பசியட நிற்றல் பசலை பாய்தல்**
**உண்டியிற் குறைதல் உடம்புநனி சுருங்கல்**

**கண்துயில் மறுத்தல் கனவொடு மயங்கல்**
**பொய்யாக் கோடல் மெய்யே என்றல்**
**ஐயஞ் செய்தல் அவன்தம ருவத்தல்**
**அறனழிந் துரைத்தல் ஆங்குநெஞ் சழிதல்**
**எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல்**
**ஒப்புவழி யுவத்தல் உறுபெயர் கேட்டல்**
**நலத்தக நாடிற் கலக்கமும் அதுவே.**

என் - எனின், மேல் நடுவ ணைந்திணைப் பகுதியாகிய களவிற்கும் கற்பிற்கு முரிய மெய்ப்பாடு உணர்த்தி, அதன்பின் கைக் தினைக் குரியவருமாறு உணர்த்தினான் இனி இச்சூத்திரத்தாற் பெருந்திணைக் குரிய மெய்ப்பாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இன்பத்தை வெறுத்தல் முதலாகச் சொல்லப்பட்ட இருபதும் ஆராயின் நடுவணைந்திணை யல்வழி வரும் என்றவாறு.

அது என்பது – ‘அவையு முளவே யவையலங் கடையே’ என்பதைச் சுட்டி நின்றது. கலக்கமும் நாடின் என மாறுக ஏற்புழிக் கோடல் என்பதனாற் பெருந்திணைப்பாற் கொள்ளப்படும் இது கள விற்கும் சுற்பிற்கும் ஒக்கும். இவை தேறுதலொழிந்த காமத்தின்பாற் படுவனவும், மிக்க காமத்தின் மிடலின்பாற் படுவனவுமாம். (அகத்திணை. 54)

இன்பத்தை வெறுத்தல் என்பது - கோலஞ்செய்தல் முதலியன வற்றை வெறுத்தலும் தென்றலும் நிலவு முதலாயினவற்றை வெறுத்த லும், இவ்வாறு களவின்கண் வரிற் பிறர்க்கும் புலனாம். கற்பின்கண் வரிற் பிறர் இயல்வழி மங்கல மின்றாம்.

**“கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்**
**எழுதேங் கரப்பாக் கறிந்து”** (குறள். 1127)

**“சிறுகுழல் ஓசை செறிதொடீஇ வேல்கொண்**
**டெறிவது போலும் எமக்கு”**

என வரும்.

துன்பத்துப் புலம்ப லாவது - துன்பத்தின் கண்ணே புலம்புறுதல்.

**“இன்பங் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்**
**துன்பம் அதனிற் பெரிது”** (குறள். 1166)

என வரும்.

எதிர்பெய்து பரிதல் என்பது - தலைமகன் முன்னின்றி அவனின்றானாக பெய்துகொண்டு வருந்துதல்.

**“கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருவரார்**

**நுண்ணியர்எங் காத லவர்"** (குறள். 3126)

என வரும்.

ஏதுமாய்தல் என்பது - குற்றமாராய்தல்.

**"துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு**
**நட்பினுள் ஆற்று பவர்"** (குறள். 1165)

என வரும்.

பசியட நிற்றல் என்பது - உண்ணாமை.

**"நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்**
**அஞ்சதும் வேபாக் கறிந்து"** (குறள்.1128)

பசலை பாய்தல் என்பது - பசலை பரத்தல்.

**"பசந்தாள் இவளென்ப தல்லால் இவளைத்**
**துறந்தார் அவரென்பார் இல்."** (குறள். 1188)

என வரும்.

உண்டியிற் குறைதல் என்பது - உணவு சுருங்குதல்.

**"பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு"** (அகம். 48)

என வரும்.

உடம்பு நனி சுருங்கல் என்பது - உண்ணாமை காரணமாகத் தன்னுடம்பு மிகச் சுருக்கமுறுதல்.

**"பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்**
**தொல்கவின் வாடிய தோள்"** (குறள். 1234)

என வரும்.

கண்டுயின் மறுத்தல் என்பது - உறங்காமை.

**"மன்னுயிர் எல்லாந் துயிற்றி அளித்திரா**
**என்னல்ல தில்லை துணை"** (குறள்.1168)

என வரும்.

கனவொடு மயங்கல் என்பது - கனவை நனவென மயங்குதல்.

**"நனவினால் நல்காக் கொடியார் கனவினால்**
**என்னெம்மைப் பீழிப் பது"** (குறள். 1217)

என வரும்.

பொய்யாக் கோடல் என்பது - தலைவன் கூற்று தன்னைப் பொய்யாகக் கோடல்.

**"வாயல்லா வெண்மை யுரையாது சென்றீநின்**
**மாய மருள்வா ரகத்து"** (கலித்.88)

மெய்யே யென்றல் என்பது - உரைத்த மாற்றத்தை மெய்யெனக் கூறுதல்.

ஏகாரம் வினா.

**"மெய்யே வாழி தோழி சாரல்**
**மைப்பட் டன்ன மாமுக முசுக்கலை**
**யாற்ற பாயத் தப்பல் ஏற்ற**
**கோட்டொடும் போகி யாங்கு நாடன்**
**தான்குறி வாராத் தப்பற்குத்**
**தாம்பசந் தனவென் தடமென் தோளே."** (குறுந்.121)

இதனுட் 'கூறியது' என ஒரு சொல் வரல்வேண்டும்.

ஐயஞ் செய்தல் என்பது - தலைவன் குறிப்புக் கண்டு ஐயப் படுதல்.

**"ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்**
**கண்ணுவ தெவன்கொல் அறியேன் என்னும்"** (கலித்.4)

என வரும்.

அவன்றம் ருவத்தல் என்பது - தலைவன் தமரைக் கண்டவழி உவத்தல்.

**"செய்வன சிறப்பிற் சிறப்புச்செய் திவ்விரா**
**எம்மொடு சேர்ந்துசென் றீவாயாய் செம்மால்**
**நலம்புதி துண்டுள்ளா நாணிலி செய்த**
**புலம்பெலாந் தீர்க்குவேம் மன்"** (கலித்.83)

என வரும்.

அறனழித் துரைத்தல் என்பது - அறத்தினை யழித்துக் கூறுதல்.

**"விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்**
**அளியின்மை யாற்ற நினைந்து"** (குறள்:1209)

என வரும். அளியின்மை யறனின்மை கூறினாளுமாம்.

ஆங்கு நெஞ்சழிதல் என்பது - அறனழிந்துரைக்குமிடத்து நெஞ்சழிந்து கூறுதல்.

**"பெறாஅமை அஞ்சும் பெறிற்பிரி வஞ்சும்**
**அறாஅ விடும்பைத்தென் நெஞ்சு"** (குறள். 1295)

என வரும்.

எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல் என்பது - யாதானுமோர் உடம்பாயினுந் தன்னோடு ஒப்புமை கோடல் என்றவாறு.

**"புன்கண்ணை வாழி மருள்மாலை எங்கேள்போல்**
**வன்கண்ண தோநின் துணை"** (குறள். 1222)

என வரும்.

ஒப்புவழி யுவத்தல் என்பது - தலைமகனோடு ஒக்குமெனப் பிறிதொன்று கண்டவழி யுவத்தல்.

**"யாவருங் காணுநர் இன்மையிற் செத்தனள் பேணி."**

என வரும்.

உறுபெயர் கேட்டல் என்பது - தலைவன் பெயர் கேட்டு மகிழ்தல்,

**"நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்**
**டிசையும் இனிய செவிக்கு"** (குறள்.1199)

என வரும்.

கலக்கம் என்பது - மனங்கலங்குதல். மேற் 'கலங்கி மொழிதல்' என்பது ஒருகாற் சொல்லின்கண் வந்து பெயர்வது. இது மனங் கலங்கி நிற்கும் நிலை.

**"பொங்கிரு முந்நீர் அகமெல்லாம் நோக்கினை**
**திங்களுள் தோன்றி யிருந்த குறுமுயால்**

எங்கேள் இதனகத் துள்வழிக் காட்டீமோ
காட்டீயா யாயிற் கதநாய் கொளுவுவேன்
வேட்டுவ ருள்வழிச் செப்புவே னாட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன் மதிதிரிந்த
என்னல்லல் தீரா யெனின்'' (கலித்.144)

''கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிதொன்று
நாடுவேன் கண்டனென் சிற்றிலுட் கண்டாங்கே
ஆடையான் மூஉ யகப்படுப்பேன் சூடிய
காணான் திரிதருங் கொல்லோ மணிமிடற்று
மாண்மலர்க் கொன்றை யவன்'' (கலித். 142)

என வரும்.

இச் சூத்திரத்துள் 'நலத்தக நாடி' எனக் கலக்கத்தைப் பிரித்து வைத்தமையாற் சொல்லப்பட்ட பத்தொன்பதினும் முதிர்ந்துவந்த நிலை என்று கொள்ளப்படும். இச் சூத்திரம் பொதுப்படக் கூறினமையாற் றலைமகற்கு ஏற்ப வருவன கொள்ளலாம்.

267. முட்டுவயிற் கழறல் முனிவுமெய்ந் நிறுத்தல்
அச்சத்தின் அகறல் அவன்புணர்வு மறுத்தல்
தூதுமுனி வின்மை துஞ்சிச் சேர்தல்
காதல் கைம்மிகல் கட்டுரை யின்மையென்
றாயிரு நான்கே அழிவில் கூட்டம்.

என் - எனின், மேற்கூறப்பட்டன வெல்லாம் மனனழிவு நிகழ்ந்த வழி நிகழ்வனவாதலின், இவை மனன் அழியாதவழி நிகழ்வன என உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) முட்டுவயிற் கழறல் என்பது -களவு இடையீடு பட்டுழி யதற்கு வருந்தாது இவ்வாறாகி நின்றதென அவனைக் கழறியுரைத் தல் என்றவாறு.

முனிவு மெய்ந்நிறுத்தல் என்பது - வெறுப்பினைப் பிறர்க்குப் புலனாகாமல் மெய்யின் கண்ணே நிறுத்தல்.

அச்சத்தி னகறல் என்பது - இவ்வொழுக்கம் பிறர்க்குப் புலனாம் எகை கூட்டத்தின் அகன்றொழுகல்.

அவன் புணர்பு மறுத்தல் என்பது - இது தலைமகன் புணர்ச்சிக் கண் வாராக்காலத்துத் தானும் மனனழியாது நிற்கும் நிலை.

தூதுமுனிவின்மை என்பது - தூதுவிட்டவழி வெறாமை.

துஞ்சிச் சேர்தல் என்பது - கவற்சியான் உறங்காமையன்றி யுரிமை பூண்டமையான் உறக்கம் நிகழ்தல்.

காதல் கைம்மிகல் என்பது - அவ்வழியும் அன்பின்மையின்றிக் காதல் கைம்மிக்கு வருதல்.

கட்டுரையின்மை என்பது - கூற்று நிகழ்த்துதலன்றியுள்ளக் கருத்தினை மறைத்தமர்ந்திருத்தல்.

இவை நடுவணைந்திணைக்குரிய. இவற்றிற்குச் செய்யுள் களவியலுட் காட்டப்பட்டன. வரைந்தோதாமையான்.

**268. தெய்வம் அஞ்சல் புரையறந் தெளிதல்**
**இல்லது காய்தல் உள்ள துவர்த்தல்**
**புணர்ந்துழி யுண்மை பொழுதுமறுப் பாதல்**
**அருண்மிக உடைமை அன்புமிக நிற்றல்**
**பிரிவாற் றாமை மறைந்தவை யுரைத்தல்**
**புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇச்**
**சிறந்த பத்துஞ் செப்பிய பொருளே.**

என் - எனின், இ.்.து அழிவில் கூட்டத்திற்குரிய பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தெய்வ மஞ்சல் என்பது -தெய்வத்தினை யஞ்சுதல்.

**“மன்ற மராத்த பேமுதிர் கடவுள்**
**கொடியோர்த் தெறூஉம் என்ப.”** (குறுந்.87)

எனவும்,

**“நீஉறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி**
**யார்மேல் விளியுமோ கூறு?”** (கலித்.88)

எனவும் வரும்.

புரையறந் தெளிதல் என்பது – ‘கடன்மிக் கனவே’ என்றவழி பரத்தைமை கண்டு புலவாது இதனைப்போற்றல் இல்லுறை மகளிர்க்கியல்பென்னும் அறத்தினானே எனக் கூறியவாறு கண்டு கொள்ளலாம்.

இல்லது காய்தல் என்பது - தலைமகன்கணில்லாத குறிப்பினை யவன் மாட்டு உளதாகக் கொண்டு காய்தல்.

**“யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்**
**யாரினும் யாரினும் என்று.”** (குறள். 1314)

இதனுள் சொன்ன மாற்றத்தை வேறாகப் பொருள்கொண்டு இல்லாததனைச் சொல்லிக் காய்ந்தவாறு காணலாம்.

உள்ளதுவர்த்தல் என்பது - உள்ளதனை யுவர்த்துக் கூறுதல். அது தலைவன் செய்கின்ற தலையளியை வெறுத்தல்.

**"வெய்யாரும் வீழ்வாரும் வேறாகக் கையின்**
**முகையலர்ந் தன்ன முயக்கின் தொகையின்றே**
**தண்பனி வைகல் எமக்கு."** (கலித்.78)

என வரும்.

புணர்ந்துழி யுண்மை என்பது - புணர்ந்தவழி யூடலுள் வழிமறைத்துக் கூறாது அவ்வழி மனநிகழ்ச்சியுண்மை கூறுதல்.

**குளிரும் பருவத்தே ஆயினுந் தென்றல்**
**வளியெறியின் மெய்யிற் கினிதாம் - ஒளியிழாய்**
**ஊடி யிருப்பினும் ஊர் னறுமேனி**
**கூடல் இனிதா மெமக்கு"** (ஐந்திணையைம்.30)

என வரும்.

பொழுது மறுப்பாதல் என்பது - தலைவன் வரும்பொழுது நியமமின்றி மறுப்பு வந்துழிப் பொழுதினைப் பற்றி நிகழும் மன நிகழ்ச்சி.

**"புல்லிய கேளிர் புணரும் பொழுதறியேன்**
**எல்லியா கெல்லையென் றாங்கே பகல்முனிவேன்**
**எல்லிய காலை யிராமுனிவேன் யானுற்ற**
**அல்லல் களைவார் இலேன்"** (கலித்.144)

என வரும்.

இது பெருந்திணைக்கு உரியதன்றோ எனின்; ஆண்டு,மரபு நிலை திரியா மாட்சியவாகி விரவும் பொருளும்' (அகத்திணை 48) விரிந்தவெனக் கொள்ளலாம்.

அருண்மிக வுடைமை யாவது - தலைமகன்மாட்டு அருள் புலப்பட நிற்கும் நிலை.

'முதைச்சுவற் கலித்த' என்னும் அகப்பாட்டினுள்,

**"நடுங்குதுயர் களைந்த நன்ன ராளன்**
**சென்றனன் கொல்லோ தானே ......**
-----------------------------------------------------------

**வடுவாழ் புற்றின வழக்கறு நெறியே"** (அகம்.88)

என வரும். அவன் போன பின்பு இடையூறின்றிப் பெயர்ந்தாள் கொல்லென அருள் மிகுந்தவாறு காணலாம்.

அன்புமிக நிற்றல் என்பது - அன்பு புலப்பட நிற்றல்.

**"கொடிய னாயினும் ஆக**
**அவனே தோழிஎன் னுயிர்கா வலனே."** (சிற்றட்டகம்)

என்றவழி, அன்புதோன்ற நின்றவாறு காணலாம்.

பிரிவாற்றாமை என்பது - பிரிவின்கண் ஆற்றாமை.

**"செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்**
**வலவரவு வாழ்வார்க் குரை"** (குறள். 115)

என வரும்.

மறைந்தவை யுரைத்த புறஞ்சொன் மாணாக் கிளவியொடு தொகைஇ என்பது - மறைத்த ஒழுக்கத்தைக் கூறிய புறஞ்சொல்லாகிய அலர் மாட்சிமைப்படாத கிளவியொடுகூட என்றவாறு.

மறைந்தவை யுரைத்த புறஞ் சொல்லாவது - அலர். மாணாமையாவது - அவ்வலர் மாட்சிமைப்படாமற் கற்புக்கடம் பூண்டல். அன்றியும்.

**"மாண மறந்துள்ளா நாணிலி"** (கலித். 89)

என்றாற் போல மாணாமை என்பது மிகாமை என வுரைப்பினும் அமையும். அலர் மிகாமைக் கூறுங் கூற்றினுங் கற்புக்கடம் பூண்டு கூறுதல்.

**"நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு**
**செலவயர்ந் திசினால் யானே**
**அலர்சுமந் தொழிகவிவ் வழுங்க லூரே"** (நற்றிணை. 149)

என வரும்.

அலர்மிகாக் கிளவியாவது - அதற்கு உள்ளம் நாணுதல்.

**"களிறுகவர் கம்பலை போல**
**அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே"** (அகம்.66)

என வரும்.

சிறந்த பத்துஞ் செப்பிய பொருளே - என்பது -இச் சொல்லப் பட்ட பத்தும் மேற்சொல்லப்பட்ட அழிவில் கூட்டப் பொருள் என்ற வாறு என்றவழி நடுவணைந்திணைக்குரிய பொருள் என்றவாறு.

**269. பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ**
**டுருவு நிறுத்த காம வாயில்**
**நிறையே யருளே உணர்வொடு திருவென**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.**

என் - எனின், இது களவியலுட் கூறப்பட்ட தலைவற்குந் தலைவிக்கும் உளதாகும் ஒப்புப் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இதற்குப் பொருள் களவியலுள் உரைத்தாம்.

**270. நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி**
**வன்சொற் பொச்சாப்பு மடிமையொடு குடிமை**
**இன்புறல் ஏழைமை மறைப்போ டொப்புமை**
**என்றிவை யின்மை என்மனார் புலவர்.**

என் - எனின், இது தலைமக்கட்காகாத குணம் வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நிம்பிரி என்பது அழுக்காறு. அவ்வியம் என்பது அது.

கொடுமை என்பது - அறனழியப் பிறரைச் சூழும் சூழ்ச்சி.

வியப்பென்பது - தம்மைப் பெரியராக நினைத்தல்.

புறமொழி என்பது - புறங் கூறுதல்.

வன்சொல் என்பது - கடுஞ்சொற் கூறல்.

பொச்சாப் பென்பது - தம்மைக் கடைப்பிடியாமை, அது சோர்வு.

மடிமை என்பது - முயற்சி யின்மை

குடிமையின் புறல் என்பது - தன்குலத்தினானுந் தன்குடிப் பிறப்பினானுந் தம்மை மதித்து இன்புறுதல்.

ஏழைமை என்பது - பேதைமை.

மறப்பு என்பது - யாதொன்றாயினுங் கற்றதனையுங் கேட்ட தனையும் பயின்றதனையும் மறத்தல். ஒடு எண்ணின்கண் வந்தது.

ஒப்புமை என்பது - ஆண்பாலாயினும் பெண்பாலாயினுந் தான் காதலிக்கப்பட்டாரைப் போல்வாரைக் கண்டவழி அவர்போல்வர் என ஆண்டு நிகழும் உள்ளநிகழ்ச்சி. அ்.து உலகின்கட் கீழ்மக்கள் மாட்டுங் கண்ணிலோர்மாட்டும் நிகழ்தலின் அது தலைமக்கட் காகாதென விலக்கப்பட்டது.

என்றிவை யின்மை யென்மனார் புலவர் என்பது - இச் சொல்லப்பட்டன இல்லையாதலும் வேண்டும்; மேற்சொல்லப்பட்ட வற்றொடுங் கூட்ட என்றவாறு.

மேற்சொல்லப்பட்டவற்றொடுங் கூடுதல் அதிகாரத்தான் வந்தது.

இவ்விரண்டு சூத்திரத்தானும் ஒருமுகத்தானாய இலக்கணங் கூறியவாறு.

**271. கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதின் உணரும்**
**உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்**
**நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே.**

என் - எனின்,இ்.து அதிகாரப் புறனடை

(இ-ள்) ஈண்டுச் சொல்லப்பட்ட நல்ல நயத்தினையுடைய மெய்ப்பாடெல்லாம் ஆராயுங்காற் கண்ணானுஞ் செவியானும் விளங்க உணரும் அறிவுடைமாந்தர்க் கல்லது கருதுதல் அரிது என்றவாறு.

**மெய்ப்பாட்டியல் முற்றிற்று.**

## 4. உவமையியல்

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், உவமையியல் எனும் பெயர்த்து, ஒருபுடை ஒப்புமைபற்றி யுவமை உணர்த்தினமையாற் பெற்ற பெயர் மெய்ப்பாடுபற்றித் தோன்றி வழங்குவது.

இதனாற் பயன் என்னை மதிப்பதோவெனின், புலன் அல்லா தன புலனாதலும் அலங்காரமாகிக் கேட்டார்க்கின்பம் பயத்தலும் ஆப்போலும் ஆமா என வுணர்த்தியவழி, அதனைக் காட்டகத்துக் கண்டான் முன் கேட்ட ஒப்புமைபற்றி இ்.து ஆமாவென்று அறியும். ‘‘தாமரை போல் வாள்முகத்துத் தையலீா்’’ என்றவழி அலங் காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயக்கும். அ்.தாவது மேற் சொல்லப்பட்ட எழுதிணையினும் யாதனுள் அடங்கும் எனின். அவையெல்லாவற்றிற்கும் பொதுவாகிப் பெரும்பான்மையும் அகப்பொருள் பற்றி வரும்.

மேற்குறிப்புப் பற்றி வரும் மெய்ப்பாடு கூறினார்; இது பண்புந் தொழிலும் பற்றி வருதலின் அதன்பின் கூறப்பட்டது.

**272. வினைபயன் மெய்உரு என்ற நான்கே**
**வகைபெற வந்த உவமைத் தோற்றம்.**

என்பது சூத்திரம்.

இதன் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், உவமத்தினை யொருவாற்றாற் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வினைபயன் மெய்யுரு என்ற நான்கே வகைபெற வந்த உவமைத் தோற்றம் என்பது -தொழிலும் பயனும் வடிவும் நிறனும் என்று சொல்லப்பட்ட நான்குமே அப்பாகுபட வந்த உவமைக்கண் புலனாம் என்றவாறு.

எனவே கட்புலமல்லாதனவு முள என்றவாறாம். அவை செவி யினானும் நாவினானும் மூக்கினானும் மெய்யினானும் மனத்தினானும் அறியப்படுவன. இவ்விருவகையும் பாகுபடவந்த உவமையாம்.

அவற்றுட், கட்புலனாகியவற்றுள் வினையாவது நீட்டல் முடக்கல் விரித்தல், குவித்தல் முதலாயின. பயனாவது நன்மையாகவும் தீமையாகவும் பயப்பன வடிவாவது வட்டம், சதுரம் கோணம் முதலாயின. நிறமாவன வெண்மை, பொன்மை முதலாயின. இனிச்செவிப் புலனாவது ஓசை நாவினான் அறியப்படுவது கைப்பு, கார்ப்பு முதலிய சுவை மெய்யினான் அறியப்படுவன வெம்மை தண்மை முதலாயின மூக்கால் அறியப்படுவன நன்னாற்றம் தீநாற்றம் மனத்தான் அறியப்படுவன இன்ப, துன்ப முதலியன.

**உதாரணம்**

‘‘புலிபோலப் பாய்ந்தான்’’ என்பது வினை.

‘‘மாரி யன்ன வண்கை’’ (புறம்:133) என்பது பயன்.

‘‘துடி போலும் இடை’’ என்பது வடிவு.

‘‘தளிர் போலும் மேனி’’ என்பது நிறம்.

‘‘குயில் போன்ற மொழி’’ செவியானறியப்பட்டது.

‘‘வேம்புபோலக் கைக்கும்’’ நாவினாலறியப்பட்டது.

‘‘தீப்போலச் சுடும்’’ மெய்யினானறியப்பட்டது.

’ ‘‘ஆம்பல் நாறுந் துவர்வாய்’’ (குறுந்.300) மூக்கானறியப்பட்டது.

**“தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்**
**அம்மா அரிவை முயக்கு”** (குறள். 1107)

மனத்தானறியப்பட்டது.

பிறவுமன்ன.

273. **விரவியும் வரூஉம் மரபின என்ப.**

என் - எனின்,மேலதற்கோரு புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட உவமைகள் ஒரோவொரு பொரு ளான் வருதலின்றி இரண்டும் பலவும் விரவியும் வரும் மரபிளை யுடைய என்றவாறு.

உம்மை இறந்தது தழீஇயிற்று.

''இலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்று'' (அகம். கடவுள் வாழ்த்து)

என்றவழி வடிவும் நிறனும் விரவிவந்தன. பிறவும் அன்ன. இன்னும் "விரவியும் வரூஉம் மரபின" என்றதனாற் பலபொருள் விரவிவந்தன.

**"அடைமரை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட**
**குடைநிழற் றோன்றுநின் செம்மலைக் காணூஉ"** (கலித்.84)

என்றவழித் தாமரையிலையும் பூவும் குடைக்கும் புதல்வற்கும் உவமை யாயினும் தோற்றத்திற் கிரண்டும் ஒருங்குவந்தமையான் வேறோதம் பட்டது. இன்னும் ''விரவியும் வரூஉம் மரபின'' என்றதனால் ''தேமொழி'' எனத் தேனின்கண் உளதாகிய நாவிற்கினிமையும் மொழிக் கண் உளதாகிய செவிக்கினிமையும் உவமிக்க வருதலுங் கொள்க பிறவும் இந்நிகரன வெல்லாம் இதுவே ஒத்தாகக் கொள்ளலாம்.

274. **உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை.**

என் - எனின், மேலதற்கொரு சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட உவமை ஆராயுங்காலத்து உயந்ததன் மேலன என்றவாறு.

ஈண்டு உயர்ச்சியாவது - வினைமுதலாகச் சொல்லப்பட்டன உயர்தல்.

**"அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்"** (பட்டினப். 298)

என்றவழித் துப்புடையன பலவற்றினும் அரிமா உயர்ந்ததாகலின் அதனை உவமையாகக் கூறப்பட்டது.

**"தாமரை புரையுங் காமர் சேவடி"** (குறுந். கடவுள் வாழ்த்து)

என்றவழிச் சிவப்புடைய பலவற்றினும் தாமரை யுயர்ந்ததாகலின் அதனை உவமையாகக் கூறப்பட்டது. அஃதேல்,

**“கொங்கியர் ஈன்ற மைந்தரின்**
**மைந்துடை உழுவை திரிதருங் காடே”**

என இழிந்ததன்மேல் உவமை வந்ததான் எனின், ஆண்டுக் கொங்கிய ரீன்ற மைந்தரின் என விசேடித்த தன்மையான் அவர் பிறநிலத்து மக்களோடு ஒரு நிகரன்மையின் அவரும் உயர்ந்தோராகக் கொள்ளலாம்.

**“சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்**
**பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்**
**கட்டி னிணக்கும் இழிசினன் கையது**
**போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ**
**ஊர்கொள வந்த பொருநனோ**
**டார்புனை தெரியல் நெடுந்தகை போரே”** (புறம்.28)

என்பது இழிந்ததன்மேல் வந்ததாயின் ஆணியூசியினது விரைவு மற்றுள்ள விரைவின் உயர்ந்ததாகலின் அதுவும் உயர்ந்ததாம்.

275. **சிறப்பே நலனே காதல் வலியோடு**
**அந்நாற் பண்பும் நிலைகளை மென்ப.**

என் - எனின், இதுவுமது.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட உவமை தம்மின் உயர்ந்தவற்றோடு உவமிக்கப்பட்டனவேனும், சிறப்பாதல், நலனாதல்,காதலாதல், வலியாதல் நிலைக்களனாக வரும் என்றவாறு இவையிற்றைப்பற்றித் தோன்றுமென்பது கருத்து.

**“முரசுமுழங்கு தானை மூவரும் கூடி**
**அரசவை இருந்த தோற்றம் போலப்**
**பாடல் பற்றிய பயனுடை எழாஅல்”** (பொருநராற்54-6)

எனச் சிறப்புப்பற்றி வந்தது.

**“ஓவத் தன்ன வியனுடை வரைப்பின்”** (புறம்.251)

என்பது நலம்பற்றி வந்தது.

**“கண்போல்வான் ஒருவனுளன்”**

என்பது காதல்பற்றி வந்தது.

**“அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்”** (பட்டினப்.218)

என்பது வலிபற்றி வந்தது.

பிறவு மிவ்வாறே படுத்துநோக்கிக் கண்டுகொள்ளலாம்.

**276. கிழக்கிடும் பொருளோ டைந்து மாகும்.**

என் - எனின், எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட சிறப்பு முதலிய நான்கும் ஒழியத் தாழ்ந்த பொருளோடும் உவமை பொருந்துமிடத்து உவமிக்கப்படும். அதனொடுகூட ஐந்தாம் என்றவாறு.

என்றது பொருள் உவமமாயும் உவமம் பொருளாயும் நிற்குமிடமும் உள என்றவாறு.

**"ஒண்செங் கழுநீர்க் கண்போ லாயித**
**மூசி போகிய சூழ்செய் மாலையன்"** (அகம். 48)

என்றாற் போல்வன. மேற்சொல்லப்பட்ட நான்கும் உயர்வின் பகுதியாதலின் இதனொடுங்கூட ஐந்தென்றான்.

277. முதலுஞ் சினையுமென் றாயிரு பொருட்கும்
நுதலிய மரபி னுரியவை யுரிய.

என் எனின், இ·து உவமைக்குரியதொரு மரபுணர்த்துதல் நுதலிற்று.

ஐயம் அறுத்ததூஉமாம்.

(இ-ள்) முதலுஞ் சினையுமென்று சொல்லப்பட்ட இருவகைப் பொருட்குங் கருதிய மரபினான் அவற்றிற்கேற்பவை உரியவாம் என்றவாறு.

சொல்லதிகாரத்துட்,

**"செப்பினும் வினாவினுஞ் சினைமுதற் கிளவிக்**
**கப்பொரு ளாகும் உறழ்துணைப் பொருளே"**

என்றான். அவ்வாறன்றி யுவமைக்கு நியமமில்லை என்றவாறாயிற்று.

**"ஒருகுழை ஒருவன்போல் இணர்சேர்ந்த மராஅமும்"** (கலித். 26)

என்பது முதற்கு முதல் உவமமாயிற்று.

**"அடைமரை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட**
**குடைநிழல் தோன்றுநின் செம்மலைக் காணுஉ"** (கலித்.84)

என்பது முதற்குச் சினை உவமமாயிற்று.

**“தாமரை புரையுங் காமர் சேவடி”** (குறுந். கடவுள் வாழ்த்து)

என்பது சினைக்குச் சினை யுவமமாயிற்று.

**“நெருப்பின் அன்ன சிறுகட் பன்றி”** (அகம்.84)

என்பது சினைக்கு முதல் உவமமாயிற்று.

278. **சுட்டிக் கூறா உவம மாயின்**
**பொருளெதிர் புணர்த்துப் புணர்த்தன கொளலே.**

என் - எனின், இதுவுமொரு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) சுட்டிக் கூறா வுவமை என்பது - உவமிக்கப்படும் பொருட்கு உவமை இதுவெனச் சுட்டிக் கூறாமை. அவ்வாறு வருமாயின் உவமச்சொல்லொடு பொருந்த உவமிக்கப்படும் பொருளொடு புணர்த்து உவமவாய்பாடு கொள்ளலாம் என்றவாறு.

இதனாற் சொல்லியது உவமவாய்பாடு தோன்றா உவமம் பொருட்குப் புணராக்கண்ணும் உவமை உள என்றவாறாம்.

**“மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து.”** (குறள். 90)

இதன்கண் ‘அதுபோல’ எனச் சுட்டிக்கூறா வுவமையாயின வாறு கண்டுகொள்ளலாம்.

279. **உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும்.**

என் - எனின், இ∴து உவமைக்குரியதொரு மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இரட்டைக் கிளவியாயினும், நிரனிறுத்தமைத்த நிரனிறைச் கண்ணமாய் வரினும், மிக்குங் குறைந்தும் வருதலன்றி யுவமை யடையடுத்துவரினும், தொழிற்பட்டு வரினும், ஒன்றும் பலவுமாகி வரினும், வருமொழியும் அவ்வாறே வருதல் வேண்டும் என்றவாறு.

அவ்வழி வாராது மிக்குங் குறைந்தும் வருவது குற்றம் என்றவாறாம்.

280. **பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்**
**மருளறு சிறப்பின∴துவம மாகும்.**

என் - எனின், இ∴து உவமைக்கண் வருவதொரு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உவமிக்கும் பொருடன்னை யுவமமாக்கிக் கூறினும் மயக்க மற்ற சிறப்பு நிலைமையான் எய்தும் உவமையாகுமென்றவாறு.

ஒருசாராசிரியர் ரூபகம் சொல்லப்பட்டது என்ப உவமைபற்றி வருதலின் இ∴து உவமையின் பாகுபாடு என்பது இவ்வாசிரியன் கருத்து.

"இரும்புமுகஞ் செறித்த ஏந்தெழில் மருப்பிற்
கருங்கை யானை கொண்மூ வாக
நீண்மொழி மறவ ரெறிவன ருயர்த்
வாண்மின் னாக வயங்குகடிப் பமைந்த
குருதிப் பல்லிய முரகமுழக் காக
அரசராப் பனிக்கும் அணங்குறு பொழுதின்
வெவ்விசைப் புரவி வீசுவளி யாக
விசைப்புறு வல்வில் வீங்குநா ணுதைத்த
கனைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
ஈரச் செறுவயிற் றேரே ராக
விடியல் புக்கு நெடிய நீட்டிநின்
செருப்படை மிளிர்த்த திருத்துறு பைஞ்சால்
பிடித்தெறி வெள்வேல் கணையமொடு வித்தி
விழுத்தலை சாய்த்த வெருவரு பைங்கூழ்ப்
பேஎ யெற்றிய பிணம்பிறங்கு பல்போர்க்
கான நரியொடு கழுகுகளம் படுப்பப்
பூதங் காப்பப் பொருகளந் தழீஇப்
பாடுநர்க் கீந்த பீடுடை யாளன்" (புறம்.369)

என வரும்.

"பாசடைப் பரப்பிற் பன்மல ரிடைநின்
றொருதனி யோங்கிய விரைமலர்த் தாமரை
அரச வன்னம் ஆங்கினி திருப்பக்
கரைநின் றாடும் ஒருமயில் தனக்குக்
கம்புட் சேவற் கனைகுரன் முழவாக்
கொம்பர் இருங்குயில் விளிப்பது காணாய்" (மணிமே4:8:13)

என்பதும் அது இவ்வாறு வருவனவெல்லாம் இச் சூத்திரத்தாற் கொள்ளலாம்.

281. பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பின் தீராக்
குறிப்பின் வரூஉ நெறிப்பா டுடைய.

என் - எனின், இ∴து உவமைக் குரியதொரு மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உவமையும் பொருளும் ஒத்தன கூறலேயன்றிப் பெருக் கூறலுஞ் சிறுகக் கூறலும் மேற்சொல்லப்பட்ட சிறப்பென்னும் நிலைக்களத்து நீங்காச் சிறப்பின் வரூஉம் வழக்கப்பாட்டினையுடைய என்றவாறு.

எனவே, வழக்கின்கட் பயின்று வாராத இறப்பவுயர்தலும் இறப்ப விழிதலும் ஆகா வென்றவாறு.

**"அவாப்போ லகன்றதன் அல்குன்மேற் சான்றோர்**
**உசாஅப் போல வுண்டே மருங்குல்"**

என்றவழி அல்குல் பெரிதென்பான் ஆசையோடுவமித்தலின் இது தக்கதாயிற்று: மருங்குல் நுண்ணிதென்பான் சான்றோ ருசாவோடு உவமித்தலின் அதுவும் தக்கதாயிற்று. அவை சிறப்புப் பற்றி வந்தன.

இனி, நெறிப்பாடின்றி வருவன இறப்ப உயர்தலும் இறப்ப இழி தலும் என இருவகைப்படும்.

**"இந்திரனே போலு மிளஞ்சாத்தன்.... நாறுமிணர்."** (யாப்.வி.ஒழி)

இஃது இறப்பவுயர்ந்தது வழக்கிறந்துவருதலின் இவ்வாறு வரும் கூறப்படாது.

**"வள்ளெயிற்றுப் பேழ்வாய் ஞமலிக்கு மான்குழாம்**
**எள்ளி யிரிவதுபோ லெங்கெங்கும் - வள்ளற்கு**
**மாலார் கடல்போல மண்பரந்த வாட்டானை**
**மேலாரு மேலார் விரைந்து."** (யாப்.வி.ஒழி)

இஃது இறப்ப இழிதலின் இதுவு மாகாது.

அஃதேல் "நாயனையார் கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்" (நாலடி.213) என வருமால் எனின், அது நாயின்கட் கிடந்ததொரு நற்குணம் பற்றி வருதலின் இறப்ப இழிதல் ஆகாது.

282. அவைதாம்.
**அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப**
**என்ன மான என்றவை யெனாஅ**
**ஒன்ற ஒடுங்க ஒட்ட வாங்க**
**வென்ற வியப்ப வென்றவை யெனாஅ**
**எள்ள விழைய இறப்ப நிகர்ப்பக்**
**கள்ளக் கடுப்ப வாங்கவை யெனாஅக்**
**காய்ப்ப மதிப்பத் தகைய மருள**
**மாற்ற மறுப்ப வாங்கவை யெனாஅப்**
**புல்லப் பொருவப் பொற்பப் போல**
**வெல்ல வீழ வாங்கவை யெனாஅ**
**நாட நளிய நடுங்க நந்த**

**ஓடப் புரைய என்றவை யெனாஅ**
**ஆறா றுவமையும் அன்னவை பிறவுங்**
**கூறுங் காலைப் பல்குறிப் பினவே.**

என் - எனின், இ.்.து உவமையுணர்த்துஞ் சொற்களை வரை யறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட உவமைகள் தாம் அன்ன என்பது முகலாசப் புரைய என்பதீறாக வந்தனவும் அன்னவை பிறவுமாகிச் சொல்லுங் காலத்துப் பல குறிப்பினையுடைய என்றவாறு.

சொல்லுங்காலத்து என்றமையிற் சொல்லென்பது கொள்ளலாம்.

அன்ன பிறவாற் கொள்ளப்படுவன: நோக்க, நேர, அளை, அற்று இன். எந்து, ஏர். சீர், கெழு, செத்து, ஏர்ப்ப, ஆர என்றித் தொடக்கத் தன கொள்ளலாம்.

'பல்குறிப்பின' என்றதனான் இச் சொற்கள் பெயரெச்ச நீர்மை யவாய் வருவனவும் வினையெச்ச நீர்மையவாய் வருவனவும் முற்று நீர்மையவாய் வருவனவும் இடைச்சொல் நீர்மையவாய் வருவனவும். எனக் கொள்ளலாம். 'புலிபோன்ற சாத்தன்' 'புலிபோலுஞ் சாத்தன்' என்பன பெயரெச்சம் 'புலிபோன்று வந்தான்' 'புலிபோலப் பாய்ந்தான்' என்பன வினையெச்சம் 'புலிபோலும்' 'புலிபோன்றனன்' என்பன முற்று அன்ன, இன்ன இடைச்சொல்.

இன்னும் 'பல்குறிப்பின' என்றதனான் விரிந்தும் தொக்கும் வருவனவுங் கொள்ளலாம். 'தேன்போல இனியமொழி' இது விரிந்தது. 'தேன் போலும் மொழி' இது உவமை விரிந்து ஒப்புமை குறித்துத் தொக்கு நின்றது 'தேமொழி' என்பது எல்லாந் தொக்கது பிறவு மன்ன.

ஈண்டு எடுத்தோதப்பட்ட முப்பத்தாறனுள் ஒன்று, என்ற மாற்ற, பொற்ப, நாட, நடுங்க என்பனவொழித்து நின்ற முப்பதும் அன்ன பிறவாற் கொள்ளப்பட்டவற்றுள் நோக்க என்பதும் நேர என்பதுஞ் சிறப்புவிதி யுடையவாதலின் அவற்றிற்கு உதாரணம் ஆண்டுக் காட்டுதும் ஏனைய ஈண்டுக் காட்டுதும்.

**'வேலொன்று கண்'**

**'கயலென்ற கண்'**

**'மணிநிற மாற்றிய மாமேனி'**

**'மதியம் பொற்ப மலர்ந்த வாண்முகம்'**

**'வேயொடு நாடிய தோள்'**

**'படங்கெழு நாகம் நடுங்கு மல்குல்'**

**‘குன்றி னனையாருங் குன்றுவர்’’** (குறள். 965)

**‘இறந்தாரை யெண்ணிக்கொண் டற்று’** (குறள். 22)

**‘மருப்பிற் றிரிந்து மறிந்துவீழ் தாடி’** (கலித்.15)

**‘துணைமல ரெழினீலத் தேந்தெழின் மலருண்கண்’** (கலித். 14)

**‘முத்தேர் முறுவலாய்’** (கலித் .93)

**‘எச்சிற் கிமையாது பார்த்திருக்கு மச்சீர’** (நாலடி. 345)

**‘யாழ்கெழு மணிமிடற் றந்தணன்’** (அகம். கடவுள் வாழ்த்து)

**‘கிளைசெத்து மொய்த்த தும்பி’** (நற்.35)

என வரும். பிறவுமன்ன.

283. **அன்ன வாங்கு மான இறப்ப**
**என்ன உறழத் தகைய நோக்கொடு**
**கண்ணிய எட்டும் வினைப்பா லுவமம்.**

என் - எனின், மேற்சொல்லப்பட்டவற்றுள் சிறப்பு விதியுடை யன உணர்த்துவான் எடுத்துக் கொண்டான் அவற்றுள் விளையுவ மத்திற்குரிய சொல் வரையறை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அன்னமுதலாகச் சொல்லப்பட்ட எட்டும் வினையுவமத் திற்குரிய சொல்லாம் என்றவாறு.

**‘கொன்றன்ன வின்னா செயினும்’** (குறள். 106)

**“பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு”** (திருமுருகாற். 2)

**“புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச்**
**செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்”** (பெரும்பாணாற்.269,270)

**‘புலியிறப்ப வொலிதோற் றலின்’**

**‘புலியென்னக் கலிசிறந் துராஅய்’**

**‘செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை’** (திருமுருகாற்.5)

**‘பொருகளிற் றெருத்தின் புலிதகையப் பாய்ந்து’**

**‘மானொக்கு நோக்கு மடநடை யாயத்தார்’**

என வரும்.

284. **அன்னஎன் கிளவி பிறவொடுஞ் சிவணும்.**

என் - எனின், எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்டவற்றுள் அன்ன என்னுஞ் சொல் ஒழிந்த பொருளொடுஞ் செல்லும் என்றவாறு.

**‘மாரி யன்ன வண்கை’** (புறம்.133) இது பயன்.

**“பரியரைக் கமுகின் பாளையம் பசுங்காய்**
**கருவிருந் தன்ன கண்கூடு சிறுதுளை”** (பெரும்பாணாற்.7,8)

இது மெய்.

**‘செவ்வா னன்ன மேனி’** (அகம். கடவுள் வாழ்த்து)

**‘பாலன்ன மென்மொழி’**

இவை உரு பிறவுமன்ன.

285. **எள்ள விழையப் புல்லப் பொருவக்**
**கள்ள மதிப்ப வெல்ல வீழ**
**என்றாங் கெட்டே பயனிலை யுவமம்.**

என் - எனின், பயனிலை யுவமைக்குரிய சொல் வரையறுத் துணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எள்ள என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் பயனிலையுவமைக்குச் சொல்லாம் என்றவாறு.

**‘எழிலி வானம் எள்ளினன் தரூஉங்**
**கவிகை வண்கைக் கடுமான் றோன்றல்’**

**‘மழைவிழை தடக்கை வாய்வா ளெவ்வி’**

**‘புத்தே ளுலகிற் பொன்மரம் புல்ல’**

**‘விண்பொருபுகழ் விறல்வஞ்சி’** (புறம்.11)

**‘கார்கள்ள வுற்ற பேரிசை யுதவி’**

**‘இருநிதி மதிக்கும் பெருவள னீகை’**

**‘வீங்குசுரை நல்லான் வென்ற வீகை’**

**‘விரிபுனற் பேர்யாறு வீழ யாவதும்’**

**‘வரையாது சுரக்கும் உரைசால் தோன்றல்’**

என வரும்.

286. கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய
ஒட்ட ஒடுங்க ஓட்ட நிகர்ப்பவென்
றப்பா லெட்டே மெய்ப்பா லுவமம்.

என் - எனின், மெய்யுவமத்திற் குரிய சொல் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கடுப்ப என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் மெய்யுவமத்திற்குரிய சொல்லாம் என்றவாறு.

**‘விண்ணதிர் இமிழிசை கடுப்ப’** (மலைபடு.2)

**‘அகலிரு விசும்பிற் குறைவில் ஏய்ப்ப’**

**‘வேய்மருள் பணைத்தோள் நெகிழ’** (அகம்.1)

**‘வேய்புரை மென்றோள்’** (கலித்.29)

**‘முத்துடை வான்கோ டொட்டிய முலைமிசை வியப்பன தழீஇ’**

**‘பாம்புரு வொடுங்க வாங்கிய நுசுப்பின்’**

**‘செந்தீ யோட்டிய வஞ்சுடர்ப் பருதி’**

**‘கண்ணொடு நிகர்க்குங் கழிப்பூங் குவளை’**

என வரும்.

287. போல மறுப்ப ஒப்பக் காய்த்த

**நேர வியப்ப நளிய நந்தவென்**
**றொத்துவரு கிளவி உருவி னுவமம்.**

என் - எனின், உருவத்திற்குரிய சொல் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) போல என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் உருவுமத்திற் குரியசொல்லாம் என்றவாறு.

**'தன்சொ லுணர்ந்தோர் மேனி**
**பொன்போற் செய்யும் ஊர்கிழ வோனே'** (ஐங்குறு. 41)

**'மணிநிற மறுத்த மலர்ப்பூங் காயா'**

**'ஒண்செங் காந்த ளொக்கு நின்னிறம்'**

**'கணைக்கால் நெய்தல் காய்ததிய கண்ணியம்'**

**'கார்விரி கொன்றைப் பொன்நேர் புதுமலர்'** (அகம். கடவுள் வாழ்த்து)

**'தண்டளிர் வியப்பத் தகைபெறு மேனி'**

என வரும்.

நளிய நந்த என்பன வந்தவழிக் கண்டுகொள்ளலாம்.

288. **தத்த மரபில் தோன்றுமன் பொருளே.**

என் - எனின், மேலனவற்றிற்கொரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்பாகுபடுத் துணர்த்தப்பட்ட சொற்கள் கூறியவாற்றான்றித் தத்தமரபில் தோன்றும் பொருளும் உளவாமென்றவாறு.

மன் ஆக்கங்குறித்து வந்தது. ஈண்டு மரபென்றது பயிற்சியை இதனானே நூல் செய்கின்ற காலத்து வினைமுதலாகிய பொருள்கள் ஓதிய வாய்பாட்டான் வருதல் பெருவழக்கிற்றென்று கொள்ளப்படும்.

**'முழவுறழ் தடக்கையி னியல வேந்தி'** (திருமுருகாற்.215)

**'மாவென்ற மடநோக்கின்'** (கலித். 57)

**'வேய்வென்ற தோள்'** (கலித்.138)

**‘மாரிவீ ழிருங் கூந்தல்’** (கலித்.14)

**‘பொன்னுரை கடுக்குந் திதலையா’** (திருமுருகாற்.145)

**‘குறுந்தொடி ஏய்க்கு மெலிந்துவீங்கு திவவின்’** (பெரும்பாண்.13)

**‘செயலையந் தளிரேய்க்கும் எழினலம்’** (கலித்.15)

**‘பாஅன்மருண் மருப்பி னுரல்புரை பாவடி’** (கலித்.21)

**‘வலம்புரி புரையும் வால்நரை முடியினர்’** (திருமுருகாற்.127)

**‘ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல’** (அகம். 22)

**‘தாமரைபோல் வாள்முகம்’** (திணைமாலை. 1)

**‘கள்வர்போ னோக்கினு நோக்கும்’** (கலித்.61)

**‘ஒழுகை நோன்பக டொப்பக் குழீஇ’** (அகம்.30)

எனவும் வரும். பிறவுமன்ன.

289. நாலிரண் டாகும் பாலுமா ருண்டே

என் - எனின் எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட உவமை நான்குவகை யாதலேயன்றி எட்டாம் பக்கமும் உண்டு என்றவாறு.

அவையாவன: வினையும் வினைக்குறிப்புமென இருவகையாம்.

பயன் என்பது, நன்மை பயத்தலும் தீமை பயத்தலும் என இருவகை யாம் மெய்யென்பது வடிவும் அளவும் என இருவகையாம். உரு வென்பது நிறமுங் குணமுமென இருவகையாம். இவ்வகையினா லெட்டாயின.

‘பொன்னன்ன செல்வத்தன்’ - இது வினைக்குறிப்பு.

‘ஞாயி றனையைநின் பகைவர்க்கு’ (புறம்.59) - இது தீப்பயன்.

‘நெடுவரை மிசையிற் பாம்பென விழிதருங்கடுவாற் கலுழி’ என்பது அளவு.

‘பாலன்ன மொழி’ - இது குணம்.

ஏனைய மேற்காட்டப்பட்டன.

**290. பெருமையுஞ் சிறுமையு மெய்ப்பா டெட்டன்**
**வழிமருங் கறியத் தோன்று மென்ப.**

என் - எனின், இதுவுமொரு மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பெருக்கவுஞ் சிறுக்கவுங் கூறுதல் மெய்ப்பாட்டின் வழிப் பக்கம் புலப்படத் தோன்றும் என்றவாறு.

எனவே, மெய்ப்பாடு தோற்றாதவழி இப்புணர்ப்பினாற் பயனின்றாம்.

**"அவாப்போல் அகன்றதன் அல்குன்மேற் சான்றோர்**
**உசாஅப்போல உண்டே மருங்குல்"**

என்பது பெருமையுஞ் சிறுமையும் பற்றி உவகை நிகழ்ந்தது.

**"கலங்கவிழ்த்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றி"** (யா.வி.ப.318)

என்பது துன்பப் பெருக்கம் சொல்லி யவலம் வந்தது.

**"பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல**
**வருஞ்செல்லும் பேரும்என் நெஞ்சு"** (முத்தொள்.88)

இது பெருக்கம்பற்றி இழிவரல் வந்தது. பிறவுமன்ன.

**291. உவமப் பொருளின் உற்ற துணருந்**
**தெளிமருங் குளவே திறத்திய லான.**

என் - எனின், இ∴து உவமைக்குரிய வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உவமப்பொருளாவே சொல்லுவான் குறிக்கப்பட்ட பொருளை யுணருந் தெளியும் பக்கமும் உள கூறுபாட்டியலாஸ் என்றவாறு.

தெளிமருங்காவது துணிவுபக்கம் எனவே, துணியாமை உவமத்தின் கண்ணே வந்தது அவ்வாறு வரினும் இதுவேயெனத் துணிதலின் துணி பக்கமாவது.

**"ஐதேய்ந் தன்று பிறையு மன்று**
**மைதீர்ந் தன்று மதியு மன்று**
**வேயமன் றன்று மலையு மன்று**
**பூவமன் றன்று சுனையு மன்று**
**மெல்ல வியலும் மயிலு மன்று**
**சொல்லத் தளருங் கிளியு மன்று"** (கலித்.55)

என்றவழித் துணியாது நின்றன நுதலும் முகனும் தோளுங் உண்ணும் சாயலும் மொழியு மெனத் துணிந்தவாறு கண்டுகொள்ளலாம்.

இன்னும் இதனானே,

**"கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன**
**செயலெழுதித் தீர்ந்தமுகந் திங்களோ காணீர்"** (சிலப். கானல்-11)

என்றவழிக் கண் புருவங் கூந்தலை யுவமப் பெயரான் வழங்குதலுங் கொள்ளலாம்.

**292. உவமப் பொருளை உணருங் காலை**
**மருவிய மரபின் வழக்கொடு வருமே.**

என் - எனின்,மேலதற்கொரு புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உவமப் பொருளை உவமிக்கப்படும் பொருளாக உண குங்காலை மருவிய மரபினானாய வழக்கொடு வரும் என்றவாறு.

எனவே, மருவாதன அவ்வாறு கயல்சிலை என்றாற்போலக் கூறப்படா வென்றவாறு.

**293. இரட்டைக் கிளவியும் இரட்டை வழித்தே.**

என் - எனின், இதுவுமொரு மரபுணர்த்துதல் நுதலிற்று

(இ-ள்) இரட்டைக் கிளவியாவது உவமை யிரண்டு சொல்லோடு அடுத்துவருவதனோடு உவமிக்கப்படும் பொருளும் இரண்டு பொருளாகி வருதல் வேண்டும் என்றவாறு.

அவ்வழி இரண்டுசொல்லும் ஒருசொன் வீரமைப்பட்டு வருதல் வேண்டுமென்று கொள்ளலாம்.

**"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோ டேனை யவர்"** (குறள்.410)

ஆன் வேறுபாடு அறியலாம்.

294. பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்ன மரபிற் கூறுங் காலைத்
துணிவொடு வரூஉந் துணிவினோர் கொளினே.

என் - எனின், இ∴து ஒருவமை வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பிறிதென்பது - உவமைப்பொருள் தானன்மை யான் உவமைப் பொருளோடு படாது பொருள் தோற்றிய இடத்தொடு நோக்கி முன்னமரபினாற் சொல்லுங்காலத்துத் துணிவுடையோர் கொளின் அவர் துணிந்த துணிவின்கண்ணே வரும் உவமை என்றவாறு.

முன்னமாவது,

**“இவ்விடத் திம்மொழி இவரிவர்க் குரியவென்**
**றவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்”** (தொல்.செய்யு199)

என்பதாகலின், இடத்தொடு பார்த்து ஏற்கும் பொருட்கட் கூறுவது.

மேலைச்சூத்திரத்தளவும் பிறிது பொருளோடு உவமைகூறிப் போந்தார். இனிப் பொருள் தன்னோடே யுவமை கூறுகின்றார் என்று கொள்ளலாம்.

**“நிலவுக்காண் பதுபோல அணிமதி ஏர்தர”** (கலித்.119)

என்றவழிக் காணப் பிறிதாகிய பொருளோடு உவமை கூறாமையிற் பிறிதொடு படாதாயிற்று மதியினது எழுச்சியை நோக்குதலிற் பிறப் பொடு நோக்கிற்று, அவ்விடத்திற்கேற்பக் கூறுதலின் முன்னமா யிற்று. அம்மதியினது தோற்றம் இத்தன்மைத்தெனத் துணிதலின் அதன்கண் உவமைச்சொல் வந்தது.

**“வள்ளிதழ் கூம்பிய மணிமரு ளிருங்கழிப்**
**பள்ளிபுக் கதுபோலும் பரப்புநீர்த் தண்சேர்ப்ப”** (கலித்.121)

என்பதும் அது.

**295. உவமப் போலி ஐந்தென மொழிப.**

என் - எனின், இதுவுமோர் உவமை விகற்பங் கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) உவமையைப் போன்று வருவன ஐந்தென்று சொல்லுவர் என்றவாறு.

அவையாவன: இதற்குவமையில்லை எனவும், இதற்கிதுதானே யுவமை எனவும், பலபொருளினுமுளதாகிய வுறுப்புக்களைத் தெரிந் தெடுத்துக் கொண்டு சேர்த்தின் இதற்குவமையாம் எனவும் பல பொருளினுமுளதாகிய கவின் ஓரிடத்துவரின் இதற்குவமையாம் எனவும், கூடாப்பொருளோடு உவமித்து வருவனவும்.

**உதாரணம்**

**“நின்னோர் அன்னோர் பிறரிவர் இன்மையின்**
**மின்னெயில் முகவைக்கு வந்திசிற் பெரும்”** (புறம்.373)

என்றும்.

**“மன்னுயிர் முதல்வனை யாதலின்**

நின்னோர் அனையைநின் புகழொடு பொலிந்தே" (பரிபா.1)

என்றும்.

"நல்லார்கள் நல்ல வுறுப்ரயின தாங்கள் நாங்கள்
எல்லா முடனாதுமென் றன்ன வியைந்த வீட்டாற்
சொல்வாய் முகங்கண் முலைதோளிடை யல்குல் கைகால்
பல்வார் குழலென் றிவற்றாற்படிச் சந்த மானாள்"

என்றும்,

"நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல்
ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை" (பதிற்றுப்.14)

என்றும்.

"வாரா தமைவானோ வாரா தமைவானோ
வாரா தமைகுவன் அல்லன் மலைநாடன்
ஈரத்து ளின்னவை தோன்றின் நிழற்கயத்து
நீருட் குவளை வெந் தற்று" (கலித். 41)

என்றும் வரும்.

296. தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்
பிறப்பினும் வரூஉந் திறத்த வென்ப.

என் - எனின்,மேலதற்கொரு புறனடை.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட ஐந்தும் உரைத்த வாய்பாட்டாற் கூறும்வழிச் சொல்லப்பட்ட ஐந்தினும் ஏதுவாகச் சொல்லிப் பின்னர்க் கூற வேண்டும் என்றவாறு.

நினக்குவமையில்லை என்னும்வழிச் செயலானாதல், பயனானா தல், உறுப்பானாதல், உருவானாதல், பிறப்பானாதல் ஒப்பாரில்லை யெனல் வேண்டும் என்பது கருத்து பிறவுமன்ன.

297. கிழவி சொல்லின் அவளறி கிளவி.

என் - எனின்,மேற்சொல்லப்பட்ட உவமை கூறுவார் பல ருள்ளுந் தலைமகட்குரியதொரு பொருள் வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று

(இ-ள்) உவமைப்பொருளைத் தலைமகள் கூறின் அவளறிந்த பொருட்கண்ணே உவமை கூறப்படும் என்றவாறு.

எனவே, தானறியாத பொருட்கண் கூறினாளாகச் செய்யுட் செய்தல் பெறாது என்றவாறு. உதாரணம் தலைமகள் கூற்றுட் கண்டுகொள்ளலாம்.

**298. தோழிக் காயின் நிலம்பெயர்ந் துரையாது.**

என் - எனின். இது தோழியுவமை கூறுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தோழி உவமைசொல்லின் அந்நிலத்தினுள்ளனவன்றிப் பிறநிலத்துள்ளன கூறப் பெறாள் என்றவாறு.

உரையாது உவமம் என ஒருசொல் வருவிக்க. உதாரணம் தோழி கூற்றுட் காணலாம்.

**299. கிழவோற் காயின் உரனொடு கிளக்கும்.**

என் - எனின், இது தலைமகன் உவமை கூறுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தலைவன் உவமை கூறுவானாயின், அறிவொடு கிளக்கப்படும் என்றவாறு.

அன்றியும், உரனொடு கிளக்கு முவமையெனப் பெயரெச்ச மாக்கிப் பெயர் வருவித்தலுமாம். உதாரணம் தலைவன் கூற்றுட் காணப்படும்.

**300. ஏனோர்க் கெல்லாம் இடம்வரை வின்றே.**

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட மூவருமல்லாத நற்றாய் செவிலி முதலாயினார்க்கு உவமை கூறுமிடம் வரையறுக்கப்படாதென்றவாறு.

**301. இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்
உவம மருங்கில் தோன்றும் என்ப.**

என் - எனின், இது தலைவற்குந் தலைவிக்குந் தோழிக்கு முரியதொரு மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மகிழ்ச்சி பயக்குங் கூற்றும் புலவிபயக்குங் கூற்றும் உவமப் பக்கத்தால் தோன்றும் என்றவாறு.

**"மாரி யாம்பல் அன்ன கொக்கின்
பார்வ லஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு
கண்டல் வேரளைச் செலீஇய ரண்டர்
கயிறரி யெருத்திற் கதழ்பூந் துறைவ"** (குறுந். 117)

என்றது தலைமகன் உவமை கூறியவழி நின்ற பெண்டிர் தடுப்பக் கயிறரி யெருதுபோலப் போந்தனை யெனத் துனியுறு கிளவி வந்தது.

**“..........................வானத்**
**தணங்கருங் கடவு என்னோள் நின்**
**மகன்தா யாதல் புரைவதால் எனவே”** (அகம்.16)

என மகிழ்ச்சிபற்றி வந்தது. பிறவும் அன்ன.

302. **கிழவோட் குவமை ஈரிடத் துரித்தே.**

என் -நுதலிற்று எனின், தலைமகள் உவமை கூறுமிடன் உணர்த்துதல்.

(இ-ள்) தலைமகள் உவமை கூறுங்கால் மேற்சொல்லப்பட்ட இரண்டிடத்தும் உரித்து என்றவாறு.

எனவே, இரண்டும் அல்வழி உவமை கூறப்பெறாள் என்றவாறாம்.

303. **கிழவோற் காயின் இடம்வரை வின்றே.**

என் - எனின், தலைமகற்குரியதொரு மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தலைமகன் உவமை கூறுதல் எப்பொருட்கண்ணுமாம் என்றவாறு.

304. **தோழியுஞ் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்**
**கூறுதற் குரியர் கொள்வழி யான.**

(இ-ள்) தோழியுஞ் செவிலியும் உவமை கூறுங்காற் பொருந்து மிடம் பார்த்துக் கூறுதற்குரியர் கேட்டோர் கொள்ளு நெறியான் என்றவாறு.

**“பருதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்**
**கிருள்வளை வுண்ட மருள்படு பூம்பொழில்”** (மணிமேகலை)

என வரும். பிறவுமன்ன. மேற்காட்டினவற்றுள் கண்டுகொள்ளலாம்.

305. **வேறுபட வந்த உவமைத் தோற்றம்**
**கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்.**

என் - எனின்,மேலனவற்றிற் கெல்லாம் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஈண்டு எடுத்தோதப்பட்ட இலக்கணத்தின் வேறுபட்டு வந்த உவமைத்தோற்றம் எடுத்தோதிய நெறியிற் கொள்ளும்வழிக் கொளுவுக என்றவாறு.

**“பருதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்**
**கிருள்வளை வுண்ட மருள்படு பூம்பொழில்”** (மணிமேகலை)

என வரும். பிறவுமன்ன

306. ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே.

என் - எனின். இதுவு முவமைக் குரியதொரு மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உவமையை உவமிக்கப்படும் பொருளின் நீக்கிக் கூறலும் மருவிய இயல்பு என்றவாறு.

"கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்ஙனம் ஒத்தியோ வீங்குசெலல் மண்டிலம்
பொழுதென வரைதி புறங்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி
அகலிரு விசும்பி னானும்
பகல்விளங் குதியாற் பல்கதிர் விரித்தே" (புறம்.8)

என வரும்.

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்" (குறள். 1120)

என்பதுமது.

307. உவமைத் தன்மையும் உரித்தென மொழிப
பயனிலை புரிந்த வழக்கத் தான.

என் - எனின், இதுவுமது.

(இ-ள்) உவமிக்கப்படும் பொருளோடு உவமை தோன்ற வருதலேயன்றி யுவமையது தன்மை கூறலு முவமையாதற் குரித்து பயனிலை பொருந்திய வழக்கின்கண் என்றவாறு.

எனவே, இவ்வாறு வருவது பயனிலை யுவமைக்கண் என்று கொள்ளலாம்.

"பாரி பாரி யென்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனும் அல்லன்
மாரியு முண்டீன் டுலகுபுரப் பதுவே" (புறம்.107)

இது, மாரி போலும் பாரியது கொடை என்னாது இவ்வாறு கூறும் பொருண்மையும் உவமமாம் என்றவாறு.

308. தடுமாறு வரலும் கடிவரை வின்றே.

என் - எனின், இ∴து உவமைக்குரியதொரு மரபு உணர்த்துகள் நுதலிற்று

(இ-ள்) உவமைக்கண் தடுமாறு வருதல் நீக்கப்படாது என்றவாறு.

தடுமாறுத லாவது - ஐயமுறுதல் எனவே ஐயநிலை யுவமமு கண்டு கொள்ளலாம்.

**"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்**
**நோக்கமிம் மூன்றும் உடைத்து"** (குறள். 1085)

என்றும்.

**"ஈங்கே வருவாள் இவள்யார்கொ லாங்கேயோர்**
**வல்லவன் தைஇய பாவைகொல் நல்லார்**
**உறுப்பெலாங் கொண்டியற்றி யாள்கொல் வெறுப்பினால்**
**வேண்டுருவங் கொண்டதோர் கூற்றங்கொல்"** (கலித்.56)

என்றும் வரும்; பிறவும் அன்ன.

309. **அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே**
**நிரனிறுத் தமைத்தல் நிரனிறை சுண்ணம்**
**வரன்முறை வந்த மூன்றலங் கடையே.**

என் - எனின், உவமை பல வந்தவழி வருவதொரு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடுக்கிய தோற்றமாவது - உவமை பல அடுக்கித் தோற்றுதல்.

நிரனிறுத்தமைத்த லாவது ஒரு பொருளொடு தோற்று தொடரை யுடைத்தாகப் பலவுவமை வருதல்.

நிரனிறை யாவது உவமை பலவற்றையுஞ் சேரநிறுத்தி யுவமிக்கப்படும் பொருளையுஞ் சேர நிறுத்தல்.

சுண்ணமென்பது - உவமையையும் பொருளையுந் துணித்து ஒட்டுதல்.

வரன்முறை வந்த மூன்றலங் கடையே என்பது - அடுக்கிய லுவமை கடியப்படும்; ஆமென்று வரையப்பட்ட நிரனிறுத்தன் முதலிய மூன்றும் அல்லாதவழி என்றவாறு.

அவற்றுள், சுடியப்பட்டது உவமைக்குவமையாக அடுக்கி வருவது.

**"வெண்திங்கள் போன்றுளது வெண்சங்கம்**
**வெண்சங்கின் வண்டிங்கு தாழை வளர்கோடு"**

என்றவழி அவ்வாறு உவமைக்குவமையாகக் கூறியவதனாற் போதுவ தொரு பயன் இன்மையின் ஆகாதென்று கொள்ளலாம்.

நிரனிறுத்தமைத்தல் வருமாறு:-

**“நிலநீர் வளிவிசும் பென்ற நான்கின்**
**அளப்பரி யையே”** (பதிற்று.14)

**“மதிபோலுந் தாமரை போலும்”**

என வரும்.

நிரனிறை வருமாறு:-

**“கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி**
**மதிபவள முத்த முகம்வாய் முறுவல்**
**பிடிபிணை மஞ்ஞை நடை நோக்குச் சாயல்**
**வடிவினளே வஞ்சி மகள்”** (யாப்.வி)

என வரும். சுண்ணமாவது:-

“களிறும் கந்தும் போல நளிகடற்
கூம்பும் கலனுந் தோன்றும்
தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே” (தொல்.பொருள்.அகத். 11.நச்)

என்றவழி நிரனிறையன்றிக் களிறுபோலுங் கலன் எனத் துணிக்க வேண்டியவாறு கண்டுகொள்ளலாம்.

**உவமையியல் முற்றிற்று.**

## 5. மரபியல்

இவ்வோத்து இவ்வதிகாரத்துக் கூறப்பட்ட பொருட்கு மரபு உணர்த்தினமையான், மரபியல் என்னும் பெயர்த்து.

545. **மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற்**
**பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்**
**கன்றும் பிள்ளையும் மகவும் மறியுமென்**
**றொன்பதும் குழவியோ டிளமைப் பெயரே.**

இவ்வோத்தினுள் இத் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின் இளமைப் பெயராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) குழவியோடு இவ்வொன்பதும் இளமைப் பெயராம் என்றவாறு.

இதன் பொருள் மேல் விரிக்கின்றான்.

**546. எருதும் ஏற்றையும் ஒருத்தலுங் களிறும்**
**சேவும் சேவலும் இரலையும் கலையும்**
**மோத்தையுந் தகரும் உதளும் அப்பரும்**
**போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்**
**யாத்த ஆண்பாற் பெயரென மொழிப.**

என் - எனின், ஆண்பாற் பெயர் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) ஆண்பாற் பெயர் இவ் வெண்ணப்பட்ட பதினைந்தும் பிறவுமாம் என்றவாறு.

பிறவும் என்றதனான் ஆன் என்றும் விடை என்றும் வருவன போல்வன கொள்ளலாம்.

**547. பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்**
**மூடும் நாகுங் கடமையும் அளகும்**
**மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்**
**அந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே.**

என் - எனின், பெண்பாற்பெயர் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இக் கூறப்பட்ட பதின்மூன்றும் பெண்பாற் பெயராம் என்றவாறு.

**548. அவற்றுள்,**
**பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை.**

என் - எனின், மேல் அதிகரிக்கப்பட்ட மூவகைப் பெயர்க்குஞ் சிறப்பு விதியுடையன இச் சூத்திர முதலாக வருகின்ற சூத்திரங்களாற் கூறப்படுகின்றன.

(இ-ள்) மேற் சொல்லப்பட்டவற்றுட் பார்ப்பு பிள்ளை யென்னும் இரண்டும் பறவையி னிளமைப் பெயர் என்றவாறு.

இவ்வோத்திற் சூத்திரத்தாற் பொருள் விளங்குவனவற்றிற்கு உரை யெழுதுகின்றிலம்.

**549. தவழ்பவை தாமும் அவற்றோர் அன்ன.**

(இ-ள்) என்றது, ஊர்வனவற்றிற்கு மேற் சொல்லப்பட்ட இரு வகை இளமைப் பெயரும் ஆம் என்றவாறு.

**550. மூங்கா வெருகெலி மூவரி அணிலோடு**

**ஆங்கவை நான்குங் குட்டிக் குரிய.**

(இ-ள்) என்றது, இவை நான்குங் குட்டி என்று சொல்லப்படும் என்றவாறு.

மூங்கா என்பது கீரி.

551. **பறழெனப் படினும் உறழாண் டில்லை.**

(இ-ள்) என்றது, மேற்சொல்லப்பட்ட நால்வகை யுயிர்க்கும் இளமைப்பெயர் பறழ் எனினும் உறழ்ச்சியில்லை என்றவாறு.

எனவே, இரண்டுமாம் என்றவாறாம்.

552. **நாயே பன்றி புலிமுயல் நான்கும்**
**ஆயுங் காலைக் குருளை என்ப.**

(இ-ள்.) என்றது, நாய் முதலாகச் சொல்லப்பட்ட நான்கன் இளமைப் பெயர் குருளை யென்று வழங்கும் என்றவாறு.

553. **நரியும் அற்றே நாடினர் கொளினே.**

(இ-ள்) என்றது, நரியின் இளமைப் பெயரும் ஆராயுங் காலத்துக் குருளை எனப்படும் என்றவாறு.

இது, மேலனவற்றோடு ஒருநிகராக ஓதாமையிற் சிறுபான்மை வருமென்று கொள்ளலாம்.

554. **குட்டியும் பறழுங் கூற்றவண் வரையார்.**

என் - எனின், எய்தாத தெய்துவித்தல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட ஐவகையுயிர்க்குங் குட்டி பறழ் என்பனவும் ஆம் என்றவாறு.

555. **பிள்ளைப் பெயரும் பிழைப்பாண் டில்லை**
**கொள்ளுங் காலை நாயலங் கடை யே.**

என் எனின், இதுவுமது.

(இ-ள்) மேற்கூறியவற்றுள் நாயன்றி ஒழிந்தவை பிள்ளை என்னும் இளமைப் பெயர்க்கு உரிய என்றவாறு.

பன்றிக் குருளை பன்றிக்குட்டி, பன்றிப்பறழ், பன்றிப்பிள்ளை எனவுமாம்.

ஏனையவும் இவ்வாறே ஒட்டிக் கொள்ளலாம்.

556. **யாடுங் குதிரையும் நவ்வியும் உழையும்**
**ஓடும் புல்வாய் உளப்பட மறியே.**

(இ-ள்) என்றது, யாடு முதலாகச் சொல்லப்பட்ட ஐந்துயிரும் மறி என்னும் இளமைப்பெயர் பெறும் என்றவாறு.

நவ்வி - புள்ளிமான்.

557. **கோடுவாழ் குரங்கு குட்டியுங் கூறுப.**

(இ-ள்) கோடுவாழ் குரங்கென்பது ஊகமு முகவுங் கொள்ளப்படும்.

உம்மை எதிரது தழீஇய எச்சவும்மை.

558. **மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்**
**அவையும் அன்ன அப்பா லான.**

என் - எனின், இதுவும் குரங்குக் குரியதோர் இயல்பு உணர்த்து தல் நுதலிற்று.

(இ-ள்) மகவு முதலாகிய நான்குங் குரங்குச் சாதி இளமைப் பெயராம் என்றவாறு.

குரங்குக் குட்டி, குரங்கு மகவு, குரங்குப் பிள்ளை, குரங்குப் பறழ், குருங்குப் பார்ப்பு.

559. **யானையுங் குதிரையுங் கழுதையுங் கடமையும்**
**மானோ டைந்துங் கன்றெனற் குரிய.**

(இ-ள்) என்றது, யானை முதலாக மானீறாகச் சொல்லப்பட்ட ஐந்தினது இளமைப் பெயர் சுன்று என்று வரும் என்றவாறு.

560. **எருமையும் மரையும் வரையார் ஆண்டே.**

(இ-ள்) என்றது, கன்றெனக் கூறும் இளமைப்பெயர் எருமைக் கும் மரைக்கும் உரித்து என்றவாறு.

561. **கவரியும் கராகமும் நிகரவற் றுள்ளே.**

(இ-ள்) என்றது, கவரி என்று சொல்லப்படுவதும் கராகமென்று சொல்லப்படுவதும் கன்றென்னும் பெயர் பெறும் என்றவாறு.

கராகமென்பது கரடி.

562. **ஒட்டகம் அவற்றோ டொருவழி நிலையும்.**

(இ-ள்) என்றது, ஒட்டகமென்று சொல்லப்படுவதுங் கன்றென் னும் பெயர் பெறும் என்றவாறு.

**563. குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை.**

(இ-ள்) என்றது, குழவியென்னும் இளமைப் பெயர் யானை பெறும் என்றவாறு.

**564. ஆவும் எருமையும் அதுசொலப் படுமே.**

(இ-ள்) என்றது. ஆவும் எருமையும் குழவிப்பெயர் பெறும் என்றவாறு.

565. கடமையும் மரையு முதனிலை ஒன்றும்.

(இ-ள்) என்றது, கடமாவும் மரையுங் குழவி எனப் பொருந்தும் என்றவாறு.

**566. குரங்கும் முசுவும் ஊகமும் மூன்றும்**
**நிரம்ப நாடின் அப்பெயர்க் குரிய.**

(இ-ள்) என்றது, குரங்கு முதலிய மூன்றும் ஆராயுங் காலத்துக் குழவிப் பெயர்க்குரிய என்றவாறு.

**567. குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை**
**கிழவ அல்ல மக்கட் கண்ணே.**

(இ-ள்) என்றது, குழவி மகவென்று சொல்லப்பட்ட இரண்டு இளமைப் பெயருமல்லாத ஏனையவை மக்கட்குரியவல்ல என்றவாறு.

**568. பிள்ளை குழவி கன்றே போத்தெனக்**
**கொள்ளவும் அமையும் ஓரறி வுயிர்க்கே.**

(இ-ள்) என்றது, ஓரறிவுயிராகிய புல்லும் மரனும் இளமைப் பெயர் பிள்ளை முதலாகச் சொல்லப்பட்ட நான்குங் கொள்ளவும் அமையும் என்றவாறு.

உம்மை எதிர்மறையாகலான் கன்றென்றதே பெரும்பான்மை.

**569. நெல்லும் புல்லும் நேரார் ஆண்டே.**

என் - எனின்,எய்தியது விலக்கல் நுதலிற்று.

(இ-ள்) மேற்கூறப்பட்ட நான்கன் இளமைப் பெயரும் கொள் ளார் நெல்லும் புல்லுமென வரும் ஓரறிவுயிர்க்கு என்றவாறு.

உம்மை எதிர்மறையாதலின் மேற்சொல்லப்பட்ட இளமைப் பெயர் கூறப்பெறார் என்றவாறு.

**570. சொல்லிய மரபின் இளமை தானே**
**சொல்லுங் காலை அவையல திலவே.**

என் - எனின், இளமைப்பெயரை வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) சொல்லிப்போந்த மரபுடையனவன்றிச் சொல்ல வேண்டு மரபுடையனவற்றிற்குஞ் சொல்லுமிடத்து இவைதாமே இளமைப் பெயர் என்றவாறு.

என்பது, என்சொன்னவாறோவெனின், பரந்துபட்ட வுயிர்த் தன்மை யெல்லாம் ஈண்டு ஓதப்பட்டனவல்ல, எடுத்தோதாதனவற் றிற்கு ஈண்டு ஓதப்பட்ட இளமைப் பெயரல்லது பிற பெயரின்மையின், இவற்றுள் ஏற்பனவற்றோடு கூட்டி யுரைக்க என்றவாறாம்.

இத்துணையும் கூறப்பட்ட சூத்திரத்திற்கு,

**உதாரணம்**

**"பறவைதம் பார்ப்புள்ள.."** (கலித்.119)

**"வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே."**

**"யாமைப் பார்ப்பின் அன்ன."** (குறுந்152)

**"தன்பார்ப்புத் தின்னும் பண்பின் முதலை"** (ஐங்குறு.41)

பார்ப்பு, பிள்ளை பிறவும் பறப்பன ஊர்வனவெல்லாம் இவ்வகை யினாற் கூறுப நடப்பனவற்றுள், மூங்காக்குட்டி, மூங்காப்பறழ், வெருகுக்குட்டி, வெருகுப்பறழ்; எலிக்குட்டி;எலிப்பறழ்; அணிற் குட்டி, அணிற்பறழ்; நாய்க்குட்டி, நாய்க்குருளை; நரிக்குட்டி, நரிச் குருளை, நரிப்பறழ் நரிப்பிள்ளை; பன்றிக்குட்டி, பன்றிக்குருளை, பன்றிப்பறழ், பன்றிப்பிள்ளை; புலிக்குட்டி, புலிக்குருளை, புலிப்பறழ், புலிப்பிள்ளை; குரக்குக்குட்டி, குரக்குமக, குரக்குப்பிள்ளை, குரக்குப் பார்ப்பு, குரக்குப்பறழ், குரக்குக்குழவி; ஊக முசுவென்பனவும் இவ் வாறே கொள்க. யாட்டுமறி; குதிரை மறி, குதிரைக்கன்று; நவ்விமறி; உழைமறி; புல்வாய்மறி; யானைக்கன்று, யானைக்குழவி; கழுதைக் கன்று; கடமைக்கன்று, கடமைக்குழவி; ஆன்கன்று, ஆன்குழவி; எருமைக்கன்று, எருமைக்குழவி; மரைக்கன்று; மரைக்குழவி; சுவரிக் கன்று; சுராகக்கன்று; ஒட்டசுக்கன்று; மக்கட்குழவி, மக்கண்மக; தெங்கம்பிள்ளை; கமுகங்கன்று; கருப்பம்போத்து ஓரறிவுயிர்க்கட் குழவியென்பது வந்தவழிக் கண்டுகொள்ளலாம்.

இனி அவையல்லது பிறவில்லை யென்றமையின், ஒன்றற்குரிய வற்றை ஒன்றற்குரித்தாக்கி வழங்குவனவுஞ் சிறுபான்மை கொள்ளப் படும் கழுதை மறியென்பனவும் 'பிள்ளை வெருகிற் சுல்கிரை யாகி' (குறுந்17) என்றாற் போலவும் சான்றோர் செய்யுளகத்து வருவன கடியப்படா வென்றவாறு எடுத்தோதாதன பெரும்பான்மை, இனி, எடுத்தோதாதன; சிங்கம் புலிப்பாற்படும்:

உடும்பு, ஓந்தி, பல்லி, அணிற் பாற்படும்; நாவியென்பது மூங்காவின் பாற்படும். பிறவும் இவ்வகையின் எற்பன கொள்ளலாம்.

571. ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

என் - எனின் உலகத்துப் பல்லுயிரையும் அறியும் வகையாற் கூறப்படுதலை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஓரறிவுயிராவது உடம்பினானறிவது; ஈரறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் அறிவது; மூவறிவுயிராவது உடம்பி னானும் வாயினானும் மூக்கினானும் அறிவது; நாலறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் மூக்கினானும் கண்ணினானும் அறி வது: ஐயறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் மூக்கினானும் கண்ணினானும் செவியினானும் அறிவது; ஆறறிவுயிராவது உடம்பி னானும் வாயினானும் மூக்கினானும் கண்ணினானும் செவியினா னும் மனத்தினானும் அறிவது, இவ்வகையினான் உயிர் ஆறு; வகையின ஆயின.

இவ்வாறு அறிதலாவது; உடம்பினால் வெப்பம் தட்பம் வன்மை மென்மை அறியும். நாவினாற் கைப்பு, காழ்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, புளிப்பு, மதுரம் என்பன அறியும். மூக்கினால் நன்னாற்றம் தீய நாற்றம் அறியும் கண்ணினால் வெண்மை. செம்மை, பொன்மை, பசுமை, கருமை, நெடுமை, குறுமை, பருமை, நேர்மை, வட்டம், கோணம், சதுரம் என்பன அறியும். செவியினான் ஓசை வேறுபாடும், சொற்படும் பொருளும் அறியும் மனத்தினாலறியப்படுவது இது போல்வன வேண்டு மெனவும், இது செயல் வேண்டுமெனவும், இ∴து எத்தன்மையென வும் அனுமானித்தல் அனுமானமாவது புகை கண்ட வழி நெருப் புண்மை கட்புலன் அன்றாயினும் அதன்கண் நெருப்பு உண்டென்று அனுமானித்தல்.

இவ்வகையினான் உலகினிலுள்ளவெல்லாம் மக்கட்கு அறிதலா யின. இனி, அவற்றை அறியும் உயிர்களை வருகின்ற சூத்திரங்களாற் கூறுதும்.

572. புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

(இ-ன்) ஓரறிவுயிராமாறு புல்லும் மரனும் என்று சொல்லப் பட்ட இருவகை உடம்பினாலறியும்; அக் கிளைப் பிறப்பு பிறவும் என்றவாறு.

பிறஆவன கொட்டியுந் தாமரையுங் கழுநீரும் என்பன.

புல்லென்பன புறவயிர்ப்பு உடையன: மரமென்பன அகவயிர்ப் புடையன அவையாமாறு முன்னர்க் கூறப்படும்.

573. **நந்தும் முரளும் ஈரறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே**

என் - எனின், ஈரறிவுயிர் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஈரறிவுயிராவன நந்தும், முரளுமென்று சொல்லுவ; பிறவுமுள ஈரறிவுயி ரென்றவாறு.

நந்து என்றதனால் சங்கு, நத்தை, அலகு, நொள்ளை என்பன கொள்க முரள் என்றதனான் இப்பி, கிளிஞ்சில், ஏரல் என்பன. கொள்ளலாம்.

574. **சிதலும் எறும்பும் மூவறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.**

என் - எனின், மூவறிவுயிராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) சிதலும், எறும்பும் மூவறிவின; அக்கிளைப் பிறப்பு பிறவு முள என்றவாறு.

பிற ஆவன அட்டை முதலாயின.

575. **நண்டுந் தும்பியும் நான்கறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே .**

என் - எனின், நாலறிவுயிராமாறு உணர்த்துதல் நுதலிற்று

(இ-ள்) நண்டும், தும்பியும் நாலறிவையுடைய; அக்கிளைப் பிறப்பு பிறவு முள என்றவாறு.

பிறவுமென்றதனான் ஞிமிறு, சுரும்பென்பன கொள்ளலாம்.

576. **மாவும் புள்ளும் ஐயறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.**

என் - எனின், ஐயறிவுயிராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நாற்கால் விலங்கும் புள்ளும் ஐயறிவுடைய; அக்கிளைப் பிறப்பு பிறவும் உள என்றவாறு.

பிற ஆவன தவழ்வனவற்றுள் பாம்பு முதலாயினவும் நீருள் வாழ் வனவற்றுள் மீனும் முதலையும் ஆமையும் முதலாயினவுங் கொள்ளப்படும்.

577. **மக்கள் தாமே ஆறறி வுயிரே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.**

என் - எனின், ஆறறிவுயிராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மக்கள் ஆறறிவுயிரெனப்படுவர்; அக்கிளைப் பிறப்பு பிறவுமுள என்றவாறு.

பிறவாவன தேவர், அசுரர், இயக்கர் முதலாயினோர் பிறப்புக்கள்.

**578. ஒருசார் விலங்கும் உளவென மொழிப.**

என் - எனின், இதுவுமது.

(இ-ள்) விலங்கினுள் ஒருசாரனவும் ஆறறிவுயிராமென்றவாறு.

அவையாவன கிளியுங் குரங்கும் யானையும் முதலாயின.

மேல் ஓரறிவுயிர் முதலாகத் தோற்றுவித்தார்; அதனானே இச் சூத்திரங்கள் ஈண்டுக் கூறப்பட்டன.

**579. வேழக் குரித்தே விதந்துகளி றென்றல்.**

என் - எனின், நிறுத்த முறையானே ஆண்பாற் ரிய பெயர் கூறுதல் நுதலிற்று, இச் சூத்திர முதலாயினவற்றான்.

(இ-ள்) களிறென்று விதந்துகூறுதல் யானைக்குரித்து என்றவாறு.

**580. கேழற் கண்ணுங் கடிவரை இன்றே.**

(இ-ள்) பன்றியின்கண்ணும் ஆண்பாலைக் களிறென்றல் கடியப் படா தென்றவாறு.

**581. புல்வாய் புலிஉழை மரையே கவரி**
**சொல்லிய கராமோ டொருத்தல் ஒன்றும்.**

(இ-ள்) புல்வாய் முதலாயின அறுவகையுயிரும் ஒருத்தலென்ன ஆண்பெயர் ஒன்றும் என்றவாறு.

**582. வார்கோட் டியானையும் பன்றியும் அன்ன.**

(இ-ள்) யானையும் பன்றியும் ஒருத்தலெனப்படு மென்றவாறு.

**583. ஏற்புடைத் தென்ப எருமைக் கண்ணும்.**

(இ-ள்) எருமையினும் ஆணினை ஒருத்தலென்று கூறப்படும் என்றவாறு.

**584. பன்றி புல்வாய் உழையே கவரி**

**என்றிவை நான்கும் ஏறெனற் குரிய.**

(இ-ள்) பன்றி முதலாகிய நான்கன் ஆணினை ஏறென்று கூறலாமென்றவாறு.

**585. எருமையும் மரையும் பெற்றமும் அன்ன.**

சூத்திரத்தாற் பொருள் விளங்கும்.

**586. கடல்வாழ் சுறவும் ஏறெனப் படுமே.**

(இ-ள்) கடல்வாழ் சுறாவின் ஆணினையும் ஏறெனலாகுமென்றவாறு.

**587. பெற்றம் எருமை புலிமரை புல்வாய்**
**மற்றிவை எல்லாம் போத்தெனப் படுமே.**

(இ-ள்) பெற்ற முதலாகிய ஐந்தனுள் ஆணினையும் போத்தெனலாகு மென்றவாறு.

**588. நீர்வாழ் சாதியும் அதுபெறற் குரிய.**

(இ-ள்) நீருள் வாழும் முதலை முதலாயினவற்றுள் ஆண்பால் போத்தெனக் கூறுதற்குரிய என்றவாறு.

**589. மயிலு மெழாஅலும் பயிலத் தோன்றும்.**

(இ-ள்) மயிலுள்ளும் எழாலுள்ளும் ஆணினைப் போத்தென்றல் பெரும்பான்மை என்றவாறு.

**590. இரலையுங் கலையும் புல்வாய்க் குரிய.**

(இ-ள்) இரலை என்னும் பெயரும் கலை என்னும் பெயரும் புல்வாயின் ஆண்பாற்குரிய என்றவாறு.

**591. கலையென் காட்சி உழைக்கும் உரித்தே**
**நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்.**

(இ-ள்) கலை என்னும் பெயர் உழைக்கும் முசுவிற்கும் உரித்தென்றவாறு.

**592. மோத்தையுந் தகரும் உதளும் அப்பரும்**
**யாத்த என்ப யாட்டின் கண்ணே.**

(இ-ள்) மோத்தை முதலாகச் சொல்லப்பட்டன யாட்டின் ஆணிற்குரிய வென்றவாறு.

**593. சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்**
**மாயிருந் தூவி மயிலலங் கடையே.**

(இ-ள்) மயிலல்லாத புள்ளின்கண் ஆண்பெயர் சேவலென்று கூறப்படு மென்றவாறு.

சிறகு என்றது ஆகுபெயர்.

**594. ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற் கெல்லாம்**
**ஏற்றைக் கிளவி உரித்தென மொழிப.**

(இ-ள்) ஆற்றலுடைத்தாகிய ஆண்பாற் கெல்லாம் ஏற்றை யென்னும் பெயர் உரித்தென்றவாறு.

ஏற்புழிக்கோடல் என்பதனான் அ.்றிணைக்கண்ணும் கொள்ளப்படும்.

**595. ஆண்பால் எல்லாம் ஆணெனற் குரிய**
**பெண்பால் எல்லாம் பெண்ணெனற் குரிய**
**காண்பவை அவையவை அப்பா லான.**

(இ-ள்) ஆண்பா லுயிரெல்லாம் ஆண் என்னும் பெயர் பெறும்: பெண்பா லுயிரெல்லாம் பெண் என்னும் பெயர் பெறும். அவ்விரு வகைக்கும் அறிகுறி காண்டலான் என்றவாறு.

வேழக்குரித்தென்னும் சூத்திர (35) முதலாக இத்துணையும் ஆண் பெயர் கூறினார். இனிப் பெண் பெயர் கூறுகின்றாராகலின் அதிகாரப்பட்ட பொருள் சே, கடுவன், கண்டி என்பன சிறப்புச் சூத்திரத்தாகலின் அவற்றிற்குரியவெனக் கூறிற்றிலராலெனின்; அவற் றுள் கடுவனும் கண்டியும் முன்னரெடுத்தோதப்படும். சே என்பது ஆவினுள் ஆணையே குறித்து வழங்கலின் ஓதாராயினார். ஈண்டு ஓதப்பட்டன பல பொருள் ஒரு சொல்லும் ஒரு பொருட் பல சொல்லும் என்று கொள்ளலாம்.

இத்துணையுங் கூறப்பட்டது: வேழத்துள் ஆண், களிறு, ஒருத்தல், ஏற்றை எனப்படும்; பன்றியுள் ஆண் ஒருத்தல் ஏற்றை எனப் படும்; புல்வாயுள் ஆண் ஒருத்தல், ஏறு, ஏற்றை, போத்து, இரலை, கலை எனப்படும்; புலியுள் ஆண், ஒருத்தல், போத்து, ஏற்றை எனப் படும்: உழையுள் ஆண், ஒருத்தல், ஏறு, கலை ஏற்றை எனப்படும்; மரையுள் ஆண், ஒருத்தல், ஏறு, போத்து, ஏற்றை எனப்படும்; சுவரியுள் ஆண், ஒருத்தல், ஏறு, ஏற்றை எனப்படும்; கராத்துள் ஆண், ஒருத்தல், ஏறு, ஏற்றை எனப்படும்; எருமையுள் ஆண், ஒருத்தல், போத்து,ஏற்றை, கண்டி எனப்படும்; சுறவில் ஆண் ஏற்றை எனப் படும்; பெற்றத்துள் ஆண், போத்து, ஏறு, ஏற்றை எனப்படும்; ‘எருது காலுறா திளையர் கொன்ற’ என வருதலின் எருதும் ஆம்; அதிகாரப் புறனடையாற் கொள்க. நீர்வாழ் சாதியுள் ஆண், வராற் போத்து வாளைப்போத்து என வரும். முசுவில் ஆண் கலை எனப்படும்; குரங்கும், ஊகமும் இவ்வாறே கொள்ளப்படும்; கடுவன் எனவும் வரும். ஆட்டினுள் ஆண் மோத்தை,தகர்,உதள்,அப்பர் என வரும்: புள்ளினுள் மயிலாண், எழால், சேவல், போத்து, ஏற்றை எனப்படும்; புள்ளினுள் ஆணெல்லாவற்றினும் மயிலல்லாதனவெல்லாம் சேவல், ஏற்றை எனப்படும். ஓரறிவுயிருள் ஆண் பெண் என வேறுபடுத்தலா வன ஏற்றைப்பனை ஆண்பனை என வரும்.

**596. பிடியென் பெண்பெயர் யானை மேற்றே.**

இனிப் பெண்பெயர் உணர்த்துகின்றான் இச் சூத்திர முதலாக

(இ-ள்) பிடி என்னும் பெண்பெயர் ஆளையின் மேலது என்றவாறு.

**597. ஒட்டகம் குதிரை கழுதை மரையிவை**
**பெட்டை யென்னும் பெயர்க்கொடைக் குரிய**

(இ-ள்) பெட்டை என்னும் பெயர் ஒட்டக முதலாகச் சொல்லப் பட்ட நான்கனது பெண்பாற்குப் பெயராம் என்றவாறு.

**598. புள்ளும் உரிய அப்பெயர்க் கென்ப.**

(இ-ள்) பெட்டை என்னும் பெயருக்குப் புள்ளிற் பெண்பாலு முரிய என்றவாறு.

599. பேடையும் பெடையும் நாடின் ஒன்றும்.

(இ-ள்) பேடை என்னும் சொல்லும் பெடை என்னும் சொல் லும் ஆராயுமிடத்துப் பெட்டை என்பதனோடு ஒன்றும் என்றவாறு.

இது, புள்ளில் வைத்தமையாற் புள்ளின்பின் வருதல் பெரும்பான்மை.

**600. கோழி கூகை ஆயிரண் டல்லவை**
**சூழுங் காலை அளகெனல் அமையா.**

(இ-ள்) கோழியுங் கூகையும் அளகெனப்படும்.

**601. பெண்பா லான**
**அப்பெயர்க் கிழமை மயிற்கு முரித்தே.**

(இ-ள்) அளகென்னும் பெண்பாற் பெயர் மயிலினது பெண் பாற்கும் உரித்து என்றவாறு.

**602. புல்வாய் நவ்வி உழையே கவரி**
**சொல்வாய் நாடிற் பிணையெனப் படுமே.**

(இ-ள்) புல்வாய் முதலாகிய நான்கற்கும் பிணை என்னும் பெண்மைப் பெயர் வழங்குதற்குரித்து என்றவாறு.

**603. பன்றி புல்வாய் நாயென மூன்றும்**
**ஒன்றிய என்ப பிணவென் பெயர்க்கொடை.**

(இ-ள்) பன்றி முதலாகிய மூன்றற்கும் பெண்பாற்குப் பிணவு என்னும் பெயர் பொருந்திற்று என்றவாறு.

**604. பிணவல் எனினும் அவற்றின் மேற்றே.**

(இ-ள்) பிணவல் என்று சொல்லினும் மேற்சொல்லப்பட்ட (50) வற்றின் மேல என்றவாறு.

**605. பெற்றமும் எருமையும் மரையும் ஆவே.**

(இ-ள்) ஆ என்னும் பெண்பெயர் பெற்றம் முதலாகிய மூன்றற்கு முரித்து என்றவாறு.

**606. பெண்ணும் பிணவு மக்கட் குரிய.**

(இ-ள்) பெண்ணென்னும் பெயரும் பிணவு என்னும் பெயரும் மக்களிற் பெண்பாற்குரிய என்றவாறு.

**607. எருமையும் மரையும் பெற்றமும் நாகே.**

(இ-ள்) எருமை முதலாகச் சொல்லப்பட்ட மூன்றற்கும் நாகு (63) என்னும் பெண்பெயர் உரித்து என்றவாறு.

**608. நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே.**

(இ-ள்) நீர்வாழ்வனவற்றுள் நந்தென்பதூஉம் நாகு என்னும் பெண்பெயர் பெறும் என்றவாறு.

**609. மூடுங் கடமையும் யாடல பெறாஅ.**

(இ-ள்) மூடும் கடமையும் யாட்டின் பெண்பால வென்றவாறு.

**610. பாட்டி என்ப பன்றியும் நாயும்.**

(இ-ள்) பாட்டி என்னும் பெயர் பன்றியினதூஉம் நாயினதூஉம் பெண்பெயர்க்குரிய என்றவாறு.

**611. நரியும் அற்றே நாடினர் கொளினே.**

(இ-ள்) நரியும் பெண்பாற்குப் பாட்டி என்னும் பெயர் பெறும் என்றவாறு. (67)

**612. குரங்கு முசுவும் ஊகமும் மந்தி.**

(இ-ள்) குரங்கு முதலாயின மூன்றன் பெண்பால் மந்தி என்னும் பெயர்பெறும் என்றவாறு.

இத்துணையுங் கூறப்பட்டன பெண்பாற் பெயராவன: யானை யுட் பெண் பிடி; ஒட்டகம் - பெட்டை; குதிரை - பெட்டை; கழுதை - பெட்டை; மரை - பெட்டை; நாகு, ஆ; புள்ளு - பெட்டை, பேடை பெடை; கோழி அளகு; கூகை, மயில் அளகு; புல்வாய் - பிணை; பிணா, பிணவு, பிணவல்; நவ்வி - பிணை; உழை, கவரி - பிணை: பன்றி - பிணவு, பிணவல், பாட்டி; நாய் - பிணவு, பிணவல், பாட்டி: பெற்றம் -ஆ, நாகு; எருமை ஆ. நாகு; மக்கள் - பெண், பிணவு: நந்து - நாகு; ஆடு மூடு, கடமை; நரி - பாட்டி: குரங்கு முசு, ஊகம் மந்தி எனவரும்.

இதனுள் எடுத்தோதாதன சான்றோர் செய்யுளகத்துக் கண்டு கொள்க வழக்கினுள்ளும் வந்தவாறு கண்டுகொள்ளலாம்.

613. **குரங்கினுள் ஏற்றைக் கடுவன் என்றலும்**
**மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்**
**செவ்வாய்க் கிள்ளையைத் தத்தை என்றலும்**
**வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்**
**குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்**
**இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்**
**எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்**
**முடிய வந்த வழக்கின் உண்மையிற்**
**கடிய லாகா கடனறிந் தோர்க்கே.**

இ∴து அதிகாரப் புறனடை.

(இ-ள்) குரங்கு முதலாகச் சொல்லப்பட்டவற்றை இப்பெயரான் உலகத்தார் வழங்குதலின் ஈண்டோதிய இலக்கணத்தின் மாறுபட்டு வருவன வழக்கினுஞ் செய்யுளினும் அடிப்பட்டுவரின் வழுவென்று கடியப்படா வென்றவாறு.

614. **பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே.**

(இ-ள்) பெண்ணும், ஆணும், பிள்ளையும் பற்றிவருஞ் சொல் மேலெடுத்தோதினவை என்றவாறு.

இனிச் சிறப்புவிதியுடைய அந்தணர்க் குரியன கூறப்படுகின்றன.

615. **நூலே கரகம் முக்கோல் மணையே**
**ஆயுங் காலை அந்தணர்க் குரிய.**

(இ-ள்) நூலும் கரகமும் முக்கோலும் மணையும் ஆராயுங்காலத்து அந்தணர்க்கு உரிய என்றவாறு.

616. **படையுங் கொடியுங் குடையும் முரசும்**
**நடைநவில் புரவியுங் களிறுந் தேரும்**
**தாரும் முடியும் நேர்வன பிறவும்**
**தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய.**

(இ-ள்) படை - கருவி. படை முதலான ஒன்பதும் செங்கோலும் பிறவுமென்றதனான் ஆரமுங் கழலு மெல்லாம் அரசர்க்குரிய என்றவாறு.

617. **அந்த ணாளர்க் குரியவும் அரசர்க்கு**
**ஒன்றிய வரூஉம் பொருளுமா ருளவே.**

(இ-ள்) அவை நாலுதொழில்: ஈதல் வேட்டல் வேட்பித்தல் ஓதல்.

618. **பரிசில் பாடாண் திணைத்துறைக் கிழமைப்பெயர்**
**நெடுந்தகை செம்மல் என்றிவை பிறவும்**
**பொருந்தச் சொல்லுதல் அவர்க்குரித் தன்றே.**

(இ-ள்) இப் பொருண்மையும் அரசர்க்கு முரித்து அந்தணர்க்கு முரித்து என்றவாறு.

619. **ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும்**
**யாரும் சார்த்தி அவையவை பெறுமே.**

(இ-ள்) நகரும் தமது இயற்பெயரும் சிறப்புப்பெயரும் தத்தந் தொழிற்கேற்ற கருவியும் எல்லாரையுஞ் சார்த்தி அவையவை வருதல் பெறும் என்றவாறு.

620. **தலைமைக் குணச்சொலுந் தத்தமக் குரியதோர்**
**நிலைமைக் கேற்ப நிகழ்த்துப என்ப.**

(இ-ள்) தலைமைக் குணமுடையராகக் கூறுதலும் தத்தமக்கேற்ற நிலைமைக்குப் பொருந்துமாறு நிகழ்த்துப என்றவாறு.

எனவே, இறப்பவுயர்தல் இறப்ப விழிதல் ஆகாவென்றவாறாம்.

621. **இடையிரு வகையோர் அல்லது நாடிற்**
**படைவகை பெறாஅர் என்மனார் புலவர்.**

(இ-ள்) அரசரும் வணிகரும் அல்லாதோர்க்குப் படைக்கல வகை கூறப்பெறார் என்றவாறு.

622. **வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை.**

(இ-ள்) வைசியன் வாணிகத்தான் வாழும் வாழ்க்கையைப் பெறும் என்றவாறு.

623. **மெய்திரி வகையின் எண்வகை உணவின்**
**செய்தியும் வரையார் அப்பா லான்.**

(இ-ள்) எண்வகை உணவாவன: நெல்லு, காணம். வரகு, இறுங்கு,தினை, சாமை, புல்லு, கோதும்பை.

இவையிற்றை உண்டாக்குகின்ற உழவுத்தொழலும் வாணிகர்க்கு வரையா ரென்றவாறு.

624. **கண்ணியுந் தாரும் எண்ணினர் ஆண்டே.**

(இ-ள்) வைசியருக்கும் சுண்ணியுந் தாரும் சொல்லப் பெறு மென்றவாறு.

625. **வேளாண் மாந்தர்க் குழதூ ணல்லது**
**இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.**

(இ-ள்) என்றது, வேளாண் மாந்தர்க்குத் தொழில் உழவே என்றவாறு.

626. **வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்**
**வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே.**

எய்தியதன்மேற் சிறப்புவிதி.

(இ-ள்) வேந்தரான் ஏவப்பட்ட தொழிலினானே படையுங் கண்ணியும் வேளாண் மாந்தர்க்கும் உளவாகு மென்றவாறு.

627. **அந்த ணாளர்க் கரசுவரை வின்றே.**

(இ-ள்) அமாத்திய நிலையும் சேனாபதி நிலையும் பெற்ற அந்த ணாளர்க்கு அரசர் தன்மையும் வரைவின்று வென்றவாறு.

அஃதாவது மந்திரி புரோகிதனாகியவழிக் கொடியும் குடையும் கவரியும் தாரு முதலாயின அரசராற் பெற்று அவரோடு ஒரு தன்மை யராசியிருத்தல்.

628. **வில்லும் வேலுங் கழலுங் கண்ணியும்**
**தாரும் ஆரமுந் தேரு மாவும்**
**மன்பெறு மரபின் ஏனோர்க் குரிய.**

(இ-ள்) வில்லு முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் மன்னனாற் பெற்ற மரபினால் வைசியர்க்கும் வேளாளர்க்குமுரிய என்றவாறு.

629. **அன்ன ராயினும் இழிந்தோர்க் கில்லை.**

(இ-ள்) அன்னர்தா மிழிந்தோராயினும் மேற்சொல்லப்பட்ட மன்ன னால் வில்லு முதலாயின பெற்ற மரபினராய நான்கு குலத்திலும் இழிந்த மாந்தர்க்கு அவை உளவாகக் கூறப்படா வென்றவாறு. எனவே, அவரவர்க் குரியவாற்றாற் கூறப்பெறு மென்றவாறு.

630. **புறக்கா ழனவே புல்லெனப் படுமே.**

(இ-ள்) ஓரறிவுடையன புறவயிர்ப்புடையனவற்றைப் புல் என்று சொல்லுவர் என்றவாறு.

அவையாவன: தெங்கு, பனை, சுமுகு, மூங்கில் முதலாயின.

**631. அகக்கா ழனவே மரமெனப் படுமே.**

(இ-ள்) உள்வயிர்ப் புடையனவற்றை மரமெனப்படுமென்றவாறு.

**632. தோடே மடலே ஓலை என்றா**
**ஏடே இதழே பாளை என்றா**
**ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்**
**புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்.**

(இ-ள்) தோடு முதலாகச் சொல்லப்பட்ட உறுப்பின் பெய ரெல்லாம் புல்லாகிய உறுப்பின்கண்ணே வருமென்றவாறு.

இதனானே புறவயிர்ப்பும் உள்வயிர்ப்புமில்லாதனவற்றுள் ஒரு சாரன இவ்வகைப்பட்ட உறுப்புப் பெயருடையனவாகி இவையும் புல்லெனப்படும் என்றவாறு.

அவையாவன: வாழை, ஈந்து, தாமரை, கழுநீர் என்று த் தொடக்கத்தன.

**633. இலையே முறியே தளிரே தோடே**
**சினையே குழையே பூவே அரும்பே**
**நனையே உள்ளுறுத் தனையவை யெல்லாம்**
**மரனொடு வருஉங் கிளவி என்ப.**

(இ-ள்) இலை முதலாகச் சொல்லப்பட்ட உறுப்புப்பெயர் மரத்துக்கு அங்கமாம் என்றவாறு.

இதனானே புறவயிர்ப்பும் உள்வயிர்ப்பும் இல்லாதனவற்றுள் ஒரு சாரன இவ்வுறுப்புப்பெயர் உடையன மரமெனப்படுமென்று கொள்ளலாம்.

அவையாவன: முருக்கு தணக்கு முதலாயின.

**634. காயே பழமே தோலே செதிளே**
**வீழோ டென்றாங் கவையும் அன்ன.**

(இ-ள்) இச் சூத்திரம் அவ் விருவகைக்கும் பிற்கூறலின் சாய் முத லாகச் சொல்லப்பட்ட அவ்வுறுப்புப்பெயர் அவ்விரு வகைக்கும் பொதுவெனப்படு மென்றவாறு.

தாழை பூவுடைத் தாகலானும் கோடுடைத் தாகலானும் புறவயிர்ப் பின்மையானும் மரமெனப்படு மாயினும் புல் என்றல் பெரும்பான்மை.

**635. நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்துங்**

**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்**
**இருதிணை ஐம்பால் இயனெறி வழாமைத்**
**திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்.**

என் - எனின், இதுவுமொரு மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உலகு நிலமுதலாகிய ஐம்பெரும்பூதங் கலந்த மயக்க மாதலான் மேற்சொல்லப்பட்ட பொருள்களைத் திணையும் பாலும் வழாமல் திரிபுபடாத சொல்லோடே தழுவுதல் வேண்டும் என்றவாறு.

கலத்தலாவது முத்தும் பவளமும் நீலமும் மாணிக்கமும் விரவினாற்போறல்.

மயக்கமாவது பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கியொன்றாதல் போறல்.

உலகமென்றது உலகிளையும் உலகினுட் பொருளையும் உலக மாவது முத்தும் மணியுங் கலந்தாற்போல நிலம் நீர் தீ வளி ஆகாயம் என விரவி நிற்கும். உலகினுட் பொருள் பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி யொன்றானாற்போல வேற்றுமைப் படாது நிற்கும் அவ்விரண்டனையும் உலகம் உடைத்தாகலிற் கலந்த மயக்கமென்றார்.

இப் பொருள் எல்லா வுலகத்தையும் விட்டு நீங்காமையின் இவற்றை ஒரு முகத்தான் நோக்க வேறுபாடிலவா மாதலான் மேற்கூறிப் போந்த முறையினான் வேறுபடுத்து இருதிணையாகவும் ஐம்பாலாகவும் இயன்ற நெறி வழுவாமைத் திரிபுபடாத சொல் லோடே புணர்க்க என்றவாறாம்.

**உதாரணம்**

சாத்தன் சோற்றை உண்டான் என்பது. இ∴து உண்டற்குரியா னெனக் கூறுதலின் மரபாயிற்று. அ∴தேல் வழாமை தழால் வேண்டு மெனக் கருதியபொருள் முடியும்; திரிவில்சொல் என்றது மிகை யெனின், ஒக்கும். குழவி என்பது உயர்திணைக்கண் வரின் அதற்குரிய பாலாற் கூறாது அ∴றிணைக்குரிய பாலாற் கூறப்படுதலின் அவ் வகையான் வருவது வழுவாயினும் திரிவில்சொல் என்றதனான் அதுவும் அடக்கிக் கூறினான்.

636. **மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை**
**மரபுவழிப் பட்ட சொல்லி னான.**

என் - எனின், செய்யுட் குரியதொரு மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஈண்டுச் சொல்லப்பட்ட மரபுநிலையிற் றிரிதல் செய் யுட்கில்லை; மரபு வழிப்பட்ட சொல்லினாற் செய்யவேண்டுதலின் என்றவாறு.

எனவே, யாதானும் ஒரு செய்யுளும் ஈண்டோதிய மரபினாற் செய்ய வேண்டும் என்றவாறாம்.

செய்யுட்கில்லை எனவே, வழக்கினுட் சில திரியவும் பெறும். அவை வழக்கினுள் ஆணினைப் போத்தென்றல் போல்வன.

**637. மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்.**

(இ-ள்) மரபுநிலை திரிந்துவரிற் பொருள் வேறுவேறாகு மென்றவாறு.

எனவே, வழுவென்றவாறாம்.

**638. வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே**
**நிகழ்ச்சி அவர்கட் டாக லான.**

என் - எனின், ஐயமறுத்தலை நுதலிற்று.

(இ-ள்) வழக்கென்று சொல்லப்பட்டது உயர்ந்தோர் மேலது; நூலின் நிகழ்ச்சி அவர்மாட்டாதலான் என்றவாறு.

மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லையெனவும் அதனானே வழக்கிற் சிறுபான்மை வருமெனவும் செய்யுள் மரபு ஒழிய வரின் அது வழுவாமெனவும் கூறினானாயிற் பாயிரத்துள் 'வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி னெழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி என்றதனொடு மாறு கொள்ளுமோவென ஐயுற்றார்க்கு ஆண்டு வழக்கென்று சொல்லப்பட்டது உயர்ந்தோர் வழக்கினை எனவும் இழிந்தோர் வழக்கு வழக்கெனப்படா தெனவும் கூறியவாறு.

**639. மரபுநிலை திரியா மாட்சிய வாகி**
**உரைபடு நூல்தாம் இருவகை நிலைய**
**முதலும் வழியுமென நுதலிய நெறியின.**

என் - எனின், மேற் செய்யுளியலுள் தோற்றுவாய் செய்த நூலை இலக்கண வகையான் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மரபாவது நூற்கு இன்றியமையாத இயல்பு. அவ்வியல்பு திரியாத மரபுடையவாகி உரைக்கப்படும் நூல்தாம் இருவகைய; முதனூல் எனவும் வழி நூல் எனவும் என்றவாறு.

உரைக்கவென்பது விகாரத்தால் தொக்கது. அது வருகின்ற சூத்திரத்தாற் கூறுப.

சார்புநூல் என்பதும் ஒன்றுண்டாலெனின், அஃது இருவர் ஆசிரியர் கூறியவதற்கு உடம்பட்டு வருதலின் அதுவும் வழிநூலென அடங்கும்: எதிர்நூல் என்பதும் ஒன்றுண்டு. அதுவும் ஒரு முனை வனாற் செய்யப்படின் முதனூலாம்; பிறர் செய்யின் வழங்காது.

**640. வினையின் நீங்கி விளங்கிய அறிவின்**
**முனைவன் கண்டது முதனூ லாகும்.**

என் - எனின், நிறுத்தமுறையானே முதனூலாமாறு உணர்த்து தல் நுதலிற்று.

சூத்திரத்தாற் பொருள் விளங்கும்.

641. **வழியெனப் படுவ ததன்வழித் தாகும்**

என் - எனின், வழிநூலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வழி நூல் எனப்படுவது முதல்வன் கண்ட நூல்வழியே செய்வது என்றவாறு.

அ∴தேல்,இதனாற் பயன் என்னையெனின், அது வருகின்ற சூத்திரத்தான் விளங்கும்.

642. **வழியின் நெறியே நால்வகைத் தாகும்.**

என் - எனின், வழிநூல் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று

(இ-ள்) வழிநூல் எனப்படுவது நான்கு வகைப்படும் என்றவாறு.

அது முன்னர்க் கூறுதும்.

643. **தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்**
**ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே.**

என் - எனின், வழிநூல் வகையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) முதனூலாசிரியன் விரித்துச் செய்ததனைத் தொகுத்துச் செய்தலும், தொகுத்துச் செய்ததனை விரித்துச் செய்தலும், அவ் விருவகையினையும் தொகைவிரியாகச் சொல்லுதலும், வடமொழிப் பனுவலை மொழிபெயர்த்துத் தமிழ்மொழியாற் செய்தலும் என்றவாறு.

இது, வழி நூலானாய பயன்.

644. **ஒத்த சூத்திரம் உரைப்பிற் காண்டிகை**
**மெய்ப்படக் கிளந்த வகைய தாகி**
**ஈரைங் குற்றமும் இன்றி நேரிதின்**
**முப்பத் திருவகை உத்தியொடு புணரின்**
**நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்**

என் - எனின், நூற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று

(இ-ள்) இனி, ஒத்த சூத்திரத்தானும் காண்டிகையானும் பொருண்மேற் கூறிய வகையுடைத்தாகிப் பத்துக் குற்றமும் இன்றி நுண்ணிதாகிய முப்பத்திரண்டு வகைப்பட்ட தந்திர வுத்தியொடு னருமாயின் நூலெனச் சொல்லுவர் புலவர் என்றவாறு.

உரைப்பின் என்பதனை முன்னே கூட்டி நூலுரைப்பின் எனப் பொருளுரைக்க. அவையாமாறு முன்னர்க் காட்டுதும்.

645. **உரையெடுத் ததன்முன் யாப்பினுஞ் சூத்திரம்**
**புரைதப உடன்படக் காண்டிகை புணர்ப்பினும்**
**விதித்தலும் விலக்கலும் எனவிரு வகையொடு**
**புணர்ந்தவை நாடிப் புணர்க்கவும் பெறுமே.**

இதுவுமது.

(இ-ள்) சூத்திரத்தின் முன்னர் உரையை விரித்துரைக்கு மிடத் துஞ் சூத்திரப் பொருள் விளங்கக் காண்டிகை புணர்க்கு மிடத்தும் ஆசிரியன் இப்பொருள் இவ்வாறு கூறல்வேண்டுமென விதித்தலும் இப்பொருள் இவ்வாறு கூறப்பெறானென விலக்கலுமாகிய இரு வகையோடே கூடப் பொருந்தினவவை ஆராய்ந்து புணர்க்கவும் ஆம் என்றவாறு.

இதனாற் சொல்லியது ஆசிரியன் சொன்ன சூத்திரத்தினைக் குறைபடக் கூறினானென்றல் அமையாமையானும் அவன் கூறுகின்ற பொருளினை நிலைபெறுத்தற்குப் பிறிதொன்றை விரித்தோதிய நெறியை விலக்கியும் பொருள் உரைத்துக் கொள்ளப்படுமென்றவாறு

செய்யுளியலுள்,

**"நூலெனப் படுவது நுவலுங் காலை**
**முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்**
**தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி**
**உண்ணின் றகன்ற உரையொடு பொருந்தி**
**நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே."** (செய்யுளியல்.159)

என்று கூறுதலின் இதுவும் இலக்கணமாகக் கொள்ளலாம்.

646. **மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு**
**சில்வகை எழுத்தின் செய்யுட் டாகிச்**
**சொல்லுங் காலை உரையகத் தடக்கி**
**நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாகித்**
**துளக்கல் ஆகாத் துணைமை யெய்தி**
**அளக்கல் ஆகா அரும்பொருட் டாகிப்**
**பல்வகை யானும் பயன்தெரி புடையது**
**சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்.**

என் - எனின், நூற்கு அங்கமாகிய சூத்திரத்திலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேல் தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல் என நால்வகையினும் சொல்லப்பட்ட பொரு ளொடு, சிலவெழுத்தினான் இயன்ற செய்யுட்டாகி, உரைக்குங் காலத்து அவ்வுரையிற் பொருளெல்லாம் தன்னகத்தடக்கி, நுண்ணிய

பொருண்மையொடு பொருந்திய விளக்கமுடைத்தாகி, கெடுக்கலா காத துணைச்சூத்திரங்களை யுடைத்தாகி வரையறுக்கப்படாத அரிய பொருளையுடைத்தாகிப் பலவாற்றானும் பயனையாராய்தல் உடையது சூத்திரம் எனக் கூறினார் புலவர் என்றவாறு.

அளக்கலாகா அரும்பொருளாவது பலமுகத்தானும் பொருள் கொள்ளக்கிடத்தல்.

செய்யுளியலுள்,

**"சூத்திரந் தானே ஆடி**
**நிழலின் அறியத் தோன்றி**
**நாடுத லின்றிப் பொருள்நனி விளங்கி**
**யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே."** (செய்யுளியல்.162)

என்பதாஉம் இதற்கிலக்கணம்.

647. **பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்**
**கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்.**

என் -எனின், காண்டிகை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) குற்றமில்லாத சூத்திரஞ் சொன்ன இயல்பினான் மறை வின்றி விளக்குவது காண்டிகையாமென்றவாறு.

648. **விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்**
**சுட்டிய சூத்திர முடித்தற் பொருட்டா**
**ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்**
**மேவாங் கமைந்த மெய்ந்நெறித் ததுவே.**

இதுவுமது.

(இ-ள்) சூத்திரத்திற்படுஞ் சொற்பொருளை விட்டு நீங்குதலின்றி விரிவோடே பொருந்திக் குறித்த சூத்திர முடித்தற்காக ஏது நெறி யானும் எடுத்துக் காட்டினானும் பொருந்தி யாங்கமையும் பொரு ணெறியை யுடைத்துக் காண்டிகை யென்றவாறு.

விட்டகல்வின்றி விரிவொடு பொருந்தலாவது மிக அகலாமை இம்மனை நெருப்புடைத் தென்றது சூத்திரப் பொருள்; புகையுடைத் தாதலானென்பது ஏது. அடுக்களைபோலவென்பது எடுத்துக்காட்டு இவ்வகையினாற் சூத்திரப் பொருளுரைக்க வென்றவாறு.

649. **சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற**
**இன்றி யமையா தியைபவை எல்லாம்**
**ஒன்ற உரைப்ப துரையெனப் படுமே.**

உரையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) சூத்திரத்துட் பொருளொழியவும் அந்நூலகத்தில் யாப்பிற்கும் பொருந்த இன்றியமையாதன வெல்லாங் கொணர்ந்து பொருந்த உரைப்பது உரையாகு மென்றவாறு.

650. **மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்த்**
**தன்னூ லானும் முடிந்தநூ லானும்**
**ஐயமு மருட்கையுஞ் செவ்விதின் நீக்கித்**
**தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்**
**துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்.**

இதுவுமது.

(இ-ள்) உரையாவது. 'மறுதலைக்கடாஅ மாற்றமு முடைத்தாக' ஐயப்பட்டு நிற்றலும் மருண்டு நிற்றலும் நீக்கி, தன்னூலானாதல் அப் பொருண்முடிவுறக் கூறின நூலானாதல் தெளியவொரு பொருளை யொற்றுமைப்படுத்துதல், இதுவே பொருளெனத் துணிதல் உரையிற் கியல்பென்றவாறு.

மாற்றமுமுடைத்தாகி யென்ற வும்மையால் விடையுமுடைத் தாகி எனலாம்.

651. **சொல்லப் பட்டன எல்லா மாண்பும்**
**மறுதலை யாயின் மற்றது சிதைவே.**

(இ-ள்) மேலவற்றிற் கோதலான நூற்குரியதொரு மரபு முதனூலாயிற் சிதைவில்லை யென்றவாறு.

என்னை? ஆவன கூறியது விரியகலாதன சிதைவது வழிநூ லென்றவாறாம்.

652. **சிதைவில என்ப முதல்வன் கண்ணே.**

653. **முதல்வழி யாயினும் யாப்பினுட் சிதையும்**
**வல்லோன் புனையா வாரம் போன்றே.**

வழிநூற் குரியதொரு மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) முதனூலின் வழிச்செய்யினும் அந்நூல் யாப்பினுட் சிதையும் வல்லவன் புனையாத வாரம்போல வென்றவாறு.

கோவைவாசியா (?) னென்றவாறாம்.

654. **சிதைவெனப் படுபவை வசையற நாடிற்**
**கூறியது கூறல் மாறுகொளக் கூறல்**
**குன்றக் கூறல் மிகைபடக் கூறல்**
**பொருளில கூறல் மயங்கக் கூறல்**

**கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்**
**பழித்த மொழியான் இழுக்கக் கூறல்**
**தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்**
**என்ன வ கையினும் மனங்கோள் இன்மை**
**அன்ன பிறவும் அவற்றுவிரி யாகும்.**

மேலதிகாரப்பட்ட ஈரைங் குற்றமும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கூறியது கூறலாவது ஒருகாற் கூறியதனைப் பின்னுங்கூறல்.

மாறுகொளக் கூறலாவது - ஒருகாற் கூறிய பொருளொடு மாறு கொள்ளுமாறு பின்கூறல்.

அஃதாவது தவம்நன்று என்ற வன்றான் தவந்தீதென்று கூறல்.

குன்றக் கூறலாவது -தானதிகரித்த பொருட்களுள் சிலவற்றைக் கூறாதொழிதல்.

மிகைபடக் கூறலாவது - அதிகாரப் பொருளன்றிப் பிறபொரு ளுங் கூறுதல் அஃதாவது தமிழிலக்கணஞ் சொல்லுவானெடுத்துக் கொண்டான் வடமொழி யிலக்கணமும் கூறல்.

பொருளில் கூறலாவது - முன்னும் பின்னும் வருகின்ற பொருண்மைக் கொப்பின்றிப் பயனில்லாதன கூறல்.

மயங்கக் கூறலாவது - கேட்டார்க்குப் பொருள் விளங்குமாறின்றிக் கூறல்.

கேட்போர்க்கின்னா யாப்பிற்றாதலென்பது - பொருள் யாக்கப்பட்ட சூத்திரஞ் சந்தவின்பமின்றி யிருத்தல்.

பழித்தமொழியான் இழுக்கக் கூறலாவது தானொரு பொருளை யொரு வாய்பாட்டாற்றிரித்துப் பிறிதொரு வாய்பாட்டாற் கூறுதல் அக் குறிப்பு உலகவழக்கின்மையாற் பிறர்க்குப் புலப்படாதாம். அதனான் அதுவுங் குற்றமாயிற்று.

என்ன வகையினும் மனங்கோள் இன்மையாவது எழுத்தினானுஞ் சொல்லினானும் பொருளினானு மனங்கொள்ளுமாறு கூறாமை.

**655. எதிர்மறுத் துணரினத் திறத்தவும் அவையே.**

இதுவுமது. நூற்குற்றம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எதிர்மறுத்து உணர்வராயின், அத்திறத்தவும் குற்றமா மென்றவாறு.

**உதாரணம்**

பாவஞ் செய்தான் நிரையம்புகு மெனக் கருதிக் கூறுவான் தவஞ் செய்வான் சுவர்க்கம் புகுமென்றல் இவ்வாறு கூறிச் சுவர்க்கம் பெறுமென்னும் பொருட்கண் நிரையம் புகுமென்ற பொருள் தோன்றாமையிற் குற்றமாயிற்று.

656. ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்
நுதலிய தறிதல், அதிகார முறையே,
தொகுத்துக் கூறல், வகுத்துமெய்ந் நிறுத்தல்,
மொழிந்த பொருளோ டொன்ற வைத்தல்,
மொழியா ததனை முட்டின்றி முடித்தல்,
வாரா ததனான் வந்தது முடித்தல்,
வந்தது கொண்டு வாராதது முடித்தல்,
முந்து மொழிந்ததன் தலைதடு மாற்றே,
ஒப்பக் கூறல், ஒருதலை மொழியே,
தன்கோட் கூறல் உடம்பொடு புணர்த்தல்,
பிறனுடம் பட்டது தானுடம் படுதல்,
இறந்தது காத்தல், எதிரது போற்றல்,
மொழிவாம் என்றல்,கூறிற் றென்றல்
தான்குறி யிடுதல், ஒருதலை யன்மை
முடிந்தது காட்டல், ஆணை கூறல்,
பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்,
தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்
மறுதலை சிதைத்துத் தன்துணி புரைத்தல்,
பிறன்கோட் கூறல், அறியா துடம்படல்,
பொருளிடை யிடுதல், எதிர்பொருள் உணர்த்தல்,
சொல்லின் எச்சம் சொல்லியாங் குணர்த்தல்,
தந்துபுணர்ந் துரைத்தல், ஞாபகம் கூறல்,
உய்த்துக்கொண் டுணர்த்தலொடு, மெய்ப்பட நாடிச்
சொல்லிய அல்ல பிறவவண் வரினும்
சொல்லிய வகையாற் சுருங்க நாடி
மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்டு
இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்
நுனித்தகு புலவர் கூறிய நூலே.

தந்திரவுத்தி யாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொழிப்பு: நுதலிய தறிதல் முதலாகச் சொல்லப்பட்டன வும் அத்தன்மைய பிறவுந் தந்திர உத்தியாம் என்றவாறு.

தந்திரமெனினும் நூலெனினும் ஒக்கும். உத்தியென்பது வட மொழிச் சிதைவு. அது சூத்திரத்தின்பாற் கிடப்பதொரு பொருள் வேறுபாடு காட்டுவது.

(இ-ள்) ஒத்த காட்சி உத்திவகை விரிப்பினென்பது நூற்குப் பொருந்திய காட்சியினானுரைக்கும் உத்திவகையை விரிக்குங்காலத் தென்றவாறு.

நுதலியதறிதலாவது - சூத்திரத்திற் சொற்றபொருளுணர்த்த லன்றி, இதன் கருத்திதுவென உணர்த்துதல்.

அஃதாவது 'எழுத்தெனப்படுப' (நூன்மரபு:1) என்னுஞ் சூத்தி ரத்துள் 'எழுத்து இனைத்தென வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று என்றல்.

அதிகார முறையாவது முன்னம் பலபொருளை யதிகரித்த வழிப் பின்னும் அம் முறையினானே விரித்துணர்த்துதல்.

அஃதாவது உயர்திணை யஃறிணையென அதிகரித்து 'ஆடூஉ வறிசொல்' (கிளவியாக்கம் -2) என்னுஞ் சூத்திரத்தான் நிறுத்தமுறை பிறழாமல் உயர்திணை கூறல் இன்னும் இதனானே ஒரு சூத்திரத் திலே கருதின பொருளை வைத்து வருகின்ற சூத்திரத்துள் ஓதாது அதன் காரியமாயின கூறியவழி அதனைச் சூத்திரந்தோறுங் கொணர்ந் துரைத்தல். அஃதாவது 'அகர விறுதிப் பெயர்நிலை முன்னர்' (உயிர் மயங்கியல் -1) என்னுஞ் சூத்திரத்திற் 'கசதபத் தோன்றி' னென வோதி 'வினையெஞ்சு கிளவியு' (உயிர் மயங்கியல் -2) மென்னுஞ்குத்திரத்துள் ஓதிற்றிலராயினும் அதிகாரமுறைமையினால் வல் லெழுத்து வருவழியென வுரைத்தல்.

தொகுத்துக் கூறலாவது - வகைபெறக் கூறல் வேண்டுமாயினு அதனைத் தொகுத்துக் கூறல்.

'எழுத்தெனப் படுப அகரமுத னகர விறுவாய் முப்பஃ தென்ப' (தூன்மரபு, 1) என்றாற்போல்வன இன்னும் பல சூத்திரத்தாற் கூறிய பொருளை இத்துணையுங் கூறப்பட்டதிதுவெனக் கூறலுமாம். வகையே என்றதனாற் கொள்ளலாம்.

வகுத்து மெய்ந் நிறுத்தலாவது - தொகைபடக் கூறிய பொருளை வகைபடக் கூறல்.

அஃது 'அ, இ, உ, எ, ஒ' (நூன்மரபு3) என்னுஞ் சூத்திரத்தாற் கொள்ளலாம். இன்னுமதனானே தொகைபடச் சூத்திரஞ்செய்தவழி அவற்றுள் ஒரோவொன்று பொதுவிலக்கணத்தான் முடியாதவழிப் பெரும்பான்மை சிறுபான்மைகொண்டு வகுத்துப் பொருளுரைத்தலுமாம். இன்னுமதனானே தொகைபடக் கூறியவதனை வகுத்துப் பொருளுரைத்தலுமாம்.

மொழிந்த பொருளோடொன்ற வைத்தலாவது சூத்திரத்துட் பொருள் பலபடத் தோன்றுமாயின் முற்பட்ட சூத்திரத்திற்கொக்கும் பொருளுரைத்தல்.

அன்றியும் முற்பட்ட சூத்திரத்தினான் ஒருபொருளோதியவழிப் பிற்பட்ட சூத்திரமும் பொருளோடொன்ற வைத்தலுமாம்.

மொழியாததனை முட்டின்றி முடித்தலாவது எடுத்தோதாத பொருளை முட்டுப்படாமல் உரையினான் முடித்தல்

இதனை 'உரையிற்கோடல்' என்ப. இக் கருத்தினானே,

**"சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை யெல்லாம்
ஒன்ற வுரைப்ப துரையெனப் படுமே."** (மரபியல்.105)

என ஓதுவானாயிற் எனலாம்.

வாராததனான் வந்தது முடித்தலாவது - ஒருங்கெண்ணப்பட்ட பொருளொன்றனைப் பகுத்துக் கூறியவழி ஆண்டு வாராததற் கோதிய விலக்கணத்தை இதன்கண்ணும் வருவித் துணர்த்துதல்

வந்ததுகொண்டு வாராதது முடித்தலாவது - ஒருங்கெண்ணப் பட்ட வற்றுளொன்றைப் பகுத்து இலக்கணங் கூறியவழி வாராததன் கண்ணும் இவ்விலக்கணத்தைக் கூட்டி முடித்தல்.

முந்துமொழிந்ததன் தலைதடுமாற்றாவது முற்பட அதிகா்த்த பொருளை யவ்வகையினாற் கூறாது முறைபிறழக் கூறுதல்.

இவ்வாறு கூறுங்கால் ஒருபயளோக்கிக் கூறல்வேண்டும். அது புள்ளி மயங்கியலுட் கண்டுகொள்ளலாம்.

ஒப்பக்கூறலென்பது ஒரு பொருளெடுத்து இலக்கணங் கூறிய வழி அதுபோல்வனவற்றையு மிலக்கணத்தான் முடித்தல்.

ஒருதலை மொழியாவது - ஏகாக்கர மென்னும் வடமொழிப் பொருண்மை அ∴தாவது, சூத்திரத்திற்குப் பொருள் கவா்த்துத் தோன்றின் அதனு ளொன்றனைத் துணிந்து கூறல்.

தன்கோட் கூறலாவது - பிற நூலாசிரியா் கூறியவாறு கூறாது தன் கோட்பாட்டால் கூறுதல்.

அது வேற்றுமை எட்டென்றல்.

உடம்பொடு புணா்த்தலாவது இலக்கணவகையான் ஓநுத லன்றி யாசிரியன் ஒரு சூத்திரத்தின்கண்ணே யொரு சொல்லை வைப்பனாயின் அவ்வைப்பினை இலக்கணமாகக் கோடல்.

ஒற்றீற்றுச் சொல்லை யுகரங்கொடுத்துக் கூறுகவென விலக் கணங் கூறிற்றில ராயினும் 'ஆரும் அருவும் ஈரொடு சிவணும்' (விளி மரபு 21) என ஓதுதலின், 'ஆா்' என்பது 'ஆரும்' என உகரம் பெற்றது. இதனைப் பிறாண்டுங் கோடல்.

பிறனுடம் பட்டது தானுடம்படுதலாவது - பிறநூலாசிரியன் உடம்பட்ட பொருட்குத் தானுடம்படுதல்.

அ∴தாவது இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருட்கண் வருமெனப் பாணினியாா் ஓதினாா்; அ∴து இவா்க்கும் உடம்பாடு.

இறந்தது காத்தலாவது - மேற்கூறப்பட்ட சூத்திரத்தாற் கூறப் படாத பொருளைப் பின்வருகின்ற சூத்திரத்தா னமைத்தல்.

எதிரது போற்றலாவது - முன் கூறப்பட்ட சூத்திரத்தானே வருகின்ற சூத்திரத்திற் பொருளினையும் பாதுகாக்குமாறு வைத்தல்.

மொழிவாமென்றலாவது - சில பொருளைக் கூறி அவற்றுள் ளொன்றனை யின்னவிடத்துக் கூறுவாமென வுரைத்தல்.

'புணரிய நிலையிடைக் குறுகலும்' (மொழிமரபு. 2) என்பத னாற் கொள்ளலாம்.

கூறிற்றென்றலாவது - பல பொருளா யதிகரித்தவற்றுட் சில பொருளை மேற்சொல்லப்பட்டனவென்றல்.

'மாத்திரை வகையும் எழுத்தியல்வகையு மேற்கிளந்தன்ன' (செய்யுளியல். 2) என்றதனாற் கொள்ளலாம்.

தான் குறியிடுதலாவது உலகின்கண் வழக்கின்றி யொரு பொருட்கு ஆசிரியன்றான் குறியிடல்.

அஃது உயர்திணை யஃறிணையென்பன.

ஒருதலையன்மை முடிந்தது காட்டலாவது ஒரு பொருளை யோதிய வழிச் சொல்லுவதற்கே யுரித்தன்றிப் பிறபொருட்கும் பொதுவாக முடித்தமை காட்டல்.

ஆணை கூறலாவது ஒரு பொருளைக் கூறும்வழி ஏதுவிளாற் கூறலன்றித் தன் னாணையாற் கூறல்.

வேற்றுமை யேழெனப் பாணினியார் கூறினமையின் அவர் விளியை முதல்வேற்றுமையி லடக்கினார் அதற்குத் திரிபு கூறாது அதனை எட்டாம் வேற்றுமை யென்றல் ஆண்டுக் கடாவப்படாது.

பல்பொருட் கேற்பின் நல்லது கோடலாவது - ஒரு சூத்திரம் பல பொருட்கேற்குமாயின் அவற்றுள் நல்லதனைப் பொருளாகக் கோடல்.

தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடலாவது - தொகுத்துக் கூறிய சொல் தன்னானே பிறிதுமொரு பொருள் வகுத்துக்காட்டல்.

'அது குற்றியலுகர முறைப்பெயர் மருங்கின்' (விளிமரபு.9) என்னுஞ் சூத்திரத்தான் மொழிமுதற் குற்றுகரமுங் கோடல்.

சொல்லின் முடிபின் அப்பொருண் முடித்தலென்பதுமது.

மறுதலை சிதைத்துத் தன்றுணி புரைத்தலாவது - பிற நூலா சிரியன் கூறின பொருண்மையைக் கெடுத்துத் தன்றுணிவு கூறுதல்.

அஃ்தாவது நெட்டெழுத்தேழ் அளபெடையென்பன குற்றெழுத் தின் விகாரமென்பாரை மறுத்து வேறோரெழுத்தாக வோதுதல்

பிறன்கோட் கூறலாவது - பிற நூலாசிரியன் கொண்ட கோட் பாட்டைக் கூறுதல்.

அது 'வேற்றுமை தாமே யேழென மொழிப' (வேற்றுமையியல். 1) என்றல்.

அறியா துடம்படலாவது - தானறியாத பொருளைப் பிறர் கூறியவாற்றா னுடம்படுதல்.

அஃ்து ஏழாம்நரகம் இத்தன்மைத் தென வொருவன் கூறியவழி அது புலனாகாதாதலின் அவன் சொன்னதற் குடம்படுதல்; இது வழி நூலாசிரியர்க் குரித்து.

பொருளிடை யிடுதலாவது - ஒருபொருளை யோதியவழி யதற்கினமாகிய பொருளைச் சேரக்கூறாது இடையீடுபடக் கூறுதல்.

'அது பெண்மை சுட்டிய' (பெயரியல். 24) வென்னுஞ் சூத்திர மோதி அதன் பகுதியாகிய ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி யென்பதனை இடையிட்டு வைத்தல் போல்வன.

எதிர்பொரு ளுணர்த்தலாவது - இனிக் கூறவேண்டுவதிது வென வுனர்த்தல்.

சொல்லின் எச்சம் சொல்லியாங் குணர்த்தலென்பது - பிரி நிலை முதலாகச் சொல்லப்பட்ட எச்சங்களைக் கண்டு ஆங்குச் சொல்லியவாற்றாற் பொருள்கோடல்.

தந்துபுணர்ந்துரைத்தலாவது முன்னாயினும் பின்னாயினும் நின்ற சூத்திரத்திற் சொல்லை இடைநின்ற சூத்திரத்தினுங் கொணர்ந்து புணர்த்துரைத்தல்.

ஞாபகங் கூறலாவது - இரட்டுறமொழிந்து இரண்டு சொற்கும் பொருள் கோடல்.

உய்த்துக்கொண்டுணர்தலாவது ஒரு சூத்திரத்தான் ஓரிலக் கணம் ஓதியவழி அதற்குப் பொருந்தாமை யுளதாகத் தோன்றின் அதற்குப் பொருந்துமாறு விசாரித்துணர்தல்.

பனியென்னுஞ் சொல்லுக்கு அத்தும் இன்னுஞ் சாரியையா மென்றாராயினும் (உயிர்மயங்கியல் 39) அவற்றுள் ஏற்பதொன்றா தலின் இன்னீற்றதாயவாறு வருவன வுய்த்தணர்தலாம்.

இவை முப்பத்திரண்டுந் தந்திரவுத்தியாவன.

மெய்ப்பட நூலென்பது மேற்சொல்லப்பட்டவற்றொடு கூடப் பொருள்பட ஆராய்ந்து சொல்லிய வல்லாதனவாகிய பிறவவண் வ னுஞ் சொல்லிய நெறியினாற் சுருங்கவாராய்ந்து

மனத்தினானோர்ந்து குற்றமறத் தெரிந்து சொல்லிய வினத்தொடு பாகுபடுத்துரைத்தல் வேண்டுமது நுண்மைதகப் புலவர் கூறிய நூலினை யென்றவாறு.

பிறவாறு கொளப்படுவன மாட்டெறிதல், சொற்பொருள் விரித் தல், ஒன்றென முடித்தல், தன்னின முடித்தலென்பன. இவற்றுள் 'மாட்டெறித'லாவது முன்னொரு பொருள் கூறிப் பின் வருவதும் அதுபோலு மென்றல். அஃதாவது உகர விறுதி அகர வியற்றே (உயிர்மயங்கியல்52) என வரும்.

சொற்பொருள் விரித்தலாது - பதந்தொறும் பொருள் விரித்துக் கடாவும் விடையுங் கூறுதல்.

ஒன்றென முடித்தல் தன்னின முடித்தலென்பது சொல்லப்பட்ட வாற்றான் வரமுத்திரமேயாகத் தொகைப்பட முடியும் எனவுஞ் சில வாசிரியர்மதம் பலவுத்திக்கும் ஏற்கும் ஒரு சூத்திரம் இந்நூலகத்துள் .. பொருள் கொண்டாமாயினும் ஈண்டுரைத்த பாகுபாடெல்லாவற்றிற் கும் இந்நூலகத் துதாரணமே கண்டுகொள்ளலாம்.

இன்னுஞ் சொல்லியவல்ல பிறவென்றதனான் யாற்றொழுக்கு அரிமானோக்கு தவளைப்பாய்த்துள் பருந்து விழுக்காடென்னுஞ் சூத்திரக் கிடக்கையும் ஆதிவிளக்கு மத்திம தீபம் இறுதிவிளக்கு என்னும் பொருள் கோணிலையுங் கொள்ளப்படும். யாற்றொழுக்காவது கருதிய பொருளை வழுவாமற் சூத்திரம் ஒருங்குபடச் கிளத்தல்.

அரிமானோக்காவது முன்னும் பின்னுங் கூறுகின்ற விரண்டு சூத்திரத்தினையு மிடைநின்ற சூத்திரம் நோக்குதல், தவளைப்பாய்த் துளாவது இடையறுத்தோடுதல். பருந்து விழுக்காடாவது அவ் வதிகாரத்துட் பொருத்தமில்லாத பொருள் யாதானு மொருகாரணத் தான் இடை வருதல். ஆதிவிளக்காவது சூத்திரத்தினான் ஆதியின் அமைத்த பொருள் அந்தத்தளவு மோடுதல். மத்திம தீபமாவது இடைநின்ற பொருள் முன்னும் பின்னும் நோக்குதல். இறுதி விளக் காவது இறுதி நின்றபொருள் இடையு முதலு நோக்குதல்.

**மரபியல் முற்றிற்று.**

**வினாக்கள்:**

**கீழ்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.** 5×5= 25

1. உயிர்களின் அறிவு நிலையை வரிசைப்படுத்தி எழுதுக
2. நூலின் காணப்படும் பத்து குற்றங்களை விளக்குக.
3. உவமைக்குரிய நிலைக்களன்கள் யாவை?
4. உவமப்போலி ஐந்தென மொழிப – விளக்குக.
5. திருமண பொருத்தங்களாக தொல்காப்பியர் கூறுவனவற்றை விளக்குக.
6. நகை – அழுகைக்கு மெய்பாடுகளை விளக்குக.
7. ‘அசை’ குறித்து தொல்காப்பியர் கூறுவனவற்றை விளக்குக.
8. வஞ்சிப்பாவின் பொதுவிலக்கணத்தை எழுதுக.
9. தன் மேம்பாட்டுரை அணி சான்றுடன் விளக்குக.
10. உவமைப்போலி என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

**கீழ்காணும் வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.** 5×10= 50

1. நாலிரண்டாகும் பாலுமாருண்டே - விவரி
2. உவமை என்றால் என்ன? உவமையின் வகைகளை விவரிக்க.
3. ஆண்பாற் இளமைப்பெயர்களை மரபியல் வழி விளக்குக.
4. “உவம உருபுகள்” குறித்து கட்டுரை வரைக.
5. களவு மற்றும் கற்பு காலத்து மெய்பாடுகளை விவரிக்க
6. பெண்பாற் இளமைப் பெயர்களை மரபியல் வழி விளக்குக.
7. நோக்கு, தரவு, இடைநிலைப்பாட்டு, சுரிதகம், தொன்மை, விருந்து – விளக்குக.
8. அடி, அடி வகைகள் விளக்குக.
9. உள்ளுரை, இறைச்சி – குறிப்பு வரைக.
10. கலிப்பாவின் வகைகளை விவரி.

**முனைவர் த.க.ஜாஸ்மின் சுதா**

உதவிப் பேராசிரியர்
தமிழியல்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.